20th
MAY
2026

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 இதழ்: 109 பக்கங்கள் - 18 editor.uthayam@gmail.com

## உச்சம் தொடும் டொலர் விலை

இலங்கை மத்திய வங்கி இன்று (20) வெளியிட்டுள்ள புதிய நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 342 ரூபாயைக் கடந்து பாரிய உயர்வை உத்தியோகபூர்வமாகப் பதிவு செய்துள்ளது.

மத்திய வங்கியின் நாணய மாற்று

02ம் பக்கம்பார்க்க...

## கடைசி ஹஜ் குழு நாளை பயணம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இவ்வாண்டு (2026) புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக இலங்கையில் இருந்து செல்லும் கடைசி குழு எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை புனித மக்கா பயணமாகவுள்ளனர்.

03ம் பக்கம்பார்க்க...

## மீண்டும் போர் தொடுத்தால் நினைத்துப் பார்க்க முடியாத அதிர்ச்சிகள்

–அப்பாஸ் அரக்ஸி எச்சரிக்கை–

அமெரிக்கா மீண்டும் ஈரான் மீது போரை ஆரம்பித்தால் நினைத்தும் பார்க்க முடியாத அளவில்

03ம் பக்கம்பார்க்க...

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் சுரேஷ் சாலே பிரதான சூத்திரதாரி

### மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் திலீப் பீரிஸ் கோட்டை நீதவான் நீதிமன்றில் தெரிவித்த அதிர்ச்சித் தகவல்கள்



அஸாத் மௌலானாவின் வாக்குமூலத்தின் பிரகாரம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் மூல சூத்திதாரியாக சுரேஷ் சாலே செயற்பட்டதற்கான தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் திலீப் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சார்பில் முன்னிலையான போதே உயிர்த்த ஞாயிறு தொடர்பான அதிர்ச்சியூட்டும் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

02ம் பக்கம்பார்க்க...

## போதைப் பேரழிவைத் தோற்கடிக்க சட்டங்கள் மேலும் வலுவாக்கப்படும்

### சவால்களுக்கு மத்தியிலும் மக்கள் பணிகள்! அரச ஊழியர்களுக்கு ஜனவரியில் சம்பள உயர்வு!!



போதைப்பொருள் பேரழிவைத் தோற்கடிப்பதற்குத் தேவையான சட்டங்கள் மேலும் வலுப்படுத்தப்படும்!

– "முழுநாடுமே ஒன்றாக" விசேட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு கடந்த 06 மாதங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம்.

– அர்ப்பணிப்பு, தளராத முயற்சி மற்றும் தொடர்ச்சியான அவதானத்துடன் செயற்படுவதன் மூலம் இந்த பேரழிவைத் தோற்கடிக்க முடியும்.

– மட்டக்களப்பு மாவட்ட "முழுநாடுமே ஒன்றாக" நிகழ்வில்

03ம் பக்கம்பார்க்க...

## புடினுக்கு அதி உச்ச கௌரவம் வழங்கிய சீன ஜனாதிபதி



சீன தலைநகர் பெய்ஜிங்கில் உள்ள தியான்மென் சதுக்கத்தில், ரஷ்ய ஜனாதிபதி Vladimir Putin அவர்களை உத்தியோகபூர்வமாக வரவேற்கும் நிகழ்வின் போது 21 துப்பாக்கி மரியாதை முழங்கப்பட்டது.

பின்னர், Vladimir Putin கௌரவப்படையை பார்வையிட்டதுடன், உற்சாகமாக

02ம் பக்கம்பார்க்க...

## நாட்டு மக்களை அரசாங்கம் பொய்களால் ஏமாற்றி வருகிறது

### –சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு–



நாட்டின் பொருளாதாரம் குறித்து பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும் இந்த தருணத்தில், ஆளும் தரப்பில் முன்வைக்கப்படும் கருத்துக்கள் எனக்கு வியப்பைத் தருகின்றன. ரூ.9000 மின்சாரக் கட்டணத்தை ரூ.6000 ஆகவும், ரூ.3000 மின்சாரக் கட்டணத்தை ரூ.2000 ஆகவும், 33% ஆல் குறைப்போம் என தெரிவித்து,

75 இலட்சம் மின்சார

02ம் பக்கம்பார்க்க...

## ராஜபக்ஷவினர் பிள்ளையான் சந்திப்பு

### –அஸாத் மௌலானா வாக்குமூலம்–

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனை பிணையில் விடுவிக்க கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக ஆட்சியேற்ற பின்னர் விசேட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றதன் பின்னர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த

03ம் பக்கம்பார்க்க...

## சமீராவின் பாதுகாப்பினை உறுதி செய்ய அரசு ராஜதந்திர ரீதியில் நடவடிக்கை

### –வெளிவிகார பிரதியமைச்சர் உறுதி–



காசா பகுதியை நோக்கிய சர்வதேச மனிதாபிமான உதவிப் படகுப் பேரணியில்

03ம் பக்கம்பார்க்க...

## எபோலா தொற்று நோய் பரவல் இலங்கையில் 5 அவசர நடவடிக்கைகள்

எபோலா வைரஸ் பரவல் நிலைமையை உலக சுகாதார நிறுவனம்

02ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## நாட்டு..

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பாவனையாளர்களை பாதிப்புக்கு ஆளாக்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் செல்லும் கமிசன் தொகைகளை நீக்கி, வரிகளை நீக்கி, துறைமுகத்தில் இறக்குமதியாகும் அதே விலையில் எரிபொருட்களை மக்களுக்குப் பெற்றுத் தருவோம் என்று இந்த அரசாங்கம் தேர்தல் மேடைகள் எங்கும் உரத்து பிரஸ்தாபித்தது. இன்று நாட்டின் அனைத்து மக்களும் பொய்யால் ஏமாற்றப்பட்டுள்ளனர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இன்று (20) நடைபெற்ற சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில்,

வாழ்க்கைச் செலவு அதிகரித்து வாழ்க்கைச் சுமை அதிகரித்து காணப்படுகின்றன. ஓய்வூதியர்களுக்கும் சிரேஷ்ட பிரஜைகளுக்கும் அவர்களின் சேமிப்புகள் மீதான 15% வட்டி வருமானங்கள் கூட இன்று பறிக்கப்பட்டுள்ளன. 200 ஆடை தொழிற்சாலைகள் வேலைத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட MAS Lanka, Brandix மற்றும் Hirdaramani போன்ற தொழிற்சாலைகள் நாட்டில் மூடப்பட்டு வருகின்றன. இன்று இந்தத் தொழிற்சாலைகள் மூடப்பட்டு, இந்தியாவிலும் வங்களாதேசத்திலும் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நமது நாட்டில் வறுமை 30% முதல் 40% வரையில் அதிகரித்து காணப்படுகின்றன.

வறுமை ஒழிப்புக்கு அரசாங்கத்திடம் எந்த தெளிவான வேலைத்திட்டமும் இல்லை. உணவு பாதுகாப்பின்மை, மருந்து தட்டுப்பாடுகள் என்பன நிலவுகின்றன. மருத்துவமனைகளில் உபகரணங்களுக்கு காணப்படும் தட்டுப்பாடுகளால் அறுவைசிகிச்சைகளை செய்துகொள்வதற்கு வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை இன்று மக்களுக்கு ஏற்பட்டுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

12 இலட்சத்திற்கு விட்ஸ் ரக காரைப் பெற்றுத் தருவோம் எனக் கூறிய அமைச்சர், கல்வி சீர்திருத்தங்களுக்கு எதிர்க்கட்சி எதிர்ப்பு தெரிவித்ததாக குற்றம்சாட்டினார். கல்விச் சீர்திருத்தங்களுக்கு நாம் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. கல்வியை ஆபாசமயப்படுத்துவதையே எதிர்த்தோம்.

கல்விச் சீர்திருத்தங்களை முன்னெடுப்போம் எனக் கூறி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கத்தால், பாடசாலைகளுக்குத் தேவையான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களைக் கூட பெற்றுக் கொடுப்பதற்கோ அல்லது தேவையான பயிற்சிகளையேனும் பெற்றுக் கொடுப்பதற்கு கூட முடியாமல் தானே போயுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## புடினுக்கு..

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

வரவேற்ற படை அணிவகுப்பை கடந்து, சீன ஜனாதிபதி ஒஹ துனைபெ அவர்களுடன் மக்கள் மஹா மண்டபத்தில் இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார்.

இந்த விஜயம், Vladimir Putin அவர்களின் சீனாவுக்கான 25ஆவது பயணமாகும். அரசியல், பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இருநாடுகளும் ஒத்துழைப்பை விரிவுபடுத்தி வரும் நிலையில், மொஸ்கோ மற்றும் பெய்ஜிங் இடையிலான மூலோபாய உறவு மேலும் வலுப்பெற்று வருவதை இது வெளிப்படுத்துகிறது.

## உயிர்த்த..

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகர தலைமையிலான குழுவினர் பிரான்சுக்குச் சென்று, அங்குள்ள இலங்கைத் தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து அசாத் மௌலானாவின் வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளதாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார்.

அசாத் மௌலானாவின் வாக்குமூலத்தை மேற்கோள் காட்டி திலீப் பீரிஸ் நீதிமன்றில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னால் சுரேஷ் சாலே "மூல சூத்திரதாரியாக" செயற்பட்டுள்ளார் என்றும், ஒரு குறிப்பிட்ட அரசியல் இலக்கை அடைவதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், அதுவரை இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தலைவராகப் பணியாற்றிய சுரேஷ் சாலே, புலனாய்வுத் தகவல்கள் ஏனைய நிறுவனங்களுக்குச் சென்றடைவதைத் தடுக்கும் நோக்கில் அரச புலனாய்வுச் சேவையின் (SIS) தலைவராக நியமிக்கப்பட்டார் என்றும் அரச தரப்பு மேலும் குற்றம் சாட்டியுள்ளது.

அத்துடன், 2017 மார்ச் 10 அன்று அலியார் சந்தியில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சஹ்ரான் ஹாஷிமின் சகோதரரான சைனி உள்ளிட்ட நபர்களுக்கு, இராணுவப் புலனாய்வுப் பிரிவு மற்றும் பிள்ளையான் ஆகியோரிடமிருந்து பிணைக்கான நிதி உதவி கிடைத்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்திற்குத் அறிவித்துள்ளது.

## சமீராவின்..

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பங்கேற்றிருந்த சமீரா மெஹுரூப்தீன் என்ற இலங்கை பெண் இஸ்ரேலிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவரது பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்வதற்கான அனைத்து ராஜதந்திர நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றிய வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா இது தொடர்பான விபரங்களை வழங்கினார்.

"காசா நோக்கிச் சென்ற படகுப் பேரணியில் பயணித்த இலங்கை பிரஜையான சமீரா மெஹுரூப்தீன் இஸ்ரேலிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படும் விவகாரத்தை வெளிவிவகார அமைச்சு உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. எமக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி, அந்தப் படகுப் பேரணி இஸ்ரேலிய கடற்படையினரால் இடைமறிக்கப்பட்டு, அதிலிருந்த பல நபர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, டெல் அவிவ் நகரில் உள்ள இலங்கைத் தூதரகம் ஊடாக இஸ்ரேலிய அதிகாரிகளிடம் சமீராவை நேரில் சந்திப்பதற்கான தூதரக அணுகலை உத்தியோகபூர்வமாகக் கோரியுள்ளோம். அவரது தற்போதைய நிலைமையை உறுதிப்படுத்தவும், பாதுகாப்பை உறுதி செய்யவும், அவர் கைது செய்யப்பட்டுள்ளமைக்கான சட்டப்பூர்வ மற்றும் நடைமுறை அம்சங்களைச் சரிபார்க்கவுமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது." என தெரிவித்தார்.

"இந்த படகுப் பேரணி இடைமறிக்கப்பட்டமை குறித்து தற்போதைய கட்டத்தில் அரசாங்கம் எந்தவொரு அவசர முடிவுகளையும் எடுக்க விரும்பவில்லை. எனினும், எத்தகைய சூழ்நிலையிலும் சம்பந்தப்பட்ட இலங்கை பிரஜையின் பாதுகாப்பு, நலன், சட்டப்பூர்வ உரிமைகள் மற்றும் கண்ணியம் ஆகியவை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எமது நிலைப்பாடு மிகவும் தெளிவாக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

## எபோலா..

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

(WHO) சர்வதேச பொதுச் சுகாதார அவசரநிலையாகப் பிரகடனப்படுத்தியுள்ளதை அடுத்து, அதற்கு இணங்க இலங்கையிலும் 5 முக்கிய அவசர நடவடிக்கைகளை எடுப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன இன்று (2026.05.20) விடுத்துள்ள விசேட அறிக்கை ஒன்றில் இந்த விபரங்களை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையின்படி, காங்கோ குடியரசு மற்றும் உகண்டா ஆகிய நாடுகளில் தற்போது எபோலா வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ளதுடன், இதனை உலக சுகாதார நிறுவனம் உலகளாவிய பொதுச் சுகாதார அவசரநிலையாக அறிவித்துள்ளதாக வைத்தியர் அசேல குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தொற்று இலங்கைக்குள் பரவாமல் தடுப்பதற்காக, உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரைகளுக்கு அமைய பின்வரும் 5 அம்சக் கூட்டு நடவடிக்கைகளை எடுக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது:

கட்டுநாயக்க உள்ளிட்ட சர்வதேச விமான நிலையங்களின் ஊடாக நாட்டிற்குள் வருவோர் மீதான கண்காணிப்பு மற்றும் பரிசோதனைகளை பலப்படுத்துதல்.

எபோலா தொற்றுக்குள்ளான சந்தேகத்தின் பேரில் நோயாளி எவரேனும் அடையாளம் காணப்பட்டால், அவருக்கு சிகிச்சையளிப்பதற்காக தேசிய தொற்றுநோயியல் நிறுவனம் (IDH) முழுமையாகத் தயார்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றுநோயைக் கண்டறிவதற்கான ஆய்வகப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

நாட்டிற்குள்ளான ஒட்டுமொத்த தொற்றுநோய் கண்காணிப்பு கட்டமைப்பை வலுப்படுத்துவதுடன், உலகளாவிய எபோலா பரவல் நிலவரங்களை உன்னிப்பாக அவதானித்தல்.

சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு, உலக சுகாதார நிறுவனத்துடன் (WHO) இணைந்து தொடர்ச்சியான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

இருப்பினும், உலக சுகாதார நிறுவனத்தின் அளவுகோல்களின்படி, எபோலா வைரஸ் அச்சுறுத்தல் தொடர்பில் இலங்கை மிகவும் 'குறைந்த ஆபத்துள்ள' (Low Risk) நாடாகவே பட்டியலிடப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, இந்த நிலைமை குறித்து பொதுமக்கள் எவரும் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும், இந்தத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் தடுப்பதற்கும் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் சுகாதார அமைச்சு ஏற்கனவே எடுத்துள்ளதாகவும் பணிப்பாளர் நாயகம் மேலும் வலியுறுத்தியுள்ளார்.



## ராஜபக்ஸவினர்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

*ராஜபக்ச, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச மற்றும் நாமல் ராஜபக்ச ஆகியோர் மட்டக்களப்பு சிறைக்குச் சென்று பிள்ளையானை சந்தித்துள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.*

*கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் ஒரு வாரத்திற்குள் பிள்ளையானுக்கு பிணை வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதாக இதன்போது அவர்கள் பிள்ளையானிடம் உறுதியளித்துள்ளனர்.*

*இந்த தகவல், பிள்ளையானின் முன்னாள் செயலாளர் அசாத் மௌலானா வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் இன்று (20) முன்வைக்கப்பட்டுள்ளது.*

*பிரான்சில் வசித்து வரும் அசாத் மௌலானாவிடம், அங்குள்ள இலங்கைத் தூதரகத்தில் வைத்து விசேட புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் வாக்குமூலமொன்றை பதிவு செய்துள்ளனர்.*

*இதனடிப்படையிலேயே குறித்த விவகாரம் தொடர்பான ஆவணங்கள் இன்று நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.*

## கடைசி...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

*இக் குழுவில் தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் அஷ்ஷெய்க் முனீர் முழப்பர், முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ், அரச ஹஜ் குழுவின் தலைவர் றியாஸ் மிஹ்லார் மற்றும் ஹஜ் குழு உறுப்பினர்கள் உட்பட இம்முறை ஹஜ் கடமையை நிறைவேற்ற செல்கின்ற யாத்திரியர்களும் இதில் பயணமாகவுள்ளனர்.*

*இவ்வாண்டு இலங்கையிலிருந்து மொத்தமாக 3,500 யாத்திரிகர்கள் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

*அதேநேரம் சவூதி அரேபிய அரசாங்கம் 2026 ஆம் ஆண்டிற்கான ஹஜ்ஜ/க்குரிய பிரமாண்டமான முன்னேற்பாடுகள் மற்றும் சேவைகளையும் ஏற்பாடு செய்துள்ளது.*

*அத்துடன் அல்லாஹ்வின் விருந்தினர்களாக வருகை தரும் ஹாஜிமார்களின் பாதுகாப்பும் நலனும் உறுதிசெய்யப்பட வேண்டும் என்ற நோக்கில், சவூதி அரேபிய அரசு இந்த ஆண்டு ஹஜ்ஜிற்காக மிகப்பெரிய மருத்துவ மற்றும் அவசரகால முன்னேற்பாடுகளை மேற்கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.*

## உச்சம்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

*விகிதங்களின்படி, இன்றைய தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை (Buying Rate) 332.08 ரூபாயாகவும், அதன் விற்பனை விலை (Selling Rate) 342.70 ரூபாயாகவும் பதிவாகியுள்ளது.*

*ஒரே நாளில் ஏற்பட்ட பாரிய மாற்றம் நேற்று (19) செவ்வாய்க்கிழமை அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 328.23 ரூபாயாகவும், விற்பனை விலை 338.07 ரூபாயாகவும் காணப்பட்டது.*

*இதற்கமைய, நேற்றைய நாளுடன் ஒப்பிடுகையில் ஒரே நாளில் டொலரின் மதிப்பு மிகக் கடுமையான உயர்வைச் சந்தித்துள்ளது.*

*இதேவேளை, நாட்டின் அரச வங்கி ஒன்றில் இன்றைய தினம் அமெரிக்க டொலரின் விற்பனை விலை ரூ. 345.20 ஆகவும், கொள்வனவு விலையை ரூ. 335.65 ஆகவும் அதிகரித்துக் காணப்பட்டது.*

## மீண்டும்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

*அதிர்ச்சிகளும் ஆச்சரியங்களும் காத்திருக்கின்றன ஈரானிய வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அரக்ஸி எச்சரிக்கை விடுத்துள்ளார்.*

*கடந்த காலப் போர்களில் நாம் நிறையப் பாடங்களைக் கற்றுள்ளோம். அதனைப் பாடமாகக் கொண்டு மிகவும் கச்சிதமாக திட்டமிட்ட அடிப்படையில் அமெரிக்க இஸ்ரேலுக்கெதிரான தாக்குதல்கள் முன்னெடுக்கப்படுமென்றும் அது அவர்கள் நினைத்துக் கூட பார்க்க முடியாத அளவில் இருக்குமென்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.*

## போதைப்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஜனாதிபதி வலியுறுத்தல்,

போதைப்பொருள் வர்த்தகர்களுக்குக் கடந்த காலத்தில் இருந்த அரசியல் பாதுகாப்பு தற்போது முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளதுடன், போதைப்பொருளுக்கு எதிரான விசாரணைகளின் போது எந்தவொரு அதிகாரிக்கும் எவ்வித அழுத்தங்களும் பிரயோகிக்கப்பட மாட்டாது என்றும், தொடர்புடைய அனைத்து நிறுவனங்களும் தத்தமது எல்லைகளுக்குள் நின்று தமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளைச் சரியாக நிறைவேற்றும் எனத் தாம் நம்புவதாகவும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

இதன்போது தற்போதைய சட்டக் கட்டமைப்பு போதுமானதாக இல்லையெனில், புதிய சட்டங்களை இயற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அரசாங்கம், மத ஸ்தாபனங்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் அர்ப்பணிப்புடனும், தளராத முயற்சியுடனும், தொடர்ச்சியான அவதானத்துடனும் செயற்படுவதன் மூலம் இந்த ஆபத்தைத் தோற்கடிக்க முடியும் என்றும், அதற்காக அனைவரையும் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுப்பதாகவும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இன்று (20) பிற்பகல் நடைபெற்ற, போதைப்பொருள் பேரழிவுக்கு எதிரான "முழு நாடுமே ஒன்றாக" மட்டக்களப்பு மாவட்ட விசேட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க,

"முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டு கடந்த 6 மாத காலத்திற்குள் போதைப்பொருளுக்கு எதிரான சோதனைகள் மற்றும் கைதுகளில் விசேட முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளுக்காகப் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் வழங்கிய தனித்துவமான பங்களிப்பையும் ஜனாதிபதி இதன்போது பாராட்டினார்.

இங்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஆற்றிய முழுமையான உரை வருமாறு:

இன்று நாம் அனைவரும் ஒன்றிணைந்திருப்பது நமது நாட்டின் மிக முக்கியமான சவாலொன்றை வென்றெடுக்கும் நோக்கிலாகும். நாம் ஓர் அரசாங்கமென்ற வகையில் பல பிரதான சவால்கள் குறித்து அவதானம் செலுத்தி, இந்த நாட்டை கட்டியெழுப்புவது தொடர்பான நிலையான உறுதியுடன் செயலாற்றி வருகிறோம்.

பலமான பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்பும் சவாலே நமக்கு முன்னாலுள்ள முதலாவது சவாலாகும். நமது பொருளாதாரத்தைப் பாதிக்கும் சில துறைகளில் கடந்த காலத்தில் நாம் சவால்களை எதிர்கொண்டோம். பல்வேறு நாடுகள் விதித்த வரிக் கொள்கைகள் காரணமாக நமது பொருளாதாரத்திற்குச் சில தாக்கங்கள் ஏற்பட்டன. "டித்வா" சூறாவளியானது இலங்கையின் அண்மைய வரலாற்றில் மிகப்பெரிய பொருளாதாரப் பாதிப்பை ஏற்படுத்திய பேரழிவாக மாறியிருந்தது. அது நமது உள்நாட்டுப் பிரச்சினை என்பதால், அதற்கு நம்மால் வலுவாக முகம் கொடுக்க முடிந்தது.

அண்மைக்காலமாக மத்திய கிழக்கு பிராந்தியத்தை மையமாகக் கொண்டு போர்ச் சூழல் ஏற்பட்டுள்ளது. அது உலகிலுள்ள வளர்ந்த நாடுகள், குறைந்த பொருளாதாரத் திறனுள்ள நாடுகள் என்ற பாகுபாடின்றி அனைவரையும் பொருளாதார சவாலுக்கு உள்ளாக்கியுள்ளது.

பொருளாதார ரீதியாக நாம் எதிர்கொள்ளும் சவால்கள் பிரதானமாக இரண்டு பகுதிகளைக் கொண்டவை. முதலாவது, திறைசேரிக்கு தேவையான ரூபாயை ஈட்டிக்கொள்வதாகும். அதனை நாம் வலுவாக நிறைவேற்றியுள்ளோம். இலங்கை வரலாற்றில் அதிகப்படியான நிதியைக் கொண்ட திறைசேரிக் கணக்கொன்று தற்போது நம்மிடம் உள்ளது. இதனால்தான் "டித்வா" சூறாவளிப் பாதிப்புகளுக்கு முகம் கொடுப்பதற்காக 50,000 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்ய நமக்கு முடிந்தது.

அதேபோல் திறைசேரியில் போதியளவு நிதி இருந்தமையினால், மத்திய கிழக்கின் போர்ச் சூழலால் ஏற்பட்டுள்ள எரிபொருள் விலை உயர்வு மற்றும் மின்சாரக் கட்டண அதிகரிப்பு ஆகியவற்றில் ஓரளவுக்குத் தலையீடு செய்ய நமக்கு முடிந்தது. இதற்காகவும் நாம் 10,000 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளோம். கடந்த ஏப்ரல் மாதத்தில் எரிபொருள் நிவாரணமாக வழங்குவதற்கு 2000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. எதிர்வரும் இரண்டு மாதங்களுக்கும் எரிபொருள் நிவாரணத்திற்காக தலா 2,000 கோடி ரூபாய் வீதம் வழங்கப்படும். இன்றும் நீங்கள் பயன்படுத்தும் ஒவ்வொரு லீட்டர் எரிபொருளுக்கும் அரசாங்கம் 100 ரூபாய் நிவாரணத்தை வழங்குகிறது. திறைசேரியிடம் நிதி உள்ளமையினாலேயே இது சாத்தியமானது.

அத்துடன், எரிபொருள் விலை உயர்வு காரணமாக மின்சாரக் கட்டணத்தை ஓரளவுக்கு அதிகரிக்க வேண்டியேற்பட்டது. எனினும், 95மூ மின் நுகர்வோருக்கு மின்சாரக் கட்டணம் அதிகரிக்காது. அரசாங்கம் அதனை நிவாரணமாக வழங்கத் தீர்மானித்தது. எனவே, கடந்த கட்டண அதிகரிப்பின் போது 5மூ மின் நுகர்வோரின் கட்டணமே அதிகரித்தது. இந்த நிவாரணத்தை நாம் செப்டம்பர் மாதம் வரை வழங்குவோம். இதற்காக அரசாங்கம் 1500 கோடி ரூபாய் செலவை ஏற்கிறது. எனவே, வலுவான பொருளாதார நிர்வாகத்தின் விளைவாக இவ்வாறானதொரு பேரழிவுக்கு முகம் கொடுக்கக்கூடிய ரூபாய் தொகை நமது திறைசேரியிடம் உள்ளது.

இருப்பினும், தற்போது டொலர் தொடர்பான நெருக்கடியொன்றை நாம் எதிர்கொண்டுள்ளோம். குறிப்பாக ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடுகையில் டொலர் பலமடைந்துள்ளது. அது நமது ரூபாயில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நமது பிரதான வருமான வழிகளில் ஒன்று டொலர்களை ஈட்டித்தரும் சுற்றுலாத்துறையாகும். கடந்த ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடுகையில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 29மூ வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அது நமது டொலரில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. உலகில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக நமது ஏற்றுமதிகளுக்கான தேவையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் டொலர்களிலும் தாக்கம் ஏற்பட்டுள்ளது. மறுபுறம், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் அனுப்பும் பணப் பரிமாற்றங்களிலும் இந்த மாதத்தில் சரிவு ஏற்பட்டுள்ளது.

அதேபோல், டொலரின் விலை உயர்வினால் எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான மாதாந்த செலவினம் அதிகரித்துள்ளது. பெப்ரவரி மாதத்தில் எரிபொருள் இறக்குமதிக்காக நமக்கு 98 மில்லியன் டொலர்களே செலவானது. மார்ச் மாதத்தில் அது 216 மில்லியன் டொலர்களாகவும், ஏப்ரல் மாதத்தில் 368 மில்லியன் டொலர்களாகவும் அதிகரித்தது. இந்த மே மாதத்தில் அது 522 மில்லியன் டொலர்களாக உயர்ந்துள்ளது. ஒரு மாதத்திற்கான எரிபொருள் இறக்குமதிச் செலவு 500 மில்லியன் டொலர் என்ற எல்லையைத் தாண்டியுள்ளது. இது நமது ரூபாய்க்கு அழுத்தத்தையும் டொலருக்கான தேவையையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே, இந்த நெருக்கடிக்கு முகம் கொடுப்பதற்காகப் பல நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

நாம் இந்த சந்தர்ப்பத்தில் பொருளாதாரத்தை நிர்வகிப்பது சர்வதேச நாணய நிதியத்துடனான நீடிக்கப்பட்ட கடன் திட்டத்துடனாகும். எனவே நாம் எவ்வாறான தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்பது குறித்து அவர்களுடன் கலந்துரையாடி வருகிறோம். அதேபோல் நமது முன்மொழிவுகளையும் சமர்ப்பித்துள்ளோம். டொலருக்காக தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இந்த அழுத்தத்தை நாம் கட்டுப்படுத்த வேண்டும். அதற்காக நாம் எரிபொருள் பயன்பாட்டை மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் பயன்பாடு குறித்து சற்றே அவதானம் செலுத்த வேண்டும். இறக்குமதிச் செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டும். நாட்டிலிருந்து வெளியேறும் டொலர்களின் அளவைக் குறைப்பதற்காகத் தனிநபர்களாக நாம் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பது குறித்துச் சிந்திக்குமாறு நான் அனைத்துப் பிரஜைகளிடமும் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தற்காலிக நெருக்கடிக்கு நாம் வலுவாக முகம் கொடுப்போம். கடந்த காலத்தைப் போன்றதொரு அழிவுகரமான பொருளாதார நிலைமை நமது நாட்டில் ஏற்படுவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். இது நாம் பொருளாதார ரீதியாக முன்னோக்கிச் செல்ல வேண்டிய பயணமாகும்.

அதேபோல் நமக்கு ஒரு வலுவான அரச சேவை தேவைப்படுகிறது. நமது பொலிஸார், முப்படைகள், அரசாங்க அதிபர் முதற்கொண்டு கீழ்மட்டம் வரை பலமான அரச சேவை அவசியமாகும். நாம் அதற்காகச் செயற்பட்டு வருகிறோம். அரச சேவையின் வெற்றிடங்களை நிரப்பி, அதற்கான உத்தியோகபூர்வ ஆட்சேர்ப்புகளை மேற்கொண்டு வருகிறோம். நாம் மூன்று

கட்டங்களாகச் சம்பள உயர்வுகளை வழங்கியுள்ளோம். அதற்கமைய, வரும் ஜனவரி மாதத்தில் சம்பள உயர்வொன்று நடைமுறைக்கு வரும். அதுதவிர இன்னும் பெரியளவில் தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்சினைகள் நம்முன்னே உள்ளன.

இந்த தேசிய செயற்பாட்டை நாம் கடந்த ஒக்டோபர் 30ஆம் திகதி தொடங்கினோம். தற்போது 06 மாதங்கள் கடந்துவிட்டன. இந்த 06 மாத காலப்பகுதியில், 21 வயதுக்கும் குறைந்த 5,122 ஆண் பிள்ளைகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 128 பெண் பிள்ளைகள் கைது செய்யப்பட்டுள்ளனர். நமது முப்படையினரும் பொலிசாரும் மிகவும் கௌரவமானதொரு சேவையை ஆற்றி வருகின்றனர். அந்த அதிகாரிகளில் சிலரும்கூட போதைப்பொருள் காரணமாக கைது செய்யப்பட்டுள்ளனர். அரச அதிகாரிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். பொறுப்புவாய்ந்த, கௌரவமான எந்தவொரு இடமும் எஞ்சியிராத அளவுக்கு இப்பேரழிவு பரவியுள்ளது.

இந்தப் பேரழிவு ஒரு மிகப்பெரிய பேரழிவாக வளர்வதற்கு 4 முக்கிய காரணங்கள் செல்வாக்கு செலுத்தின. முதலாவது, அரசியல் பாதுகாப்பு. அரசியல் பாதுகாப்பிற்கு மத்தியில் இந்த போதைப்பொருள் வியாபாரிகளும் போதைப்பொருள் வியாபாரமும் வளர்ச்சியடைந்தன. கடந்த ஜனாதிபதித் தேர்தலில், இந்த நாட்டு மக்கள் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மக்கள் ஆணையை வழங்கி எங்களிடம் அதிகாரத்தை ஒப்படைத்தார்கள். நான் உங்களுக்கு ஓர் உறுதியை அளிக்கிறேன். போதைப்பொருள் வியாபாரிகளுக்கு இருந்த அரசியல் பாதுகாப்பை தற்போது நாம் முழுமையாக முடிவுக்குக் கொண்டுவந்துள்ளோம். எந்தவொரு அதிகாரிக்கும் எவ்விதப் அழுத்தமும் இப்போது இல்லை.

உங்களது பதவியின் கண்ணியத்தையும், உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பை நிறைவேற்றுவதற்குக் தேவையான ஆதரவையும் நாம் வழங்குவோம். அதன் முடிவுகள் தற்போது கிடைக்கத் தொடங்கியுள்ளன.

கடந்த காலத்தில் நமது கடற்படையினர் பெருமளவிலான போதைப்பொருட்களை கைது செய்தார்கள். பொலிஸார் இரவும் பகலும் பாராது சுற்றிவளைப்புகளை மேற்கொண்டனர். அதன் விளைவாக, கடந்த 06 மாதங்களுக்குள் 1943 கிலோகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது. அதேபோல், 2008 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது. 40,755 கிலோகிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஒரு பாரிய பேரழிவு நமக்கு முன்னால் உள்ளது. அதனைத் தோற்கடிப்பதற்கான முதலாவது படிநிலை, போதைப்பொருள் வியாபாரிகளுக்கு வழங்கப்படும் அரசியல் பாதுகாப்பை நீக்குவதாகும். அதனை நாம் செய்திருக்கிறோம். அதேபோன்று, இந்தப்பணிக்காக அர்ப்பணிப்புடன் செயல்படும் குறிப்பாக முப்படைகள் மற்றும் பொலிஸார் உட்பட அனைவருக்கும் உரிய அங்கீகாரம் வழங்கப்படும். இதனை ஒடுக்குவதற்காக இருக்கின்ற அனைத்து பொறிமுறைகளையும் முப்படைகள், பொலிஸ், சுங்கத்துறை, குடிவரவு குடியகல்வு திணைக்களம் போன்ற அனைத்து நிறுவனங்களையும் நாம் ஒரு கூட்டுச் செயல்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளோம். அது ஒரு முக்கியமான படிநிலையாகும். கைது நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்த பேரழிவோடு சேர்ந்து உருவான பாதாள உலகக் குற்றக் கும்பல்கள் இருக்கின்றன. கடந்த காலத்தில் குறிப்பிட்ட அளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன. அவற்றில் பெரும்பாலானவை போதைப்பொருள் வர்த்தகத்துடன் ஏற்பட்ட மோதல்களாகும். அதற்படி, ஆயுத மோதல்கள் ஏற்பட்டுள்ளன. இந்தப் பாதாள உலகத்தை நாம் முற்றாக ஒழிக்க வேண்டும். நாம் ஏற்கனவே வெளிநாடுகளில் தங்கியிருந்த 28 பாதாள உலகக் குழு உறுப்பினர்களைக் கைது செய்து இலங்கைக்குக் கொண்டு வந்துள்ளோம். அவர்கள் வெவ்வேறு புனைபெயர்களில் உருவான பாதாள உலகத் தலைவர்கள் ஆவர். மேலும் ஒரு தொகையினரை நாம் மிக விரைவில் கைது செய்து இலங்கைக்குக் கொண்டு வருவோம். சிலர் சிறைச்சாலைக்கு உள்ளிருந்தே தங்களது செயற்பாடுகளை முன்னெடுத்தனர். நாம் இந்தக் குழுக்களை ஒரு விசேட முகாமிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். பொதுவான சிறைச்சாலைகளுக்குப் பதிலாக, இவர்களுக்காகவே விசேட சிறைச்சாலைகளை நாம் உருவாக்கியுள்ளோம். இந்தப் பேரழிவைத் தோற்கடிக்க வேண்டுமாயின், பாதாள உலகத்தை முடக்க வேண்டும்.

பொலிஸ் மற்றும் முப்படைகளில் பதவிகளைக் கொண்டு, அதனுடன் தொடர்புடைய பொறுப்புகள் மற்றும் சட்டங்களின் மூலம் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உங்களால், இந்த வெவ்வேறு புனைபெயர்களில் உருவாகியிருக்கும் பாதாள உலகத்தை அடக்க முடியாதா? அதற்காக ஒன்றிணையுமாறு நான் உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

இந்த 06 மாத காலப்பகுதிக்குள் 83 டி-56 ரகத் துப்பாக்கிகள், 118 பிஸ்டல்கள், 75 ரிவோல்வர்கள் மற்றும் கைக்குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. பாதாள உலகத்தினருக்குச் சொந்தமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த போதைப்பொருள் வியாபாரத்தை ஒடுக்க வேண்டுமாயின், பாதாள உலகத்தை ஒடுக்க வேண்டும்.

அதேபோல், ஒவ்வொருவருக்கும் சட்டத்தின் ஆட்சியின் ஆதிக்கம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். என்னில் இருந்து பிரதேச சபை உறுப்பினர் வரையிலும், ஜனாதிபதி செயலாளரிலிருந்து கிராம உத்தியோகத்தர் வரையிலும், நகரத்திலிருந்து கிராமம் வரையிலும் இருக்கின்ற ஒவ்வொருவரும் சட்டத்தின் முன்னிலையில் முற்றிலும் சமமானவர்களாவர். எவரும் சட்டத்திற்கு மேல் இல்லாதவொரு நாட்டை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

சிலரால் அவ்வாறானதொரு நாடு உருவாவதைத் தாங்கிக்கொள்ள முடியாது. அத்தகையதொரு நாட்டில் வாழ்ந்து அவர்களுக்குப் பழக்கமில்லை. சிலர் தங்களைச் சட்டத்திற்கு மேலானவர்கள் என்று நினைத்துக் கொள்கிறார்கள். அப்படி நினைத்த ஒரு யுகம் இருந்தது. நாம் அந்த யுகத்தை முடிவுக்குக் கொண்டுவந்தோம். அவர்கள் கடந்த காலத்தில் எவ்வளவுதான் வரப்பிரசாதங்களையும் சலுகைகளையும் அனுபவித்திருந்தாலும், குடும்பப் பின்னணி என்னவாக இருந்தாலும், அவை எதுவும் சட்டத்திற்குப் பொருந்தாது. அனைவரும் சட்டத்தின் முன்னிலையில் சமமானவர்கள். போதைப்பொருள் ஒழிப்பில் இது மிகவும் முக்கியமானது. ஆனால், சட்டத்திற்கு மேலிருந்தவர்களிடம் சட்டம் நெருங்கும்போது அவர்கள் பதற்றமடைகிறார்கள். சட்டத்திற்கு மதிப்பளித்து அவர்களுக்குப் பழக்கமில்லை.

எங்களுக்கு எந்த குழப்பமும் இல்லை. யார் மீதும் வெறுப்போ, குரோதமோ இல்லை. இந்த மக்கள் எங்களிடம் ஒப்படைத்த ஒரு பொறுப்பு இருக்கிறது. ஒவ்வொருவரும் சட்டத்தின் எல்லைக்கு உட்பட்டு வாழும் ஒரு சமூகத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

எனவே, பதற்றமடைவதாலோ, கூச்சலிடுவதாலோ, சட்டத்தை நிலைநாட்டும்போது சிலரை சட்டத்தை அமுலாக்கும் நிறுவனங்களுக்கு முன்னால் அழைத்து வருவதாலோ, சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை முடக்க முடியாது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். வீணாக பேருந்துகளில் ஆட்களை ஏற்றி வருகிறார்கள். அவற்றுக்காகச் சட்டம் வளைந்து கொடுக்காது. சட்டம் அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்படும். இன்னும் பல விடயங்கள் நடைபெறும். குற்றப் புலனாய்வுத் திணைக்களம், கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு, நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவு, போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு ஆகிய அனைத்தும் இந்த விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன. சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர், சிலரைக் கைது செய்வதற்கான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. சிலருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அந்த வழக்குகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தேவையான அதிகாரம் அந்த அதிகார வரம்பிற்குள் நிலைநாட்டப்படும். உங்களுடைய அந்த விசாரணைகளில் யாரும் தலையிட மாட்டார்கள். ஆனால், நிறுவனங்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பைச் சரியாக நிறைவேற்றும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. நான் குறிப்பாக முப்படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்குக் கூறுகிறேன், நீங்கள் உங்கள் முதுகெலும்பை நிமிர்த்தி வேலை செய்யக்கூடிய ஒரு சூழலை நாங்கள் உருவாக்கியுள்ளோம். உங்களுக்கு இருக்கும் சட்டக் கட்டமைப்புக்கு மட்டுமே நீங்கள் கட்டுப்படுவீர்கள்.

ஜனாதிபதி என்ற ரீதியில் எனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பையும் அதன் எல்லையையும் நான் அறிவேன். நான் எனது எல்லையை மீறிச் செல்லமாட்டேன். சட்டதிட்டங்களின்படி உங்களது அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான எல்லைகளையும் நீங்கள் அடையாளம் கண்டுள்ளீர்கள். நீங்கள் அந்த எல்லைகளுக்குள் நின்று செயலாற்றுங்கள். சில பணிகளுக்கு அந்த எல்லைகள் குறுகியதாக இருந்தால், நாம் சட்டத்தின் மூலம் அந்த எல்லையை அதிகரித்துத் தருவோம். ஆயுதம் ஏந்திய குற்றக் கும்பல்களை ஒடுக்குவதற்காக விசேட சட்டவரைவு ஒன்றை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற நாம் எதிர்பார்க்கிறோம். உங்களுக்கு சட்டம் போதாது என்றால், நாம் சட்டத்தை பலப்படுத்தித் தருவோம். - என்றார்.

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2026 MAY 20 - WEDNESDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# இறை நெருக்கத்தை அதிகரிக்கும் பருவமாக துல்ஹஜ் பத்து நாட்கள் அமையட்டும்

இஸ்லாமிய மாதங்களில் மிகப் புனிதமான நாட்களில் ஒன்றாக துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்கள் கருதப்படுகின்றன. மனிதன் தனது வாழ்வை சீரமைத்துக் கொள்ளவும், அல்லாஹ்வின் நெருக்கத்தை அடையவும், பாவமன்னிப்பைப் பெறவும் இந்த நாட்கள் ஒரு அரிய வாய்ப்பாகும். உலக வாழ்க்கையின் அலைபாய்ச்சலுக்குள் மூழ்கி இருக்கும் மனிதனை மீண்டும் இறைநினைவின் பக்கம் திருப்பும் ஆன்மிக பருவமாக இந்நாட்கள் விளங்குகின்றன.

அல்லாஹ் திருக்குர்ஆனில், "விடியற்காலத்தின் மீது சத்தியமாகவும், பத்து இரவுகளின் மீது சத்தியமாகவும்" என்று கூறுகின்றான். பல அறிஞர்கள் இங்கு குறிப்பிடப்படும் "பத்து இரவுகள்" என்பது துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களாகும்என்றுவிளக்குகின்றனர். மேலும், நபிகள்நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "இந்த பத்து நாட்களில் செய்யப்படும் நற்செயல்களை விட அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமான செயல்கள் வேறு எதுவுமில்லை" என்று அறிவுறுத்தியுள்ளனர். இதுவே இந்த நாட்களின் மகத்துவத்தை தெளிவாக எடுத்துரைக்கிறது.

இந்நாட்கள் வெறும் வழக்கமான நாட்களல்ல மாறாக, வாழ்க்கையை மாற்றக்கூடிய ஆன்மிக சந்தர்ப்பங்களாகும். தொழுகைகளை முறையாக நிறைவேற்றுதல், திருக்குர்ஆன் ஓதுதல், திக்ர் மற்றும் துஆக்களில் ஈடுபடுதல், நோன்பு நோற்றல், தர்மம் செய்தல், பெற்றோர்களை மகிழ்வித்தல், ஏழை எளியோருக்கு உதவுதல் போன்ற ஒவ்வொரு நற்செயலும் இந்நாட்களில் பல மடங்கு நன்மையைக் கொண்டதாகிறது.

குறிப்பாக அரஃபா நாள் மிகுந்த சிறப்புடையது. ஹஜ் செய்யாதவர்களுக்கு அந்நாளில் நோன்பு நோற்பது கடந்த ஆண்டின் மற்றும் வரவிருக்கும் ஆண்டின் சிறிய பாவங்களுக்கு பரிகாரமாக அமையும் என ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ளது. அதேபோல், குர்பானி கொடுக்கும் வசதி உள்ளவர்கள் இறையச்சத்துடனும் நன்றியுணர்வுடனும் அந்த இபாதத்தை நிறைவேற்ற வேண்டும்.

இன்றைய சமுதாயத்தில் பலர் தங்களின் நேரத்தை வீண் விஷயங்களில் செலவழித்து வருகின்றனர். ஆனால் துல்ஹஜ் மாதத்தின் இந்த பொற்காலம் நமக்கு ஒரு கேள்வியை எழுப்புகிறது: "நம் வாழ்க்கைக்காக நாம் என்ன சேமித்து வைத்திருக்கிறோம்?" செல்வம், புகழ், பதவி ஆகியவை ஒருநாள் மறைந்துவிடும். ஆனால் இறைவனுக்காக செய்யப்பட்ட நற்செயல்கள் மட்டும் நித்திய பலன்களை வழங்கும்.

எனவே, இந்த துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களையும் வீணாக்காமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளையும் ஒரு புதிய வாய்ப்பாகக் கருதி, நம்மை நாமே சீர்திருத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும். குடும்பத்தினரிடமும் சமூகத்தினரிடமும் நன்மையை பரப்ப வேண்டும். நமது நாவை பொய்யிலிருந்தும், கண்களைத் தீமையிலிருந்தும், இதயத்தை அகந்தையிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

இந்த புனித நாட்கள் நம்முடைய ஈமான், நற்செயல்கள் மற்றும் இறைநெருக்கத்தை அதிகரிக்கும் அரிய பருவமாக அமையட்டும்.

# இலஞ்சம் பற்றிய புகாருக்கு ஒரு இலட்ச ரூபா பரிசு முதல்வர் விஜய் அரசு அதிரடி அறிவிப்பு

## முதல்வராக ஜோசப் விஜய் ஏற்றபின் அதிரடி உத்தரவு

(திருச்சி ஏம். கே. ஷாகுல் ஹமீது)

அரசு ஊழியர்கள் லஞ்சம் கேட்டால் ஆதாரத்துடன் புகார் தெரிவிக்கலாம் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தமிழக சட்டசபை தேர்தலில் முதல் முறையாக களம் கண்ட த.வெ.க. மகத்தான வெற்றியை பதிவு செய்தது. 108 இடங்களை கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. காங்கிரஸ். கம்யூனிஸ்டுகள், விடுதலை சிறுத்தைகள் ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் தமிழக முதல்வராக ஜோசப் விஜய் பதவியேற்று இருக்கிறார்.

முதல்வர் விஜய் மற்றும் 9 அமைச்சர்களுக்கான இலாகாக்கள். கடந்த 16-ந்தேதி ஒதுக்கப்பட்டன. அதைத்தொடர்ந்து திங்கள்கிழமை 9 அமைச்சர்களும் தலைமைச்செயலகத்தில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அறைகளுக்கு சென்று பொறுப்பேற்றுக் கொண்டனர்.

தமிழக முதல்வராக பொறுப்பேற்ற விஜய், தமிழகத்தில் அடுத்த 3 மாதங்களில் லஞ்சம் முழுமையாக ஒழிக்கப்படும் என அதிரடி அறிவிப்பை வெளியிட்டார். அதனை தொடர்ந்து முதல்-அமைச்சர் ஜோசப் விஜய் தலைமையிலான தவெக அரசின் லஞ்ச ஒழிப்பு மற்றும் நிர்வாகத் தூய்மைக்கான அதிரடி நடவடிக்கைகள் அடிமட்ட அளவில் வேகம் எடுக்கத் தொடங்கி உள்ளன.

இந்தநிலையில், தமிழக அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறியதாவது :எந்த அரசு துறையாக இருந்தாலும் உங்களிடம் 1000 ரூபாய் லஞ்சம் கேட்டால்கூட ஆதாரத்துடன் புகார் தெரிவிக்கலாம் புகார் அளிப்பவர்களுக்கு 1 லட்சம் ரூபாய் சன்மானம் வழங்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகார் அளிக்க அழைக்கவும் 1800 425 1555 (24x7 கட்டணமில்லா எண்) தமிழக அரசின் இந்த அதிரடி அறிவிப்பு சாமனிய மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இந்த அதிரடி அறிவிப்பால் லஞ்சம் கேட்கும் அரசு ஊழியர்கள் இடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

முதல்வர் ஜோசப் விஜய் தானே ஒரு அரசு ஊழியரைப் போல உரிய நேரத்திற்கு அலுவலகம் வந்து பணியாற்றுவது அதிகாரிகள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. "மக்களின் பணத்தை நான் ஒரு பைசா கூட தொடமாட்டேன்" என்று உறுதியளித்துள்ள அவர், ஊழலற்ற வெளிப்படையான ஆட்சியை வழங்க இலக்கு வைத்துள்ளார்.



# யுத்தத்தில் உயிரிழந்த படை வீரர்களை நினைவு கூற வேண்டும்

## கிழக்கு ஆளுநர்

**(ஏ.எச்.ஹஸ்பர்)**

17ஆவது படை வீரர் ரணவீரர் நினைவு நாளை ஒட்டி, கிழக்கு மாகாண ரணவீரர் நினைவு நிகழ்வு (14) அம்பாறை கொன்டவெட்டுவான் இராணுவப் பயிற்சி முகாம் வளாகத்தில் அமைந்துள்ள ரணவீரர் நினைவுச் சின்னம் அருகில், கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் நடைபெற்றது.

அனைத்து மதங்களையும் உள்ளடக்கிய மதச் சடங்குகள் நடத்தப்பட்டு, உயிர்நீத்த ரணவீரர்களுக்கு புண்ணியம் அர்ப்பணிக்கப்பட்டதன் பின்னர் நினைவு நிகழ்வு ஆரம்பமானது.

தூரிய வாத்தியக் குழுவை முன்னிலைப் படுத்திய அணிவகுப்பில் இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ் திணைக்களம் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தைச் சேர்ந்த அணிகள் பங்கேற்றன.

இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த ஆளுநர், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளின் யுத்த வரலாற்றை நினைவுகூர்ந்து, முப்பது ஆண்டுகள் நீடித்த போரினை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டிற்கு சுதந்திரத்தை ஏற்படுத்துவதற்காக தமது உயிர்களை அர்ப்பணித்த ரணவீரர்களின் தியாகங்களின் மகத்துவத்தை வலியுறுத்தினார். அதனைத் தொடர்ந்து ரணவீரர் நினைவுச் சின்னத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.





இந்நிகழ்வில் அனைத்து மதங்களையும் சேர்ந்த மதகுருமார்கள், பிரதியமைச்சர் வசந்த பியதிஸ்ஸ , அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுல ரத்நாயக்க , அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரியந்த விஜேரத்ன , அம்பாறை மாவட்ட செயலாளர், கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் உட்பட மாகாண சபை அதிகாரிகள், முப்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படைத் தலைவர்கள், அதிகாரிகள், மேலும் ரணவீரர் குடும்பங்களைச் சேர்ந்த தாய்மார்கள், தந்தையர்கள் மற்றும் பிள்ளைகள் உள்ளிட்ட பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

---

# சாய்ந்தமருது எல்லை நிர்ணயம் இடம்பெறவுள்ள நிலையில் காரைதீவு பிரதேச சபை எல்லை தெளிவாக அடையாளப்படுத்தப்பட வேண்டும் :

## காரைதீவு உப தவிசாளர் இஸ்மாயில்

**(நூருல் ஹுதா உமர்)**

சாய்ந்தமருது நகர சபை சம்பந்தமான தீர்ப்பு உச்ச நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டு விரைவில் எல்லை நிர்ணயம் செய்யப்பட உள்ள சூழ்நிலையில் சாய்ந்தமருதின் அயல் பிரதேசமாக உள்ள காரைதீவு பிரதேச சபை நிர்வாகத்தின் கீழுள்ள மாளிகைக்காடு எல்லையை சரியான முறையில் அடையாளப்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு காரைதீவு பிரதேச சபை உப தவிசாளர் எம்.எச்.எம். இஸ்மாயில் பிரதேச சபையில் முன்மொழிவொன்றை முன்வைத்தார்.

காரைதீவு பிரதேச சபையின் 04 வது சபையின் 11வது மாதாந்த சபைக் கூட்டம் (14) சபா மண்டபத்தில் தவிசாளர் எஸ். பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிட்ட அவர், காரைதீவு பிரதேச சபை எல்லை தொடர்பில் முரண்பாடான பல கருத்துக்கள் பரவி வரும் சூழ்நிலையில் முறையான எல்லையை வரையறுத்து அவற்றை மக்களுக்கு காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த காலங்களில் மாளிகைக்காடு மேற்கு பிரதேசத்தில் பாதை அபிவிருத்திகளை நாம் செய்துள்ளோம். அதனை வேறு பிரதேச நிர்வாக எல்லையாக காட்ட நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றை சீரமைத்து ஒழுங்கான நிர்வாக எல்லை வரையறுக்கப்பட வேண்டும்.







மேலும் மாளிகைக்காடு பிரதேசத்தில் வடிகான்கள் துப்பராக பேணப்படாமையால் டெங்கு ஆபத்துக்கள் உள்ளது. மக்களை மட்டும் குறை கூறாது நமது பொறுப்புக்களையும் நாம் செய்ய வேண்டும். உடனடியாக மக்களின் பிரச்சினைங்களை தீர்க்க சபை முன்வர வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தார்.

இவற்றுக்கு பதிலளித்த தவிசாளர் எஸ். பாஸ்கரன், காரைதீவு பிரதேச சபை எல்லை வரைபடம் தம்வசம் இருப்பதாகவும், பிரதேச எல்லைகளில் பிரச்சினைகள் வராமல் நடவடிக்கை எடுப்பதாகவும், காரைதீவு பிரதேசத்தின் எல்லை மாளிகா வீதியின் மத்திய கோட்டினால் பயணித்து கைவிடப் பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத் தையும்- மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளி வாசலையும் ஊடறுத்து செல்லும் வீதிவரை உள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், காரைதீவு பிரதேச சபை பிரதேசங்களில் வடிகான்கள் துப்பராக பேண மக்களின் ஒத்துழைப்பை தான் எதிர்பார்ப்பதாவும், முடியுமானவரை மக்களின் நலனில் சபை அக்கறை செலுத்துவதாகவும் பிரதி தவிசாளரின் கோரிக்கைக்கு இவ்வார இறுதிக்குள் தீர்வை வழங்க உத்தேசித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

---

# சாய்ந்தமருது நகர சபை பிரகடனம்; வரலாற்று தீர்ப்புக்காக உழைத்த அனைவருக்கும் நன்றிகள்

## சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தலைவர் அல்ஹாஜ் எம்.எஸ்.எம் முபாரக்

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

சாய்ந்தமருது தனியான நகர சபை பிரகடனத்துக்காக உழைத்த அனைவருக்கும் கோடான கோடி நன்றிகள் உரித்தாகட்டும் என சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தலைவர் அல்ஹாஜ் எம்.எஸ்.எம் முபாறக் தெரிவித்தார்.

சாய்ந்தமருது மக்களின் நீண்டகால அபிலாஷையான சாய்ந்தமருதுக்கு தனியான நகர சபை தேவை என்ற கோரிக்கைக்கு அமைவாக, ஏற்கனவே வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் சட்டபூர்வமானது எனவும் சாய்ந்தமருது நகர சபைக்கான எல்லையை இரண்டு மாதங்களுக்குள் நிர்ணயித்து தேர்தலை நடாத்த வேண்டும் என்ற உயர்நீதிமன்ற தீர்ப்பின் மூலம் சாய்ந்தமருதுக்கான தனியான நகர சபை உறுதி செய்யப் பட்டதை முன்னிட்டு, துஆப் பிரார்த்தனை செய்யும் நிகழ்வும் சாய்ந்தமருதுக்கான தனியான நகர சபைக்காக முழு மூச்சாக நின்று உழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் நிகழ்வும் சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் ஜும்ஆத் தொழுகையைத் தொடர்ந்து இடம்பெற்றது.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் தலைவர் அல்ஹாஜ் எம்.எஸ்.எம். முபாறக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், நன்றி கூறி உரையாற்றிய வேளை, இதற்காக அரும்பாடுபட்ட அனைவருக்கும் தமது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

தமது நன்றியுரையில் அவர் மேலும் கூறியதாவது,

நமது சாய்ந்தமருது மக்களின் நீண்டகால அபிலாஷையான சாய்ந்தமருதுக்கு தனியான நகர சபை தேவை என்ற கோரிக்கைக்கு அமைவாக ஏற்கனவே வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் சட்டபூர்வமானது எனவும் சாய்ந்தமருது நகர சபைக்கான எல்லையை





இரண்டு மாதங்களுக்குள் நிர்ணயித்து தேர்தலை நடாத்த வேண்டும் என்ற நேற்றைய உயர்நீதிமன்ற தீர்ப்பின் மூலம் சாய்ந்தமருதுக்கான தனியான நகர சபை உறுதிசெய்யப்பட்டுள்ளது அல்ஹம் துலில்லாஹ்!

நமதூருக்கான தனியான சபை என்ற இலக்கை அடைந்ததற்கு முக்கிய காரணம் நமது மருதூரின் ஒற்றுமையும் ஓரணியில் நாம் அனைவரும் ஒன்று திரண்டு தனியான நகரசபை சாய்ந்தமருதுக்கு வேண்டும் என்ற ஒருமித்த கோஷத்தோடு செயற்பட்ட சமூக போராட்டமும், எங்கள் ஒவ்வொருவரினதும் துஆக்களினதும் பிரதிபலனாகும்.

இந்த இலக்கை அடைய அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்களில் பெயர்சொல்லி குறிப்பிட வேண்டியவர்கள் மிக அதிகமானவர்கள் இருக்கின்றார்கள். நேர முகாமைத்துவத்தை கருதி முக்கியமான சிலரை ஞாபகப்படுத்துகின்றேன்.

எங்களின் இந்த நகர சபை இலக்கை நோக்கி பயணிக்க சாய்ந்தமருது ஊரை ஒரு குடையின் கீழ் ஒற்றுமைப் படுத்தி எங்களுக்கு தலைமை வகித்த சாய்ந்தமருது ஜ/ம்ஆ பெரிய பள்ளிவாசலின் முன்னாள் தலைவர் மர்/ஹும் வை.எம். ஹனீபா சேர் அவர்களின் ஆளுமையையும், செயற்பாட்டையும் எங்களால் ஒரு போதும் மறக்க முடியாது. எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாருக்கு உயர்ந்த ஜன்னத்துல் பிர்தௌஸ் சுவர்க்கத்தை வழங்குவானாக! ஆமீன்.

அதேபோல எங்களின் கோரிக்கை நியாயமானது என்பதை ஏற்றுக் கொண்டு சாய்ந்தமருதுக்கான தனியான நகர சபைக்குரிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிட பக்கபலமாக இருந்த முன்னாள் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் அவர்கள் செய்த வரலாற்று உதவியை நாங்கள் என்றென்றும் நன்றியுணர்வுடன் ஞாபகமூட்டி எங்களது ஊர்மக்கள் அனைவரது சார்பாகவும் எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது ஊரின் முன்னாள் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம். சலீம் சேர் அவர்கள் இந்த சபைக்கான முயற்சியில் மூளையாக செயற்பட்டு நிர்வாக மற்றும் அரசியல் ரீதியாக வழி நடத்தியதை ஞாபகப்படுத்த கடமைப்பட்டுள்ளேன்.

அத்தோடு, எமது கௌரவ முன்னாள் மாநகர சபை சுயேட்சை உறுப்பினர்கள் அனைவரினதும் அர்ப்பணிப்பை நன்றியுடன் நினைவூட்டுகின்றேன்.

இறுதியாக நமது வர்த்தமானி அறிவித்தல் சட்ட பூர்வமானது என உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த முன்னாள் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.சலீம் சேர் அவர்களுக்கும் முன்னாள் மாநகர சபை சுயேட்சை குழு உறுப்பினர் ஏ.ஆர்.எம்.அஸீம் அவர்களுக்கும் நமது ஊர்மக்கள் சார்பாக நன்றியை தெரிவிப்பதோடு, இந்த உயர் நீதிமன்ற வழக்கிற்காக பண உதவி மற்றும் உடல் உதவி செய்தவர்களுக்கும் நன்றி சொல்வதோடு, இந்த வரலாற்று நீதியை பெற்றுத் தந்த பிரபல சட்டத்தரணிகளுக்கும் எங்களது சாய்ந்தமருது மக்கள் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாய்ந்தமருது மக்களாகிய நாம் அரசியலில் கட்சிரீதியாக எந்த அணியில் பிரிந்து இருந்தாலும் எங்கள் அனைவரதும் இலக்கு சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி மன்றமே!

அந்த வகையில் இந்த நகரசபையின் அடுத்த கட்ட செயற்பாடுகளான எல்லை நிர்ணயம் வட்டாரப் பிரிப்பு போன்ற நகரசபை செயற்பாடுகளுக்கு எமது ஊரின் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா சேர் அவர்கள் எதிர்காலத்தில் முழு முயற்சி செய்து சாய்ந்தமருது நகர சபையை நடைமுறைச் செயற்பாடுகளுக்கு கொண்டு வரவேண்டும் எனவும் மிகவும் அன்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

“இறுதியாக,இந்த மகிழ்ச்சியான தருணத்தில் நாம் நிதானத்தை இழந்து விடக் கூடாது. நமது வெற்றி மற்றவர்களுக்கு இடையூறாக இருக்கக் கூடாது. மிகவும் கண்ணியமான முறையில் அல்லாஹ்வுக்கு நன்றி கூறி, இந்த வெற்றியை அனுஷ்டிப்போம். எல்லாம் வல்ல அல்லாஹ் நமது சாய்ந்தமருது மண்ணை செழிக்கச் செய்வானாக! இந்தப் புதிய உள்ளூராட்சி சபை மூலம் நமது மக்களின் வாழ்வாதாரமும், உட்கட்டமைப்பும்,- கல்வித் தரமும் உயரட்டும். நாம் அனைவரும் கைகோர்த்து, ஒரு பலமான, வளமான சாய்ந்தமருதை உருவாக்குவோம் என்று இந்த புனிதமான பள்ளிவாசல் முன்றலில் நின்று உறுதி ஏற்போம். எமது மண்ணின் உரிமை எமது கையில்! வெற்றி நிச்சயம்! அல்லாஹு அக்பர்! வாழ்க சாய்ந்தமருது! என்றும் தெரிவித்தார்.

உலமாக்கள், ஊர்பிரமுகர்கள், வர்த்தக பெருமக்கள், கல்விமான்கள், மீனவர்கள், பெரியோர்கள், சகோதரர்கள், இளைஞர்கள் மற்றும் மருதூர் மண்ணின் மைந்தர்கள், தாய்மார்கள், சகோதரிகள் உட்பட பாடுபட்ட அனைத்து தரப்பினருக்கும் இதன்போது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

# எயார் பஸ் ஊழல் சிக்குவாரா மஹிந்த?



எம்.எஸ். அமீர் ஹுசைன்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற 14 எயார் பஸ் கொள்வனவில் 06 கோடி ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டை நிஷரூபித்து அவர் மீது விலங்கு மாட்டப்படுமா? என்ற கேள்விகள் நாட்டில் பேசுபொருளாக மாறி வருகின்றன. 2026.05.12 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவுக்கு வருமாறு அழைக்கப் பட்டிருந்ததை தொடர்ந்து அன்றைய தினம் காலை அங்கு சென்ற அவர் 2.00 மணித்தியால யங்கள் வாக்கு மூலம் வழங்கி இருக்கின்றார். அந்த சந்தர்ப்பத்தில் பெருமளவான பொதுஜன பெரமுன தாமரை மொட்டு கட்சி ஆதரவாளர்கள் ஆணைக்குழு முன்னால் அணிதிரண்டு மஹிந்தவுக்கு ஆதரவை தெரிவித்து புதிய உத் வேகத்தை வழங்கிக் கொண்டிருந்தனர்.

ஸ்ரீ லங்கன் எயார் நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன 2026.05.08 ஆம் திகதி காலை கொள்ளுபிட்டி பகுதியில் அமைந்துள்ள அரவிந்த டி சில்வாவுக்கு சொந்தமான வீட்டின் அறை ஒன்றில் மர்மான முறையில் இறந்து இருந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டார். அதன் பின்னர் சட்ட வைத்திய பரிசோதனைகள் நடத்தப்பட்டு சடலம் அடக்கம் செய்யப்பட்டது. இந்த மரணம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கின்றது. தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது கொலை செய்யப்பட்டாரா? என்ற விசாரணைகள் தொடர்கின்றன.

அவர் பற்றிய மர்மங்களை துலக்குவதற்காக அவரது கைத் தொலைபேசி லொக் உடைப்பதற்காக அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றது.

அவரது மரண விசாரணை 05 சட்ட வைத்திய நிபுணர்களைக் கொண்டு நடத்தப்பட்டது. ஆனாலும் கொலை செய்யப்பட்டாரா? என்பது தொடர்பாக எந்த தகவலும் இதுவரையில் வெளிப்படுத் தப்படவில்லை.

மர்மமான முறையில் இறந்து கிடந்த சந்திரசேன 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் ஸ்ரீ லங்கன் விமான சேவைக்கு முறையற்ற ஓர் ஒப்பந்தம் மூலம் இடம்பெற்ற 14 எயார் பஸ் விமானங்களை கொள்வனவு செய்வதில் அன்றைய காலகட்டத்தில் சுமார் 40 கோடி ரூபா (20 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) இலஞ்சம் பெற்றார் என்ற அடிப்படையில் இங்கிலாந்தில் நீதிமன்றம் ஒன்றில் விசாரணை செய்யப்பட்ட வழக்கொன்றில் குற்றவாளியாக கருதப்பட்டவர் ஆவார். இவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு வழங்கி இருந்த வாக்கு மூலம் ஒன்றில் மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் 2015 ஆம் ஆண்டு மூன்று சந்தர்ப்பங்களில் 02 கோடி ஷரூபா வீதம் (20 மில்லியன் வீதம்) மஹிந்தவின் பெலியத்த இல்லம் மற்றும் கால்டன் இல்லம் சென்று 06 கோடி ரூபாவை வழங்கியதாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் 2020 ஆம் ஆண்டு இலங்கையில் அது தொடர்பான வழக்கொன்றில் கைதாகி விடுதலை செய்யப்பட்டிருந்தார். மீண்டும் தொடரப்பட்டிருந்த வழக்கொன்றில் அடிப்படையில் 54 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர், 2026.05.05 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். ஆனாலும் பிணையில் வெளியே வருவதற்காக பிணை வழங்க மன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட இரண்டு நபர்களும் போலியான ஆள் அடையாளத்தை உடையவர்கள் என்றும் அவர்களுக்கு 15,000 ரூபா செலுத்தப்பட்டமையும் கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பிணையில் இருந்த கபில சந்திரசேனவை நீதிமன்றத்தின் நம்பிக்கையை சிதைத்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் மீண்டும் கைது செய்து 2026.05.08 ஆம் திகதி மன்றில் ஆஜர்படுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையிலேயே 07 ஆம் திகதி இரவு மர்மமான முறையில் குறித்த இல்லத்தில் மரண மடைந்திருந்த நிலையில் சடலம் கைப்பற்றப்பட்டது.

அவரால் தெரிவிக்கப்பட்ட மஹிந்த தொடர்பான ஊழல் அல்லது இலஞ்சம் பெற்றமை தொடர்பாகவே மஹிந்த ராஜபக்ஷ 12 ஆம் திகதி இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழவில் ஆஜராகி அதிகாரிகளின் கேள்விகளுக்கு பதிலளித்துள்ளார்.

அதுபற்றி மஹிந்த ராஜபக்ஷ தெரிவிக்கையில், எனக்குத் தெரிந்தவைகள் அனைத்தையும் இரண்டு மணித்தியாலங்களாக ஆணைக் குழுவுக்கு சொல்லி விட்டேன். தீர்ப்பு நீதியானதாக இருந்தால் என்னை இந்த குற்றச்சாட்டில் இருந்து விடுதலை செய்ய வேண்டும். என்மீது குற்றம் சுமத்தியதாக கூறப்பட்ட கபில சந்திரசேனவும் இறந்து விட்டார். அதனால் குறுக்கு கேள்விகள் கேட்கவும் முடியாது என்று தெரிவித்துள்ளார். அத்துடன் ஆதரவாளர்கள் கூட்டமும் மஹிந்த மீது கைவைத்தால் விடமாட்டோம் என்று சூளுரைத்தவாறே இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு முன்னால் திரண்டிருந்தனர்.

ஆனாலும் இந்த இலஞ்சம் பெற்றமை தொடர்பாக தகவலை ஆணைக்குழுவுக்கு தெரிவித்த ஸ்ரீ லங்கன் விமான சேவையின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி உயிருடன் இல்லா விட்டாலும் விசாரணைகள் தொடரும் என்றும் அவரால் தெரிவிக்கப்பட்ட ஊழல் விவகாரம் மற்றும் மஹிந்த ராஜபக்ஷ 06 கோடி ஷரூபா இலஞ்சமாக பெற்ற விவகாரம் நிரூபிக்கப்படுமானால் அவருக்கு உரிய தண்டனை வழங்கப்பட்டு சிறையில் அடைப்பதற்கு எந்தவிதமான தடைகளும் சட்டத்தில் இருக்காது என்று நீதித்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அவ்வாறே முன்னாள் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன விடமும் ஆணைக்குழு 12 ஆம் திகதி வாக்குமூலங்களை பெற்றிருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் பதவிக்கு வர முன்னர் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் சந்தர்ப்பங்களில் கடந்த காலப் பகுதியில் நடைபெற்றதாக கூறப்பட்ட ஊழல்கள் மோசடிகள் தொடர்பாக கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் குறிப்பாக மஹிந்த குடும்பம் செய்துள்ள அனைத்து ஊழல்களும் வெளிப்படுத்தப்படும் என்றும் பகிரங்கமாக மேடைகளில் கூறி வந்திருக்கின்றது.

அவ்வாறிருக்க இதுவரையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைத்து இரண்டு வருடங்கள் கடந்தும் மஹிந்த குடும்பத்தின் ஓர் ஊழலைக் கூட இதுவரையில் நிஷரூபிக்க முடியவில்லை.

அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் தான் இந்த இலஞ்சம் பற்றிய தகவல்கள் கிடைத்தன. ஆனாலும் அந்த தகவலை வெளிப்படுத்திய பிரதான சாட்சி இப்போது உயிருடன் இல்லை. பிரதான சாட்சியின் மரணத்திற்கு பின்னர் மஹிந்த மீது விசாரணைகள் முன்னெடுக்கப்பட மாட்டாது. அதனால் மஹிந்த எப்படியும் தப்பிவிடலாம் என்பது அவர் சார்ந்த ஆதரவாளர்களது எதிர்பார்ப்பாகும்.

அதேநேரம் ஏற்கனவே பெசில் ராஜபக்ஷ முறையற்ற விதமாக சொத்து சேகரித்தார் என்ற குற்றச்சாட்டுக்களும் இருக்கின்றன. அவரது மல்வானையில் அமைக்கப்பட்டுள்ள ஆடம்பர மாளிகையும் 16 ஏக்கர் தென்னங் காணியும் அந்த அடிப்படையில் சேகரித்த சொத்தாகவே கருதப்படுகின்றது. அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மாணவாகள் 2026.05.14 ஆம் திகதி மல்வானைக்குச் சென்று அந்த வீட்டைக் கைப்பற்றி உள்ளனர். பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் விடுதி பிரச்சினைக்கு தீர்வாக அந்த சொத்தை அரசாங்கம் கையகப்படுத்தி மாணவர்களுக்கு விடுதி அமைத்து கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேபோன்ற மற்றொரு பிரமாண்டமான சொத்து கம்பஹா ஒருதொட்டையிலும் அமைந்திருப்பதாக அறிய முடிகின்றது. ஆனாலும் மல்வானை சொத்து தமக்குரியதல்ல என்று அப்போதைய சந்தர்ப்பத்தில் பெசில் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். அதனால் இப்போது கைவிடப் பட்ட நிலையில் இருந்ததை பல்கலைக்கழக மாணவர்கள் கைப்பற்றி முகாமிட்டுள்ளனர்.

அத்துடன் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடத்தப்பட்ட தயட கிருல நிகழ்ச்சித் திட்டத்தின்போது 70 கோடி ரூபா (700 மில்லியன்) அரச நிதி மோசடி தொடர்பாகவும் இலஞ்ச ஊழல் மற்றும் விசாரணை ஆணைக்குழு மஹிந்த ராஜபக்ஷ வின் பாரியார் சிரந்தி ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய உட்பட 12 பேர்களை விசாரணை செய்ய இருப்பதாகவும் அறிய முடிகின்றது. புரவசி பலய என்ற அமைப்பின் தலைவர் ஜாமுனி சமந்த என்பவர் 2026.01.12 ஆம் திகதி ஆணைக் குழுவுக்கு செய்துள்ள முறைப்பா டொன்றைத் தொடர்ந்து இந்த விசாரணைகள் நடத்தப்பட உள்ளன. ஏற்கனவே யோசித ராஜபக்ஷ மீதும் தொடரப் பட்டுள்ள வழக்கொன்றை அடிப்படையாக வைத்து குற்றப்பத்திரிகை முன்வைக்கப் பட்டு மன்றில் விசாரணைக்கு உத்தரவிடப்பட்ட தகவல்களும் வெளியாகி உள்ளன.



எதுவானாலும் இலஞ்சம் ஊழல்களில் ஈடுபட்ட அரசியல் வாதிகள் அதிகாரிகள் எந்தவிதமான தகுதி அந்தஸ்தும் கவனத்தில் எடுக்கப்படாமல் விசாரணை செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும். அது தொடர்பாக வழங்கப்பட்ட வாக்குறுதிகள் காற்றில் பறக்கக்கூடாது. நிரூபிப்போம் என்று சூளுரைத்தவர்கள் அவற்றை நிஷரூபித்து மக்கள் முன்னிலையில் கொண்டு வர காலம் தாழ்த்தாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். வாக்குறுதிகள் மீறப்பட்டு மக்கள் ஏமாற்றப்பட்டால் ஐ.தே.கட்சிக்கு நடந்த அதே கதி. நடந்து ஒரு போனஸ் ஆசனம்தான் பாராளுமன்றத்தில் என்ற நிலை வரும் காலம் வெகு தூரத்தில் இருக்காது என்றே கூறலாம்.

அத்துடன் ஊழலை ஒழிப்போம் என்று கூறிய இதே ஆட்சியிலும் ஏற்கனவே ஊழல் இடம்பெற்றதாக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் பட்ட நிலையில், ஆங்காங்கே விசாரணைகள் தொடர்வதையும் அவதானிக்க முடிகின்றது. எப்படியானாலும் ஊழலை ஒழிப்பது பாரிய சவால் என்பதையும் மறந்துவிட முடியாது.

# முஸ்லிம் அதிகாரிகளுக்கான நேரத்தை மாற்றுமாறு கோரிக்கை

(கே. எ. ஹமிட்)

ஜனாதிபதி கலந்து கொள்ளும் அம்பாறை மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள முஸ்லிம் அதிகாரிகளுக்கான நேரத்தை மாற்றுமாறு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரிடம் பாராளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸ்ஸநாயக்க கலந்து கொள்ளும் அம்பாறை மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 22ம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அம்பாறை மாவட்ட அரச திணைக்களங்களின் முஸ்லிம் அதிகாரிகளை பி.ப.12.30 மணிக்கு வருகை தருமாறு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் அன்றைய தினம் வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்கு அம்பாறை மாவட்ட அரச திணைக்களங்களின் முஸ்லிம் அதிகாரிகள் செல்ல வேண்டியுள்ளதால் குறித்த முஸ்லிம் அதிகாரிகளை பி.ப. 1.30 மணிக்கு வருவதற்கான நடவடிக்கைகளை அரசாங்க அதிபர் மேற்கொள்ள வேண்டும் என அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை முன்வைத்த கோரிக்கையை ஏற்று முஸ்லிம் அதிகாரிகள் பி.ப. 1.30 மணிக்கு வருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவதாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் அனுபமா மங்கள விக்கிரமாராச்சி பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பையிடம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கட்டுகஸ்தோட்டை சாஹிராவில் அஹதிய்யா மாணவர் அறிவுப் பூங்கா





(எம்.ஜெலீல்)

வர்த்தக நிறுவனங்களது அனுசரனையில் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் ஏற்பாட்டில் கண்டி மாவட்ட அஹதிய்யா பாடசாலைகளின் மாணவர் மாணவியர்களுக்கிடையிலான அறிவுப் பூங்கா கேள்வி பதில் போட்டி ஒலிப்பதிவு நிகழ்ச்சி (22) கட்டுகஸ்தோட்டை சாஹிரா பாடசாலையில் கண்டி மாவட்ட அஹதிய்யா சம்மேளனத் தலைவர் ஜே. எம். சில்மி தலைமையில் நடைபெற்றது.

கண்டி மாவட்டத்திலிருந்து 16 அஹதிய்யா பாடசாலைகளின் மாணவர் மாணவியர்கள் பங்குபற்றிய இப்போட்டி நிகழ்ச்சிகளை முஸ்லிம் சேவையின் அஹமட் எம்.நசீர் நடாத்தியதுடன் போட்டிகளில் அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர் மாணவியர்களுக்கு வானொலி சான்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆஹதிய்யா முக்கியஸ்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட வானொலி முஸ்லிம் சேவை சார்பாக நிகழ்ச்சித் தயாரிப்பாளர் எம். ரலீம், முன்னாள் ஆங்கில சேவை கட்டுப்பாட்டாளர் எம். தாசிம் ஆகியோருடன் நிகழ்ச்சிக்கான புள்ளிப் பதிவாளர்கள் உதவியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பிரஜா சக்தி தேசிய வேலைத் திட்டத்தினை வலுவூட்டும் பொருட்டு பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் செயலமர்வு





(இஸட்.ஏ.றஹ்மான்)

பிரஜா சக்தி திட்டத்தினை (வறுமை ஒழிப்புக்கான தேசிய இயக்கம்) நாடு முழுவதும் சிறப்பாக வழி நடாத்தும் பொருட்டு கிராமிய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் ஏற்பாட்டில் பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் தமிழ் மொழி மூலமான இரண்டு நாட்களுக்கான பயிற்சிநெறி கிராமிய அபிவிருத்தி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் பிலிமத்தலாவ கிளையில் 14மற்றும் 15 ம் திகதிகளில் நடைபெற்றது.

இதன் ஆரம்ப நிகழ்வில் கிராமிய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் மேலதிக செயலாளர் மேனக ஹேரத் மற்றும் கிராம அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் சுறங்கிக்கா கரிசினாகுட, பிலிமத்தலாவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் கௌசல்யா ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் வளவாளராக கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் பிரதிப் பணிப்பாளர் எச்.எம்.எம். றுவைத் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது.

# சாய்ந்தமருதில் “அகன்று செல்” போதைக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வு





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கையில் போதைப்பொருள் ஒழிப்பை ஒரு தேசிய இயக்கமாக முன்னெடுக்கும் வகையில், “அகன்று செல்” (புழ யுறயல) எனும் தொனிப் பொருளில் விசேட விழிப்புணர்வு செயற்றிட்டம் இன்று (18) திங்கட்கிழமை சாய்ந்தமருதில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சாய்ந்தமருது ஜ/ம்ஆப் பெரிய பள்ளிவாசலுக்கு முன்னால் இருக்கின்ற பிரதான வீதியில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் டி.எஸ். இந்திக தலைமை தாங்கி, முச்சக்கர வண்டிகளில் விழிப்புணர்வு ஸ்டிக்கர்களை ஒட்டி இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

செயற்றிட்டத்தின் முக்கிய தொனிப் பொருளாக “அகன்று செல்” போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனையிலிருந்து சமூகத்தை விடுவிப்பதை இது குறிக்கிறது.

போதைப்பொருள் தொடர்பான புகார்களை வழங்குவதற்காக பிரத்தியேகமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 1818 என்ற இலக்கத்தை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

ஊர் முழுவதும் பயணிக்கும் முச்சக்கர வண்டிகள் மூலம் இந்தச் செய்தியை ஒவ்வொரு கிராமத்திற்கும் கொண்டு செல்லத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவாவின் பிரதிநிதிகள், பொலிஸார், பிரஜாசக்தி தவிசாளர்கள், சிவில் சமூக அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் செயற்பாட்டாளர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு ஸ்டிக்கர்களை ஒட்டி ஆதரவு தெரிவித்தனர்.

# 42வது தேசிய மீலாதுன் நபி விழா தொடர்பான ஆரம்பகட்ட கலந்துரையாடல் நீர்கொழும்பில்









(நூருல் ஹுதா உமர்)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 26ஆம் திகதி ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் நடைபெற உள்ள 42 வது தேசிய மீலாதுன் நபி விழாவை முன்னிட்டு ஆரம்பகட்ட ஏற்பாட்டு கலந்துரையாடல் நீர்கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

பிரதி அமைச்சர் முனீர் முளாஃபர் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில், விழாவை சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடத்துவதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது, பிரதேச மக்களுக்கு விழாவின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தல், பொதுமக்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளுதல், விழா நடைபெறவுள்ள நீர்கொழும்பு அல் ஹிலால் மத்திய கல்லூரி மைதானத்தின் வசதிகள் மற்றும் கட்டமைப்புகளை மேம்படுத்துதல், நிகழ்ச்சி நிரல் தயாரித்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, பிரதி அமைச்சர் முனீர் முளாஃபர் விழா நடைபெறவுள்ள நீர்கொழும்பு அல் ஹிலால் மத்திய கல்லூரிக்கு நேரில் விஜயம் செய்து மைதானம் மற்றும் அங்குள்ள வசதிகளை பார்வையிட்டார்.

இக்கலந்துரையாடலில் முஸ்லிம் சமய பண்பாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், பிரதேச சமய தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# மத்திய அரச நிர்வாகத்தின் கீழ் தம்புள்ளை வைத்தியசாலை

(எம்.சதூர்தீன்)

மத்திய மாகாண சபையினால் நிர்வாகிக்கப்பட்டு வந்த தம்புள்ள வைத்தியாசாலை மத்திய அரசின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் லியனகெ ரனவிர தெரிவித்தார்.

தம்புள்ள நகர் மத்தியில் இயங்கி வந்த குறித்த வைத்தியசாலையில் நீண்ட காலமாக எதிர் நோக்கி வந்த இட நெருக்கடி மற்றும் பல குறைபாடுகளைக் கருத்திற் கொண்டு இதனை நிவர்த்தி செய்யும் முகமாக இவ் வைத்தியசாலையை பிரிதொரு இடத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் தற்போது சுகாதார அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது இதற்கமைய தம்புள்ள நகரை அண்மித்த பகுதியில் இப்புதிய வைத்தியசாலையை நிர்மாணிக்க 5ஏக்கர் காணி இனங் காணப்பட்டுள்ளது சகல வசதியுடன் கூடிய இவ்வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்கு அரசினால் துரித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது மாகாண சபைக்கு கீழ் உள்ள இவ்வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் உள்வாங்கப்பட்டு மாவட்ட வைத்தியசாலையாக தரம் உயர்துவதற்கு அரசினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது தற்போது இவ்வைத்தியசாலை வாடுகளில் 350கட்டில்கள் காணப்படுகின்றன.

இதனை 900 ஆக அதிகரிப்பதற்கு புதிய வைத்தியசாலை கட்டிடமாக இது அமைய உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.





# குப்பைத் தொட்டியில் எறியப்பட்ட அமெரிக்க சீன உறவு



எஸ்.ஏ.சுஃப்யான்
(senior Journalist, Chennai - Tamilnadu, India)

உலகின் மிகப்பெரிய பெரிய நாடுகளின் அதிபர்கள் சந்திக்கும் நிகழ்வு என்பது தற்போதைய நிலையில் உலகம் முழுவதும் அதிகம் எதிர்பார்ப்பு நிலையை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.சீனா மற்றும் அமெரிக்கா இடையிலான உறவு முன்னெப்போதையும் விட சிறப்பாக இருக்கப் போகிறது”என்றும் தெரிவித்தார்.
சீனா மற்றும் அமெரிக்கா உறவில் பெரிய முன்னேற்றங்கள் எதுவும் உறுதிப்படுத்தப்படாத போதிலும், டிரம்ப் விரைவில் “அற்புதமான வர்த்தக ஒப்பந்தங்களைப்” பாராட்டினார்.
சிப் தயாரிப்பு நிறுவனமான என்விடியா 10 சீன நிறுவனங்களுக்கு செமி கண்டக்டர்களை விற்க அனுமதி பெற்றதாகவும், போயிங் நிறுவனம் 200 விமானங்களுக்கான ஆர்டரைப் பெற்றதாகவும் கூறப்படுகிறது. ஆனால் இந்த உபசரிப்புகள் மற்றும் தளர்த்தப்பட்ட நிலைப்பாடுகளுக்கு மத்தியில், சீனாவுக்கு எதிரான கடுமையான போக்குகள், டிரம்பின் குடியரசுக் கட்சியின் பாரம்பரியமான, மிகவும் தீவிரமான கொள்கையையே பிரதிபலிக்கின்றன.
இந்த உச்சிமாநாட்டிற்கு ஒரு வாரத்திற்கும் குறைவான காலத்திற்கு முன்பு, மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்கப் படைகளைத் தாக்குவதற்கு இரானுக்கு செயற்கைக் கோள் படங்களை வழங்கியதாக மூன்று சீன நிறுவனங்கள் மீது அமெரிக்க வெளியுறவுத்துறை பொருளாதாரத் தடைகளை விதித்தது.
மேலும் சீனா மற்றும் அமெரிக்கா இடையே உள்ள கடும் போக்கான முக்கியப் பிரச்னைகள் அப்படியே நீடிக்கின்றன.குறிப்பாக தைவான். இதனை சீனா ஒரு கிளர்ச்சி மாகாண மாகவே பார்க்கிறது.இந்தச் சந்திப்பிற்கு முன்னதாக, இரு கட்சிகளையும் சேர்ந்த செனட்டர்கள் குழு ஒன்று டிரம்புக்கு ஒரு கடிதம் அனுப்பியது. அதில் ஆயுத விற்பனையைத் தொடருமாறும், அது குறித்து சீன அதிபரிடம் “முறையாக” அறிவிக்குமாறும் அவர்கள் வலியுறுத்தி யிருந்தனர்.அமெரிக்கா ஜனநாயகக் கட்சியினரும், சீனாவைக் கடுமையாக விமர்சிக்கும் குடியரசுக் கட்சியினரும் அவசியமாகக் கருதும், தடுத்து வைக்கப்பட்டுள்ள 14 பில்லியன் டாலர் மதிப்பிலான ஆயுத விற்பனையின் நிலை குறித்து டிரம்ப் சில விபரங்களை மட்டுமே வழங்கினார்.

என்பதைக் கருத்தில் கொள்ளும்போது, அவர் ஜி ஜின் பியாங் ஓர் அச்சுறுத்தலுடன் தொடங்கியிருப்பது எனக்கு அதிர்ச்சியளிக்கிறது” என டிரம்பின் முன்னாள் வியூக நிபுணர் ஸ்டீவ் பானன் ‘பொலிட்டிகோ’ இதழிடம் தெரிவித்தார்.அவர்கள் இதை மிக முக்கியப் புள்ளியாகக் குறிப்பிட்டது மிகவும் துணிச்சலானது மற்றும் வெளிப்படையானது”என்றும் அவர் குறிப்பிட்டார்.
அதே நேரத்தில் டிரம்பின் இணக்கமான தொனி மற்றும் தைவான் குறித்த அவரது உறுதியற்ற அறிக்கைகளுக்கு அவர்கள் பெரிய அளவில் எந்த எதிர்வினையும் வெளிப்படுத்தவில்லை. அமெரிக்காவில் உள்ள சீன நிபுணர்களுக்கு, இந்த எதிர்வினை இல்லாதது எந்த ஆச்சரியத்தையும் ஏற்படுத்தவில்லை.ஒரே மாதத்திலோ அல்லது ஒரு வருடத்திலோ 50 அதிபர் உச்சிமாநாடுகள் நடந்தாலும், அமெரிக்காவும் சீனாவும் ஒருபோதும் உடன்பட முடியாத சில பிரச்சினைகள்

டிரம்ப் மற்றும் சீன அதிபர் ஷி ஜின்பிங் ஆகிய இருவரும் நம்புவார்கள் என்ற போதிலும் சீனா கடந்த காலங்களில் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இடம் பாடம் கற்றுக் கொள்ளாத தலைமை இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.
அமெரிக்க–சீனா உறவுகளுக்கு டிரம்ப் பெரியளவில் முன்னுரிமை அளிக்கவில்லை. அவரது கவனம் இரானுடனான போர், மேற்கு அரைக்கோளத்தில் ராணுவ நடவடிக்கைகள் மற்றும் உள்நாட்டுக் கவலைகள் ஆகியவற்றின் மீதே இருந்தது.உலகளாவிய வர்த்தகத்தின் எதிர்காலம், தைவானில் அதிகரித்து வரும் பதற்றங்கள் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களுக்கான போட்டி ஆகியவை அனைத்தும் தற்போது முக்கிய பங்காற்றுகின்றன. இதனைத் ஏற்றுக்கொள்வதே சீனாவுனான உறவைத் தொடரும் அடிப்படை நிபந்தனையாகும்.தைவான் மக்கள் பலரும் தங்களை தனி நாட்டினராகவே



மேலும், இந்தச் சந்திப்பு குறித்து சீனா வெளியிட்ட அறிக்கையில் தைவான் முக்கியப் புள்ளியாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த விவகாரத்திற்குத் தீர்வு காணத் தவறினால், அது “மோதல்கள் மற்றும் சண்டைகளுக்கு வழிவகுத்து, ஒட்டுமொத்த உறவையும் பெரிய ஆபத்தில் ஆழ்த்தக்கூடும்” என்று அதில் கூறப்பட்டிருந்தது.வெள்ளை மாளிகையின் அறிக்கையில் தைவான் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை.
சீனாவின் இந்த அறிக்கை, பரந்த அளவிலான ‘மேக் அமெரிக்கா கிரேட் அகைன்’ இயக்கத்தில் உள்ள சிலரால் ஒரு அச்சுறுத்தலாகப் பார்க்கப்பட்டது.
”மக்கள் இதை ஒரு நேர்மறையான சூழலாக மாற்ற எவ்வளவு விரும்பின–ார்கள்

இருக்கின்றன என்ற உண்மையை அது மாற்றிவிடாது” என்று அமெரிக்க–சீன உறவுகளுக்கான வல்லுநர்கள் கருத்தாக இருக்கிறது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.
ஆனால் எதிர்பார்த்த அளவிற்கு இந்த சந்திப்பு உலகிற்கும் சொன்ன செய்திகள் வெளியாகியுள்ளன அமெரிக்கா அதிபர் இந்த பயணத்தில் இரண்டு காரணங்கள் மட்டுமே முன்னோக்கி நகர்த்த வேண்டும் என்று திட்டமிட்டு வந்த நிலையில் அது சாத்தியமானதா என்பது தான் இங்கே நாம் புரிந்து கொள்ள முடியாத நிலையில் உள்ளது.இந்தப் பயணத்தில் பேச்சுவார்த்தைகள், ஒரு விருந்து மற்றும் சொர்க்கத்தின் கோவிலுக்குச் செல்வது ஆகியவை அடங்கும்.இந்தப் பயணம் நல்ல பலனைத் தரும் என்று

கருதுகின்றனர். இருப்பினும், பெரும்பாலானோர் சீனாவிலிருந்து அதிகாரப்பூர்வ சுதந்திரம் அறிவிக்காமலும்,
சீனாவுடன் இணையாமலும் இருப்பதையே விரும்புகின்றனர்.சீன அரசு ஊடகங்களின் தகவலின்படி, “பேச்சுவார்த்தையில், தைவான் பிரச்னை என்பது சீனா–அமெரிக்க உறவுகளில் மிக முக்கியமான விஷயம். இது தவறாக கையாளப்பட்டால், இரண்டு நாடுகளும் நேரடி மோதலுக்குச் செல்லலாம்,” என்று ஷி ஜின்பிங் எச்சரித்துள்ளார்.சமீப ஆண்டுகளில், சீனா தைவானைச் சுற்றி தனது இராணுவப் பயிற்சிகளை அதிகரித்துள்ளது. இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் அதிகரித்து வருகிறது.
அதேநேரத்தில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் இறுதியில், டிரம்ப் நிர்வாகம் தைவானுக்கு 14 பில்லியன் டாலர் மதிப்பிலான ஆயுத விற்பனை திட்டத்தை அறிவித்தது. அதில் மேம்பட்ட ராக்கெட் ஏவுதளங்கள் மற்றும் பல்வேறு ஏவுகணைகள் இடம்பெற்றிருந்தன.
இதை சீனா கடுமையாக எதிர்த்தது. அமெரிக்காவுக்கு தைவானுடன் அதிகாரப்பூர்வ தூதரக உறவு இல்லை. வழக்கமாக அமெரிக்க அதிபர்கள் தைவான் தலைவருடன் நேரடியாக பேசுவதில்லை அப்படி நடந்தால் சீனாவுடன் கடுமையான பதற்றம் உருவாகலாம்.தைவானின் துணை வெளியுறவு அமைச்சர் சென் – மிங்–சி டிரம்பின் கருத்துகளின் சரியான அர்த்தத்தை தெளிவுபடுத்த வேண்டியிருப்பதாக கூறினார்.”அமெரிக்கா–தைவான் ஆயுத விற்பனை அமெரிக்க சட்டத்தின் கீழ் உறுதி செய்யப்பட்ட ஒன்று. தைவான்–அமெரிக்க ஆயுத ஒப்பந்தங்கள், பிராந்திய அமைதி மற்றும் நிலைத்தன்மையின் முக்கிய அடித்தளமாக இருந்து வருகின்றன.” என்றும் தெரிவித்தார்.அதே நேரத்தில் தைவான் அதிபர் லாய் சிங்–டே–ன் செய்தித் தொடர்பாளர், “அமெரிக்க ஆயுத விற்பனைகள் அமெரிக்காவின் பாதுகாப்பு உறுதிப்பாட்டின் ஒரு பகுதி என்றும், பிராந்திய அச்சுறுத்தல்களுக்கு எதிரான கூட்டு தடுப்பு நடவடிக்கை என்றும் சுநரவநசள செய்தி முகமையிடம் தெரிவித்தார்.
முன்னதாக, 2025 பிப்ரவரியில், அமெரிக்க வெளியுறவு துறை தனது இணையதளத்தில் இருந்து “தைவான் சுதந்திரத்தை அமெரிக்கா ஆதரிக்காது” என்ற வரியை நீக்கியது. இதற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.
பொருளாதார ரீதியாக, அமெரிக்காவுடனான தற்போதைய வர்த்தகப் போர் மற்றும் இரானில் நிலவும் மோதல் ஆகியவை ஷி ஜின்பிங்கிற்கு கெட்ட செய்தியாக இருக்கலாம். ஆனால் கருத்தியல் ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் அவை ஒரு பரிசு போன்றவை, மேலும் தான் வலுவான நிலையில் இருப்பதாக அவர் உணர்ந்து கொண்டு தான் இருக்கிறார் என்பதே நிதர்சனமான உண்மையாகும்.
ஈரான் மற்றும் அமெரிக்கா இடையேயான போரில் இருந்து உலகம் விடுபட வேண்டும் என்று சீனா தெளிவாக கோடிட்டுக் காட்ட பல்வேறு காரணங்கள் இருக்கும் நிலையில் ஈரானின் சுயாதீன உரிமைகளை சீனா எந்தவொரு நிலையிலும் விட்டு கொடுக்க தயாராக இல்லை என்பதே உண்மையாகும்அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் எப்போதும் உண்மைக்கு புறம்பாக பல்வேறு கருத்துக்களை சமீபத்திய நாட்களில் மிகுதியாக கூறி வரும் நிலையில் தற்போது அவரது கருத்தும் அவ்வாறே பார்க்க கூடியதாக உள்ளது குறிப்பிடத்தக்கது.
அதேநேரத்தில் இந்தப் போர் முடிவுக்கு வர வேண்டும் என்பதில் சீனா ஆர்வமாக உள்ளது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. நாட்டின் பொருளாதாரம் ஏற்கனவே மந்தமான வளர்ச்சி மற்றும் வேலையின்மையுடன் போராடி வருகிறது. உயர்ந்து வரும் எண்ணெய் விலைகள், ஜவுளி முதல் பிளாஸ்டிக் வரை பெட்ரோ கெமிக்கல் பொருட்களால் தயாரிக்கப்படும் பொருட்களின் விலையை உயர்த்தியுள்ளன. சீனாவில் உள்ள சில உற்பத்தியாளர் களுக்கு, உற்பத்திச் செலவு 20% வரை அதிகரித்துள்ளது.
கடந்த வாரம் இரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி சீனாவுக்கு மேற்கொண்ட பயணம், மத்திய கிழக்கில் சீனாவுக்கு எந்த மாதிரியான வலிமையையும் செல்வாக்கும் உள்ளது என்பதைக் காட்டுவதற்காக வடிவமைக்கப் பட்டது போல் தோன்றியது.அமெரிக்கா இதனை உன்னிப்பாகக் கவனித்து வந்தது. சீனாவை பொருத்தவரை ஈரான் என்பது ஒரே தனியொரு நாடாக அவர்கள் இந்த போரை பார்க்கவில்லை. மாறாக சீனாவிற்கு எதிரான பல்வேறு நிலைகளில் அமெரிக்கா எடுத்து வரும் கடும் நடவடிக்கை களுக்கு எதிரான போராகவே இதனைத் சீனா உதவி வரும் நிலையில் ஈரான் நலன்களுக்கு எதிரான மனநிலை சீனா கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் இடையே இருக்கும் என்பதே நாம் நம்புவதற்கு எந்தவொரு நிலையிலும் சாத்தியக்கூறு இல்லை என்பதே நிதர்சனமான நிலையாகும்.
அதே நேரத்தில் அமெரிக்கா அதிபர் டிரம்பின் சமீபத்திய சீனப் பயணம் மற்றும் சீன அதிபர் ஷி ஜின்பிங் உடனான சந்திப்பிற்குப் பிறகும் இரான் போர் மற்றும் ஹோர்மூஸ் நீரிணை விவகாரத்தில் எந்த ஆக்கப்பூர்வமான முடிவுகளும் எட்டப்படாத சூழலில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் சாத்தியமான ராணுவ நடவடிக்கைகள் பற்றிய யூகங்கள் மேலும் அதிகரித்துள்ளன.
இந்த நிலையில் சீனாவுக்குப் புறப்படுவதற்கு முன்பாக இரானை மீண்டும் எச்சரித்த டிரம்ப், அமெரிக்கா உடன் ஒப்பந்தம் மேற்கொள்ளவில்லை என்றால் இரான் ‘அழிக்கப்படும்’ எனத் தெரிவித்தார்.
முன்னதாக இரான் உடனான போர் நிறுத்தம் மிகவும் எளிதில் முறியக்கூடிய நிலையில் இருப்பதாக கூறினார் டிரம்ப்.
அமெரிக்கா –– சீனா இடையிலான பல்வேறு வகையான ஒப்பந்தங்களை நிறைவேற்ற அமெரிக்கா முயற்சி செய்த நிலையில் அமெரிக்கா ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் அவருடைய குழுவினரும் சீனா விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு செல்லும் முன் சீனாவில் தங்களுக்கு வழங்கப்பட்ட அணைத்து பரிசு பொருட்களையும் விமான நிலையத்தில் உள்ள குப்பை பெட்டியில் வீசி எறிந்து விட்டு புறப்பட்டு சென்ற நிலையில் அமெரிக்கா மற்றும் சீனா உறவு உண்மையில் வலுவான நிலையில் உள்ளதா என்பதை அறிந்து கொள்ள இதனை விட வேறொன்றும் சாட்சி தேவையில்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்...!

# மாத்தளையில் பொருளாதார மத்திய நிலையம்:

## மாகாண ஆளுநர் பேராசிரியர் அபேகோன் தெரிவிப்பு

(எம்.சதூர்தீன்)

இந்நாட்டில் சுற்றுலா திட்டத்தை மேம்படுத்தும் நோக்கில் பல சரக்கு பொருளாதார நிலையம் ஒன்றை மாத்தளையில் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாக மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ் .பி .எஸ் அபயகோன் தெரிவித்தார்.

மாத்தளை நக்கில்ஸ் சுற்றுலா நுழைவாயில் பல சரக்கு பொருளாதாரத்தை நிறுவுவதற்கான வர்த்தக வடிவமைப்பு திட்டத்தை சமர்ப்பிக்கும் நிகழ்வு மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ். பி. எஸ். அபயகோன் தலைமையில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்





வரையறுக்கப்பட்ட மாத்தளை கூட்டுறவு கிராமிய வங்கி, இத்திட்டத்தை நடைமுறைப் படுத்த உள்ளதுடன் அதற்காக வர்த்தக, வணிக, உணவு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் கால்நடை, கமத்தொழில், நீர் பாசன அமைச்சுகள், மத்திய மாகாண கூட்டுறவு சங்கம் திணைக்களங்கள் உள்ளிட்ட பல நிறுவனங்கள் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளனர். "பசுமை பலசரக்கு பெறுமதி சங்கிலித் தொடர் மற்றும் நக்கில்ஸ் சுற்றுலாக்கான நுழைவாயில்" எனும் கருப் பொருளில் இந்த பொருளாதார மத்திய நிலையம் மாத்தளை பலாபத்வல கோங்கமுல பகுதியில் இது ஸ்தாபிக்கப்பட உள்ளது. இந்நாட்டில் முதலாவது பல சரக்கு நிலையமாக இது ஆரம்பிக்கப்பட உள்ளது. 2028 ஆம் ஆண்டு திட்டம் நடைமுறைபடுத்தப்படும் இத்திட்டத்தின் மூலம் பல சரக்கு உற்பத்தியில் ஏற்படும் விவசாயிகள் 40 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் நன்மை அடைய உள்ளனர். அத்துடன் பாரம்பரிய கைவினை கைத்தொழிலில் ஈடுபாடும் பலரும் பயன்பெற உள்ளதாகவும் ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மத்திய மாகாண கூட்டுறவு ஆணையாளர் பி.டபிள்யு.சிரோமனி கூட்டுறவு கிராமிய வங்கியின் தலைவர் சிரிவர்தன அமைச்சுக்களின் அதிகாரிகள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# உலகத் தமிழ் கலைக் கூடத்தினால் இர்ஷாத் ரஹ்மத்துல்லாஹ்விற்கு தங்க மகன் விருது வழங்கி கௌரவிப்பு





(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

தமிழ் கலை மற்றும் பண்பாடு மற்றும் தமிழ் ஊடக துறைக்கு சிறப்பான பங்களிப்புகள் மற்றும் அர்ப்பணிப்பான சேவைகளைப் பாராட்டி இலங்கையினை சேர்ந்த ஊடகவியலாளர் தேசமாணி இர்ஷாத் ரஹ்மத்துல்லாவுக்கு 2026 ம் ஆண்டின் தங்க மகன் விருது வழங்கி கௌரவித்ததுள்ளது.

தமிழகத்தின் காஞ்சிபுரம் திருநீலகண்டர் திருமண மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வினை வராஹி கல்வியல் அறக்கட்டளை மற்றும் உலகத் தமிழ் கலை பண்பாட்டு கலைக்கூடம் வழங்கும் ஜாக்கி உலக சாதனை திறமைக்கான விருதுகள் வழங்கும் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

சேவை செம்மல் சேவரத்னா, உலகத்தமிழ் கலை பண்பாட்டு கூடத்தின் சர்வதேச தலைவர் கலாநிதி எஸ் எம் ரஷ்மி ஷரூமி இந்த விருதினை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் சர்வதேச பொருளாளர் கலாநிதி ஆர். பாண்டியன்,அகில இந்திய துணை தலைவி ஜெயசுதா ஜயபால், இயக்குனர் முனைவர் மீரான் ஜீ முஹம்மது,அகில் இந்திய தலைவர் டாக்டர் ரத்தினவேல், அகில இந்திய செயலாளர் கலாநிதி பிரகாஷ், தென்னிந்திய மகளிர் அணி செயலாளர் திவ்யஸ்ரீ பாபு உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# பேருவளை அரூஸ் அஸாத் இலங்கை வக்:ப் சபை உறுப்பினராக நியமனம்

(பி.எம். முக்தார்)



பேருவளை, மருதானையைச் சேர்ந்த அல்-ஹாஜ் அரூஸ் அஸாத் இலங்கை வக்ஃப் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பேருவளை நகர சபை முன்னாள் உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தி களுத்துறை மாவட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான இவர் முன்னணி சமூக சேவையாளராவார். கடந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பில் களுத்துறை மாவட்டத்தில் போட்டியிட்டு அதிக வாக்குகளையும் பெற்றார்.

இலங்கையின் முதலாவது பள்ளிவாசலான மஸ்ஜிதுல் அப்ராரின் முன்னாள் பிரதம தர்மகர்த்தாவான மர்ஹூம் எம்.ஐ.எம். அஸாத் ஜே.பி மர்ஹூமா ஹாஜியானி ஸித்தி மபாஹிரா தம்பதிகளின் புதல்வரான இவர், இலங்கையின் முதலாவது முஸ்லிம் பெண்கள் கல்லூரியான அல் பாஸியத்துல் நஸ்ரியா மகளிர் கல்லூரி, மாளிகா ஹேன ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவரும் ஆவார்.

அப்ரார் கல்வி நிலையம்,அப்ரார் ஸகாத் நிதியம் ஆகியவற்றின் அங்கத்தவரான அரூஸ் அஸாத், அல் பாஸியத்துல் நஸ்ரியா ஆண்கள் பாடசாலை மற்றும் அல் பாஸியத்துல் நஸ்ரியா பெண்கள் பாடசாலை ஆகியவற்றின் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளராகவும் பதவி வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அப்ரார் பவுண்டேஷனின் 13 வது கட்ட புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு







(பி.எம். முக்தார்)

பேருவளை பிராந்தியத்தில் கல்வி கற்கும் திறமையான மாணவர்களைக் கண்டறிந்து, அவர்களின் கல்வி வாழ்வுக்கு ஒளியூட்டும் நோக்கில் 'பேருவளை அப்ரார் பவுண்டேஷன்' நிறுவனம் ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக மகத்தான சேவையாற்றி வருகிறது. கல்விக் கண்களைத் திறக்கும் இந்த பவுண்டேஷனின் அரிய பணியினால், ஏற்கனவே உதவிபெற்ற பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் இன்று பல்கலைக் கழகப் படிப்பை நிறைவு செய்து, பட்டதாரிகளாக உயர் பதவிகளில் ஜொலிப்பதோடு, இன்னும் பலர் பல்வேறு கல்வி நிறுவனங்களில் தங்களது உயர் கல்வியைத் தொடர்ந்து வருகின்றனர்.

இப்புலமைப்பரிசில் திட்டத்தில் இனம், மதம் கடந்து சிங்கள மொழிப் பாடசாலைகளில் பயிலும் தகுதியான மாணவர்களும் உள்வாங்கப்பட்டு உதவி பெற்று வருகின்றமையானது இப்பிராந்தியத்தில் பல்லின சமூகங்களுக்கிடையிலான நல்லுறவையும், சக வாழ்வையும் பலப்படுத்தும் ஒரு முன்மாதிரியான விசேட அம்சமாகப் பார்க்கப்படுகிறது.

அந்த வகையில், அப்ரார் கவுண்டேஷனின் 13 வது புலமைப் பரிசில் வழங்கும் திட்டம் இன்றைய தினம் பேருவளை, மருதானையில் அமைந்துள்ள 'மனாரா ரிஸோர்ட்' வளாகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதன்போது, பேருவளைப் பிராந்தியத்தைச் சேர்ந்த சுமார் 67 திறமையான மாணவர்கள் இம்முறைக்கான புலமைப்பரிசில் உதவிகளைப் பெற்றுக்கொண்டனர். வெறும் நிதியுதவியோடு நின்று விடாமல், இம்மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாகக் கண்காணித்து, நேர்காணல்கள் மற்றும் ஆன்லைன் (நிகழ்நிலை) வாயிலாக அவர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களையும், ஊக்கவிப்புகளையும் அப்ரார் பவுண்டேஷன் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வானது அப்ரார் பவுண்டேஷனின் தலைவரும், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் முன்னாள் பொருளாளருமான அஷ்ஷெய்க். கலாநிதி. அஸ்வர் அஸாஹிம் (அஸ்ஹரி) தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் வரவேற்புரையையும், நிறுவனத்தின் பின்னணி மற்றும் இலக்குகள் குறித்த விளக்கத்தையும் "எழுச்சி பெற்ற சமூகம், கல்விச் சமூகமே!" எனும் தொனியில் ஜாமியா நளீமியா கலாபீடத்தின் இஸ்லாமிய கற்கைகள் பீட இறுதி வருட மாணவர் உஸாமா நவாஸ் ஆற்றினார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகப் பிரபல வைத்தியர் திருமதி. சந்திரிகா கலந்து சிறப்பித்து, மாணவர்களுக்கான சரியான உணவுப் பழக்கவழக்கங்கள், போஷாக்கான உணவுகளை உட்கொள்வதன் முக்கியத்துவம் மற்றும் இன்றைய நவீன உலகில் ஸ்மார்ட்போன் உள்ளிட்ட தொலைத்தொடர்பு சாதனங்களை நேரத்தை வீணடிக்காமல் ஆக்கபூர்வமான கல்வி வழிகளுக்கு எவ்வாறு பயன் படுத்துவது போன்ற விடயங்கள் குறித்து மிகத் தளிவான, அழகான விளக்கங்களை மாணவர்களுக்கு வழங்கி விழிப்புணர்வூட்டியமை குறிப்பிடத்தக்கது.

# யதார்த்தத்தை பேசுகின்ற சமூக நாவல் “வாப்பா”



நாச்சியாரீவு பர்வீன்

“ஒற்றையடி பாதை”, “இயற்கை இயல்பு”, “காதோடு தான் நான் பேசுவேன்” ஆகிய படைப்புக்களை தொடர்ந்து இம்முறை ஒரு நாவலின் மூலம் வாசகர்களை வந்தடைந்திருக்கின்றார் பஸ்லி ஹமீட். ஈழத்து நவீன இலக்கியப் பரப்பில் குறிப்பாக, ஹைக்கூ கவிதை ஆக்கத்தில் தனக்கென்று தனித்துவமான ஓர் இடத்தினை தக்க வைத்துக்கொண்ட ஓர் ஆளுமையாக திகழ்கின்றார் இவர். புனைகதை இலக்கியத்தின் நாவல் உலகிற்கு இவர் புதிய அறிமுகம் என்றாலும் புனைகதை இலக்கியங்களுள் ஒன்றான சிறுகதை உலகிற்கு புதியவர் அல்ல. அவ்வண்ணம் இவர் சிறுகதையாக்கிய ஒரு உண்மை சம்பவத்தை அடிப்படையாகக் கொண்ட கதையின் நீண்ட கதை வடிவமே இன்று எம் கரங்களில் “வாப்பா” எனும் நாவலாக தவழ்ந்து கொண்டிருக்கிறது.
உண்மை சம்பவங்களுடன் கூடிய நடைமுறை வாழ்க்கையை சித்திரிக்கும் நீண்ட புனைகதை வடிவமே நாவலாகும். நாவல் எனும் இலக்கிய வடிவமே தமிழில் தோன்றிய முதலாவது நவீன ஆக்க இலக்கிய வடிவமாகும். அதுவரை காலமும் தன்னிகரில்லா தலைவனையும் இறைவனையும் பாட்டுடை தலைவர்களாகக் கொண்டு ஆக்கப்பட்ட தமிழ் இலக்கியங்கள் நாவலின் வருகையுடன் சாதாரண மனிதர்களையும் சாதாரண மனிதர்களின் வாழ்வியலையும் பேசு பொருளாக கொள்ளத் தொடங்கின. பொதுவாக வாழ்க்கையை பிரதிபலிக்கின்ற நிலைக் கண்ணாடியாக நாவல் அமைகிறது.
ஈழத்து தமிழ் நாவல் இலக்கியத்திற்கென்று காத்திரமானதொரு இலக்கிய பாரம்பரியம் இருக்கின்றது. தமிழின் முதல் நாவலான ‘பிரதாப முதலியார் சரித்திரம்’ தோன்றி ஒரு சில வருடங்களிலேயே ஈழத்தின் முதல் தமிழ் நாவலான ‘அசன்பே சரித்திரம்’ வெளி வருகின்றது. இதனைத் தொடர்ந்து ஈழத்தின் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் இருந்தும் மலையகத் திலிருந்தும் காத்திரமான தமிழ் நாவல்கள் வெளிவந்துள்ளன. அந்த வகையில் தென்னிலங்கையிலிருந்தும் திக்குவல்லை ஷம்ஸ், திக்குவல்லை கமால், இம்தியாஸ், சுலைமா சாமி, இர்பானா ஜப்பார், ஸுலைமா ஏ. சமீ, ஸனீரா காலிதீன், இர்ஷாத் ஹஸன், ஷாரா முதலானோர் நாவல் இலக்கியத்திற்கு பங்காற்றி உள்ளனர் அவர்களைத் தொடர்ந்து தென்னிலங்கை தமிழ் நாவல் இலக்கியத்திற்கு மேலும் வலு சேர்க்கும் வகையில் சிறந்த ஒரு புது வரவாக பஸ்லி ஹமீடின் அறிமுகம் அமைகிறது.
புலனம் வழியே தொடர்கதையாக வந்த இவ்வாக்கம் நூல் உருவாக எம் கரங்களை கிட்டி இருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சி. மொத்தமாக 184 பக்கங்களைக் கொண்டு அமையும் வாப்பா நாவலானது பஸ்லி ஹமீதின் தரமான படைப்பாக்கமாக அமைகின்றது. இந் நாவலின் கதைக் கரு மற்றும் களத்தை நோக்குவோமாயின் தென்னிலங்கை பிராந்தியத்தில் வாழ்கின்ற மிக எளிமையான முஸ்லிம் குடும்பம் ஒன்றின் வாழ்வியலை மிக அருமையாக சித்திரித்து செல்கின்றது.
முஸ்லிம் சமூகத்தின் வாழ்வியல் விழுமியங்கள் மற்றும் கால மாற்றத்தினால் ஏற்படும் மனப் போராட்டங்களை இந்நாவல் மிக நுணுக்கமாக பேசுகிறது. காசிம் காக்கா எனும் பிரதான பாத்திரத்தை சுற்றி கதை நகர்ந்து செல்கின்றது. காசிம் காக்கா சொஹறா உம்மா தம்பதிகளின் நான்கு பிள்ளைகளும் பெண் பிள்ளைகளாக இருப்பதனால் அவர்கள் எதிர்கொள்கின்ற சவால்களும் அவர்கள் சமூகத்தில் ஒரு நிலைக்கு வர எடுக்கக்கூடிய பிரயத்தனங்களும் போராட்டங்களும் கதையின் கருவாக அமைகின்றது.
காசிம் காக்காவிற்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான உறவு,சிந்தனைகள், முரண்கள், எதிர்பார்ப்புகள் முதலான வற்றின் ஒரு திரட்சியான பதிவாக வாப்பா அமைகிறது.
இந்நாவலின் கதை நிகழ்களங்கள் அதன் ஆன்மாவாக விளங்குகின்றன. காசிம் காக்காவின் “ட” வடிவ சிறிய வீடே நாவலின் பிரதான கதைக்களம். கதைக்கள விவரிப்பின் போது ஆசிரியர் தன் வாசகர்களையும் காசிம் காக்காவின் வீட்டிற்குக் கூட்டிச் சென்று விடுகின்றார். அத்தனை துல்லியமான வர்ணனை. அவரது வர்ணனை மூலமாக காசிம் காக்காவின் வீட்டு பன் பிய்ந்து போன சாய் கதிரைகளில் வாசகர்களாகிய நாமும் அடிக்கடி அமர்ந்து விடுகின்றோம். காசிம் காக்காவின் வீடு மாத்திரம் இன்றி கதையில் பல நிகழ்களங்கள் காணப்படுகின்றன. நாவலின் சுவாரசியத்தை அதிகப்படுத்தும் வகையில் நேறலழசம, USA, Edge Hill hospital, Liverpool, England, Oman International School, Muscat, Oman என பல கதை நிகழ்களங்கள் காணப்படுகின்றன.
ஒரு நாவல் எழுப்பும் அதிர்வு வாசகனிடம் நீண்ட நேரம் நீடித்து நிற்க வேண்டும். அவ்வாறு வாசகனின் உள்ளத்தில் அதிர்வை ஏற்படுத்தக்கூடிய பாத்திரங்களை உருவாக்குவதிலும் அவற்றை வழிநடத்திச் செல்வதிலும் தான் ஒரு நாவலின் வெற்றி தங்கி இருக்கின்றது. உயிருள்ள பாத்திரங்களை உருவாக்கி அவற்றை எம் மத்தியில் உலாவ விடுவதிலேயே ஆசிரியரின் திறமை வெளிப்பட்டு நிற்கும். பாத்திரங்களின் வளர்ச்சியில் தான் நாவலும் வளர்கின்றது. அவற்றின் செயற்பாடுகள், சமூகத்தோடு பாத்திரம் கொண்டுள்ள உறவு, பிறரோடு உரையாடும் உரையாடல்கள் போன்றவை பாத்திரத்தின் வளர்ச்சிக்கு துணை நிற்கின்றன. பஸ்லி ஹமீடின் முழு ஆளுமையும் இந்த பாத்திர வார்ப்பில் வெளிப்பட்டு நிற்கின்றது. காசிம் காக்கா, சொஹறா உம்மா, பரீஸா, நசீரா, சபீனா, றிஸானா, முபாரக், மபாஸ், இலியாஸ் துரை, ரிஸ்வான் எனப் பல கதை மாந்தர்கள் நாவலில் உலாவினாலும் ஒவ்வொரு பாத்திரமும் வாசகனின் ஆழ்மனதில் நிலைத்து நிற்குமாறு படைக்கப்பட்டுள்ளது.
இந் நாவல் ஏனைய நாவல்களில் இருந்தும் தனித்து தெரிய காரணம் பஸ்லி ஹமீடின் நேர்மறையான பாத்திர வார்ப்பே ஆகும். இந்நாவலில் எந்தவொரு கதாபாத்திரமும் எதிர்மறையாக படைக்கப்படவில்லை.
பொதுவாக எதிர்மறையான கதாபாத்திரங் களைக் கொண்டே சில நாவலாசிரியர்கள் தம் கதையை நகர்த்திச் செல்வர். ஆனால் பஸ்லிஹமீட் அவர்களிலிருந்தும் வித்தியாசமானவர் என்பதை இந் நாவல் எடுத்துக்காட்டுகின்றது. கால ஓட்டத்தில் காசிம் காக்காவை விட்டு அவரது பிள்ளைகள் பிரிய வேண்டிய சூழல் வந்தபோது கூட கதையின் போக்கில் எந்த ஒரு எதிர்மறை சிந்தனையையும் அவர் புகுத்தவில்லை. கதையில் எந்த அளவு இலட்சியப் பெண் பாத்திரங்கள் முக்கியத்துவப் படுத்தப்பட்டு இருக்கின்றார்களோ அதே அளவு முக்கியத்துவம் முபாரக், மபாஸ், ரிஸ்வான் போன்ற கதாபாத்திரங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. பாத்திரப் படைப்பாக்க உத்தியில் பாத்திர முடிப்பும் ஓர் முக்கியமான விடயம் ஆகும். பாத்திரங்களுக்கு ஏற்படும் முடிவை கொண்டுதான் பாத்திரங்கள் வாசகர்களின் மனதில் இடம் பெறுவர். திருமணம் அல்லது ஒரு குறிக்கோள் நிறைவேறுதல் போன்ற இன்ப முடிவாக இருக்கலாம் இல்லையேல் மரணம் அல்லது ஒரு குறிக்கோளை நிறைவேற்றுவதில் ஏற்படும் தோல்வி போன்ற துன்ப முடிவாக இருக்கலாம். எந்த முடிவாக இருந்தாலும் அம் முடிவு பாத்திரத்திற்கு இயற்கையாக ஏற்பட்ட முடிவாக இருத்தல் வேண்டும். அதை இந்நாவலில் மிகக் கச்சிதமாக செய்திருக்கிறார் பஸ்லி ஹமீட். சொஹறா உம்மா நசீரா போன்ற பாத்திரங்களுக்கு அவர் கொடுத்த முடிப்பு வாசகர்களின் உள்ளத்தில் கடுமையான தாக்கத்தினை உண்டு பண்ணும் என்பதில் ஐயமில்லை.



மேலும் இந்நாவலுக்குள்ளால் மேற்கிளம்புகின்ற முக்கியமான செய்திகள் மிகவும் கவனிக்கத்தக்கவை. ஒரு சமூகம் பற்றிய பார்வையை அகலிக்கக் கூடிய தன்மை இந்நாவலில் தெரிகிறது. யாருமற்று அனாதை இல்லத்தில் வளர்ந்த முபாரகிற்கு காசிம் காக்கா தனது மூத்த மகள் பரீஸாவை திருமணம் செய்து வைப்பதும் இலியாஸ் துறையின் மகனுக்கு றிஸானாவை பெண் கேட்டு வருவதுமான சந்தர்ப்பங்களில் சமூகத்தில் காணப்படக்கூடிய சில அடுக்கமைவுகளை கட்டுடைப்பு செய்கிறார் நாவலாசிரியர். இலக்கியம் என்பது நயப்பதற்கானது என்பதை தாண்டி அது சமூகத்தின் நலனை ஏதாவது ஒரு முறையில் முன்னிறுத்தக்கூடியதாக அமைய வேண்டும். அதை செவ்வனே செய்கிறது வாப்பா எனும் இந்நாவல். நாவல்களில் சமூக நலன் முன்னிறுத்தப படும் போது அப்படைப்பு பிரச்சாரத்தொனி உடையதாக மாறி ஒரு வறட்டு தன்மையை அப்படைப்பில் ஏற்படுத்திவிடும். ஆனால் பஸ்லி ஹமீடின் மொழியாளுமையால் இந்நாவலின் எந்த ஒரு இடத்திலும் பிரச்சாரத் தொனி இருக்கவில்லை. நாவலாசிரியர் தன்னுடைய முன்னுரையில் குறிப்பிடுவது போல “இன்று எம்மில் பலரின் வீடுகளை முதியோர் இல்லங்களாக மாற்றி வைத்திருக்கும் அவல நிலையே வாப்பா நாவல் பேசுகிறது” என்று சமூக நலக் கருத்தை அவர் எத்தி வைத்தாலும் அக்கருத்தைச் சொல்ல வந்த விதத்தில் நாவலாசிரியராக அவர் வெற்றி கண்டு இருக்கின்றார்.
பஸ்லி ஹமீடிற்குள் சிறந்த கவித்துவமும் படைப்பாளுமையும் நிரம்பி இருக்கின்றது என்பதற்கு இந்நாவல் சாட்சியாகின்றது. அதற்கு பரீஸாவை முபாரக் பெண் கேட்டு வந்த சந்தர்ப்பத்தில் வரக்கூடிய விவரிப்பினை எடுத்துக்காட்டாக கூறலாம்.
“மேற்கு வானத்தில் அரைவட்ட நிலவு பிரகாசித்துக் கொண்டிருந்தது. அது மெதுவாக வளர்ந்து இன்னும் சில நாட்களில் முழுமையாக ஒளிவீச காத்திருந்தது. இருட்டுக்குள் புதைந்திருந்த தனது வீட்டு கதவைத் தட்டினார் காசிம் காக்கா. கதவு திறக்கப்பட்டதும் சிம்மினி விளக்கின் மஞ்சள் வெளிச்சம் லேசாக வெளியே பாய்ந்தது.”
மேலும் இந்நாவலின் மிகப்பெரிய பலமே இவரது எளிமையான எழுத்து நடை மற்றும் பிரதேச மொழிக் கையாளுகையாகும்.
தென்னிலங்கைக்கே உரிய தனித்துவமான பேச்சு வழக்கை மிகவும் லாவகமாக கையாண்டு கதைக்கு உயிர்ப்பளித்துள்ளார் நாவலாசிரியர். இவரது எழுத்துக்கள் எந்த ஒரு மிகைப்படுத்தல்களும் இன்றி அன்றாட வாழ்க்கையை அதன் யதார்த்தத்தை இயல்பான தன்மையுடன் விவரித்துச் செல்கின்றன. மேலும் ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியிலும் அடுத்த அத்தியாயத்தின் மீதான எதிர்பார்ப்பை மேற்கிளப்புகின்றார். அந்த வகையில் இந் நாவல் வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்களையும் சித்தரிக்கின்றது.
இத்தகைய மனித சமூகத்தின் வாழ்வியல் சிக்கல்களையும் அதன் உயர்வையும் சிறுமைகளையும் எம் மத்தியில் உள்ள கதை மாந்தர்களைக் கொண்டு மிக அற்புதமாக சிருஷ்டித்துள்ள பணியை செய்த பஸ்லி ஹமீடுக்குப் பாராட்டுக்கள். இந்த அற்புதமான நாவலை எமக்குத் தந்த பஸ்லி ஹமீட் அவர்கள் நாவல் துறையில் இன்னும் அக்கறை செலுத்துவாரானால் ஈழத்து தமிழ் நாவல் இலக்கிய வரலாறுஉ பேசும் அருமையான நாவலாசிரியராக அவர் மிளிர்வார் என்ற உறுதியான நம்பிக்கை இருக்கிறது.

**சுமையா ஷரிபுதீன்**

## அன்பான வாசகர்களே!

**அறிவுக்கரை பகுதிக்கு உங்களது இலக்கியக் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் என உங்களது ஆக்கங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள் தரம் கண்டு பிரசுரிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்க கீழே உள்ள whatsapp இலக்கத்தை பயன்படுத்தவும்.**

0767877876

# சவூதி அரேபிய அரசின் இவ்வாண்டு ஹஜ்ஜின் பிரமாண்ட முன்னேற்பாடுகள் மற்றும் சேவைகள்

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

*2026 ஆம் ஆண்டிற்கான ஹஜ்ஜுக் குரிய பிரமாண்டமான முன்னேற்பாடுகள் மற்றும் சேவைகளை சவூதி அரேபிய அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது.*
*அதனடிப்படையில், இம்முறை ஹஜ்ஜுக்காக வரும் யாத்ரீகர்களுக்காக 3000 நவீன அம்பியூலன்ஸ் வாகனங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.*
*11 வான்வழி அம்பியூலன்ஸ் (helicopter) சேவைகள் முழு நேர பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளன.*
*20,000க்கும் அதிகமான மருத்துவப்படுக்கைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.*
*52,000க்கும் மேற்பட்ட மருத்துவ மற்றும் சுகாதாரத் துறை பணியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.*
*7,700 அவசரகால மருத்துவ உதவியாளர்கள் (Paramedics) தயார் நிலையில் உள்ளனர்.*
*25 அவசர சிகிச்சை மையங்கள் ஹாஜிமார்களின் சேவைக்காக இயங்குகின்றன.*
*மேலும், ஹாஜிமார்களின் உடல் நலத்தைப் பாதுகாக்க நவீன தொழில்நுட்பங்களும் விரிவாக பயன்படுத்தப்படுகின்றன.*
*ஹாஜிமார்களின் உடல்நிலை மாற்றங்களை தொலை நிலையிலிருந்தே கண்காணிக்க ஸ்மார்ட் வொட்ச் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.*



*புனித மஷாஇர் பகுதிகளில் மருந்துகள் மற்றும் மருத்துவ மாத்திரைகளை விரைவாகக் கொண்டு செல்ல ட்ரோன் சேவைகள் பயன்படுத்தப்படுகின்றன.*
*ஹஜ் காலத்தில் அவசர மற்றும் சிக்கலான அறுவை சிகிச்சைகளுக்காக ரோபோ தொழில்நுட்பங்களும் செயற்படுத்தப்பட்டுள்ளன.*
*அல்லாஹ்வின் விருந்தினர்களாக வருகை தரும் ஹாஜிமார்களின் பாதுகாப்பும் நலனும் உறுதி செய்யப்பட வேண்டும் என்ற நோக்கில், சவூதி அரேபிய அரசு இந்த ஆண்டு ஹஜ்ஜிற்காக மிகப்பெரிய மருத்துவ மற்றும் அவசரகால முன்னேற்பாடுகளை மேற்கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.*

# கருமலையூற்று வீதித் தடை முழுமையாக அகற்றப்பட வேண்டும்: மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை

## இம்ரான் மகரூப் எம்பி வலியுறுத்தல்

(எஸ்.ஏ.பறூஸ்)





திருகோணமலை, கருமலையூற்று கடற்கரைப் பகுதியில் விமானப் படையினரால் ஏற்படுத்தப்பட்ட வீதித் தடை மற்றும் அங்கு நிலவும் பதற்றமான சூழல் குறித்து பாராளு மன்ற உறுப்பினர் இம்ரான் மக்ரூப் (14) அப்பகுதிக்கு நேரடி கள விஜயம் மேற்கொண்டு மீனவர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

இக்கள விஜயத்தின் பின் அவர் பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்.

கடந்த மே மாதம் 5ஆம் திகதி காலை, கருமலையூற்று கடற்கரைப் பகுதியில் பல தசாப்தங்களாக பொதுமக்கள், மீனவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்தி வந்த பிரதான வீதியில், விமானப்படை யினரால் எவ்வித முன்னறிவிப்புமின்றி திடீரென வீதி தடை ஒன்று அமைக்கப்பட்டது. எவ்வித அனுமதியுமின்றி மேற்கொள்ளப் பட்ட இந்த நடவடிக்கையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன், மீனவர்கள் தமது வாழ்வாதாரத் தொழிலை முன்னெடுக்க முடியாத நிலையும் உருவானது.

இந்த விவகாரம் தொடர்பில் உரிய அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தியபோது, குறித்த வீதித் தடை அகற்றப்படும் என மாவட்ட பிரதி அமைச்சர் அன்றைய தினமே உறுதியளித்துவீதித் தடை முழுமையாக அகற்றப்பட்டுவிட்டதாகக் கூறப்படும் செய்திகள் கள நில வரத்திற்கு முரணாக உள்ளன.

நான் மேற்கொண்ட கள விஜயத்தின் போது, அகற்றப்பட்டதாகக் கூறப்பட்ட கடவை இன்னும் வீதிக்கு அருகிலேயே காணப் படுவதையும், அப்பகுதியில் தொடர்ச்சியாக விமானப்படை அதிகாரிகள் நிலைகொண்டிருப்ப தையும் அவதானிக்க முடிந்தது.

இது மக்களிடையே பெரும் சந்தேகத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் பொதுமக்கள் பயன்படுத்தும் பொது வீதியை மூடுவதற்கு யாருடைய உத்தரவின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டது? முறையான முன்னறிவித்தல் இன்றி இவ்வாறான ஒரு தன்னிச்சையான நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான காரணம் என்ன?

பிரச்சினை தீர்க்கப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும், அகற்றப்பட்ட கடவை ஏன் இன்னும் அந்த இடத்திலேயே வைக்கப்பட்டுள்ளது?

கடவை அகற்றப்பட்டதாகக் கூறப்பட்டு 9 நாட்கள் கடந்தும், ஏன் இன்னும் விமானப்படை அதிகாரிகள் அங்கிருந்து வெளியேறாமல் தங்கியுள்ளனர்? உள்ளிட்ட பல்வேறு கேள்விகள் எழுகின்றன. அத்துடன், மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் பொதுமக்களின் சுதந்திரமான நடமாட்டத்தையும் பாதிக்கும் இவ்வாறான நடவடிக்கைகள் குறித்து அரசாங்கம் தெளிவான விளக்கத்தை வழங்க வேண்டும்.

வெறுமனே கண்துடைப்பு நடவடிக்கைகளைச் செய்யாமல், குறித்த வீதித் தடையை அவ்விடத்திலிருந்து முழுமையாக அகற்றி, மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மக்ரூப் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

# முஸ்லிம் சமூக, அரசியல் விவகாரங்களை அக்கறையுடனும் ஆழமாகவும் அறிக்கையிட்டவர் டி.பி.எஸ். ஜெயராஜ்

## ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் அனுதாபம்

(எம்.ஏ.முகமட்)



கனடாவில் காலமான இலங்கையின் மூத்த ஊடகவியலாளரும், அரசியல் ஆய்வாளருமான டி.பி.எஸ். ஜெயராஜ் (வயது 72) அவர்களின் மறைவு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

இலங்கையின் மிகச்சிறந்த ஊடகவிய லாளர்களில் ஒருவராகவும், அரசியல் ஆய்வாளராகவும் மதிக்கப்பட்ட டி.பி.எஸ். ஜெயராஜ் அவர்கள், பல தசாப்தங்களாக நாட்டின் இனப் பிரச்சினை, உள்நாட்டு யுத்தம் மற்றும் சமகால விவகாரங்கள் குறித்து ஆழமான பார்வைகளைத் தனது எழுத்துக்கள் மூலம் வெளிப்படுத்தியவர். அவரது துணிச்சலான ஊடகப் பணியும், காத்திரமான அரசியல் பகுப்பாய்வுகளும் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் பெருவாரியான வாசகர்களின் மதிப்பைப் பெற்றுத்தந்தன.

அவர் கனடாவில் வசித்து வந்த போதிலும், இலங்கை விவகாரங்களை ஆழமாக ஆராய்ந்து தொடர்ந்து எழுதி வந்தார். தனது துணிச்சலான எழுத்துக் களுக்காகக் கடுமையான அச்சுறுத்தல் களை எதிர்கொண்ட அவர், புலம் பெயர் தேசத்தில் வைத்து கொடூரமான முறையில் தாக்குதலுக்கும் உள்ளானார். எனினும், எந்தவொரு அச்சுறுத்தல்களு க்கும் அடிபணியாது, நேர்மையான முறையிலேயே தனது ஊடகப் பணியை அவர் இறுதிவரை முன்னெடுத்தார்.

குறிப்பாக, முஸ்லிம் சமூக, அரசியல் விவகாரங்களில் ஆழ்ந்த ஈடுபாட்டைக் கொண்டிருந்த அவர், முஸ்லிம் சமூகம் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகளைத் தனது பேனா முனையின் மூலம் வெளிக் கொணர் வதில் முக்கிய பங்காற்றி னார். வட மாகாண த்திலிருந்து முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப் பட்டமை, கிழக்கு மாகாண விவகாரங்கள் மற்றும் நாட்டின் இக்கட்டான காலகட்டங்களில் முஸ்லிம்சமூகம் எதிர் காண்ட இனவாத அச்சுறுத்தல்கள் ஆகியவற்றை அவர் தனது கட்டுரைகளில் முன்னிலைப் படுத்தினார்.

ஒடுக்கப்பட்ட மற்றும் விளிம்புநிலைச் சமூகங்களின் குரலாக ஒலிப்பதில் அவர் காட்டிய அர்ப்பணிப்பு என்றும் நன்றியுடன் நினைவுகூரத்தக்கது.

தனது தொழில்முறை ஆளுமைக்கு அப்பால், ஊடகத் துறைக்குள் நுழையும் இளம் ஊடகவியலாளர்கள் உட்பட சக ஊடகவியலாளர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் நண்பராகவும் அவர் விளங்கினார். ஊடகத்துறையினர் பலருக்கும் அவர் வழங்கிய வழிகாட்டல் களும், ஊக்கமும், நட்பும் என்றும் மறக்க முடியாதவை.

இந்தத் துயரமான வேளையில், அன்னாரின் மறைவினால் வாடும் அவரது மனைவி, குடும்பத்தினர்கள், நண்பர்கள், சக ஊடகவியலாளர்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள அவரது வாசகர்களுக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.




மாவனல்லை ஹஸ்மியா எழுதிய "அவள் ஓர் அத்திவாரம்" நூலின் சில பிரதிகளை நூலாசிரியர் ஹஸ்மியா மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரி அதிபர் எம். நௌஷாத் நதீரிடம் நூல் நிலையத்திற்காக கையளித்தபோது பிடிக்கப்பட்ட படம்.

# பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் சிலாபம் விஜயமும் புணரமைக்கப்பட்ட பொலிஸ் நிலைய திறப்பும்





(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் சேவை செய்யும் பொலிஸ் அதிகாரிகளை சந்தித்து, அவர்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடும் நிகழ்ச்சித் தொடரின் ஒரு பகுதியாக, புத்தளம் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை (15) நிலாவெளி ஹோட்டல் (Nilaveli Hotel) வளாகத்தில் பொலிஸ் அதிகாரிகளின் சந்திப்பு இடம்பெற்றது.

இச் சந்திப்பில், மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால மற்றும் பிரியந்த விஜேசூரிய ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பொலிஸ் அதிகாரிகள் எதிர்நோக்கும் தொழில் ரீதியான சிக்கல்கள் மற்றும் அவர்களின் நலன்புரி நடவடிக்கைகள் குறித்து விரிவாக கவனம் செலுத்தப்பட்டது. பொலிஸ் அதிகாரிகளின் பணியின் தன்மை மற்றும் அவர்கள் தினசரி எதிர்கொள்ளும் நடைமுறை சிரமங்கள் குறித்து அதிகாரிகளுடன் நேரடியாக கருத்துப் பரிமாற்றமும் இடம் பெற்றது.

அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்கவும், அதிகாரிகளின் நலன்புரி வசதிகளை மேம்படுத்தவும் அமைச்சர் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.

மேலும் புணரமைப்பு செய்யப்பட்ட சிலாபம் பொலிஸ் நிலையம் மற்றும் போக்குவரத்து பிரிவும் என்பனவும் இதன்போது திறந்து வைக்கப்பட்டது.

இதில் அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஏ. எச். எம். எச். அபயரத்ன, வடமேற்கு மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண, புத்தளம் மாவட்டம் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த சந்திரசிறி உள்ளிட்ட அரச மற்றும் பொலிஸ் துறையின் பல உயர் அதிகாரிகளும், மேலும் புத்தளம் மற்றும் சிலாபம் பிரிவுகளின் அனைத்து நிலை பொலிஸ் அதிகாரிகளும் பெருமளவில் பங்கேற்றனர்.

பொலிஸ் சேவையின் தரத்தை உயர்த்தவும், அதிகாரிகளின் மன நிறைவை உறுதிப்படுத்தவும் இத்தகைய நிகழ்ச்சிகள் நடத்தப்படு

# டிஜிட்டல் உலகில் மாணவர் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு செயலமர்வு





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

நீர்கொழும்பு - கொச்சிக்கடை தோப்பு ரோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தில், "டிஜிட்டல் உலகின் பாதுகாப்பும் பொறுப்பும்" என்ற தலைப்பில் மாணவர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு (15) வெற்றிகரமாக நடைபெற்றது.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் சமூகப் பணி இளமாணி பட்டப்படிப்பு இரண்டாம் வருட மாணவர்களின் "Youth and Development" பாட நெறியின் ஓர் அங்கமாக இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

சமூக ஊடகங்களின் தவறான பயன்பாடுகளிலிருந்து பாடசாலை மாணவர்களைப் பாதுகாக்கும் நோக்கில் நடைபெற்ற இந்த செயலமர்வில், பாடசாலையின் தரம் 11 மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வு விரிவுரையாளர் எப்.ஆர். ரமீஷாகானின் வழிகாட்டுதலின் கீழ், எஸ்.தர்ஷிகா, பீ. கிருத்திகா, சீ.தர்ஷ னி, எஸ். கஸ்தூரி, எம்.எம்.எப். சம்ஹா மற்றும் எம்.எச்.எப். சாதிகா ஆகிய இரண்டாம் வருட மாணவர்களின் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதான வளவாளராக சமூகப் பணி இளமாணி பட்டப் படிப்பின் மூன்றாம் வருட மாணவரும் ஊடகப் பயிற்றுவிப்பாளருமான ஏ. முஹம்மது இன்சாப் கலந்து கொண்டு, டிஜிட்டல் தளங்களைப் பாதுகாப்பாகவும் பொறுப்புடனும் பயன்படுத்துவது குறித்து மாணவர்களுக்கு தெளிவான விளக்கங்களை வழங்கினார்.

குழுப் பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு அமர்வுகள் மூலம் மாணவர்களுக்கு பயனுள்ள தகவல்கள் பகிரப்பட்டதுடன், இந்நிகழ்வு பாடசாலை சமூகத்தினரிடையே சிறந்த வரவேற்பைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் ஊடக முதுசொம் ஏ.எல்.எம்.சலீமுக்கான நினைவஞ்சலியும் மலர் வெளியீடும் நினைவுப் பேருரைகளும்





அஷ்ரப் ஏ சமத்

காலம் சென்ற கிழக்கின் ஊடக முதுசொம் ஏ.எல்.எம். சலீம் (நிருபர்) அவறுக்கான நினைவஞ்சலியும் , அவர் பற்றிய மலர் வெளியீடும், நினைவுப் பேருரைகளும் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் அரசியல்வாதிகள் பேராசிரியர்கள் சிரேஷ்ட ஊடகவியலாளர் நினைவுப் பேருரைகளை தலைநகர் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் - தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஏற்பாடு செய்து சனிக்கிழமை 16.05.2026 கொழும்பில் நடாத்தியது.

அவர் பற்றிய மலர் நூல் அவரது நினைவு கூட்டத்திற்கு வருகை தந்த சகலருக்கும் இலவசமாகவே பகிர்ந்தளிக்கப் பட்டது.

அந்நூலில் பேராசிரியர்கள் அவருடன பழகிய சேவையாற்றிய சிரேஷ்ட தமிழ் முஸ்லிம் ஊடகவியலாளர் என 37 பேர்கள் அவர் பற்றி ஊடகப் பயணத்தினை எழுதியுள்ளார்கள். அந் நூல். 160 பக்கங்கள் கொண்டது. அட்டைப் படத்தில் அவரது முழு அரைப்படமும் கிழக்கின் இன,யுத்த வடுக்கள் பற்றி அட்டையைக் கொண்டுள்ளது.

காலம் சென்ற சலீம் தமிழ் - முஸ்லிம்களுக்கு இணைப்பு பாலமாகவும் தேசிய ஐக்கியத்திற்கு உறவுப் பாலமாக விளங்கியுள்ளார் அவர் நல்ல நட்பன்புகளுடன் வாழ்ந்தார் மக்களோடு பழகினார் . தான் ஓர் ஊடகவியலாளர் என்பதை விட ஓர் பத்திரிகை நிருபர் என்ற பதவியினையே அவர் விரும்பினார் அவர் ஒரு செய்தி சேகரிப்பதற்கு அத் தளத்திற்குச் சென்று உண்மையான செய்தியை சேகரித்து அதனை புகைப்படம் எடுத்து அதனை அனுப்பி வைப்பார்... அவர் பல இளைய தலைமுறை ஊடகவிய லாளர்களையும் வளர்த்துவிட்டுச் சென்றார்........யுத்த காலத்தில் அவர் பல்வேறு இன ஐக்கியம் மறைந்த தலைவர் எம்.எச்.எம் அஷ்ரப் தொட்டு பல்வேறு கிழக்கு அரசியல் தலைவர்கள் ஐக்கியமாகவும் நேர்மையாகவும் செயல்பட்டார்.

17 வயதில் தனது நிருபர் தொழிலை ஆரம்பித்துள்ளார். அவர் உண்மையில் தனது கழுத்தில் கமராவை தொங்க விட்டு கையில் குறிப்பேட்டுன் பல மைல்கள் பிரயாணம் சென்று உண்மைச் செய்திகளை வெளியிடுவார் செய்தி வர முன்னர் தேசிய பத்திரிகை களுக்கு தொலைபேசி எடுத்து இன்று இந்தச் செய்தியை நான் பாக்ஸ் மூலம் அனுப்புகிறேன். அதற்காக செய்தித் தாளில் பக்கம் ஒதுக்கி வையுங்கள் என முன்கூட்டியே பத்திரிகை ஆசிரியர்களுக்கு அறிவித்துவிடுவார்........... அவர் என்றும் சலிம் நிருபர் என்று சொல்வதையே அவர் விரும்பினார்.

அவர் பற்றிய நூல் இரா துரைரத்தினம் தொகுத்துஉள்ளர், இந் நினைவு கூட்டம் இரா தலைமையில் நடைபெற்றது. மேடையில் வீற்றிருந்த சகலருக்கும் நூலின் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

பேரின்பராஜா அவர் நினைவுகளை அடிக்கடி உச்சரித்து தொகுத்து வழங்கினார்.




ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் அடுத்த ஊடக விருது வழங்கும் போது சலிம் பெயரில் வழங்குவதற்கு ரவுப் ஹக்கீம் அனுசரனை வழங்குவதாக ஒப்புதல் அளித்தார்.

மனோ கணேசன், இரா சாணக்கியன் (பா.உ) வீரகேசரி ஆசிரியர் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் ஸ்ரீகஜன் , முன்னாள் தினக்குரல் ஆசிரியர் வீ.தனபாலசிங்கம், இதழியல் கல்லூரியின் விரிவுரையாளர் தேவ கௌரி, விடிவெள்ளி ஆசிரியர் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் எம்.பி.எம். பைருஸ், ஊடகவியலாளர் நிக்சன், சிலோன் டுடே முன்னாள் ஆசிரியர் ஆனந்த பாலக்கிட்னர், யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம் நன்றியுரையை தினக்குரல் ஊடகவியலாளர் ருஷ்னா, ஏற்புரை -சலீம் புதல்வர் அகீல் சலீம் ஆகியோர்கள் இங்கு நிகழ்தினார்கள் பி.ப.04.45- 07.45 மணி வரை சலிம் பற்றிய நினைவுரைகள் இடம் பெற்றது.

சலீம் குடும்ப உறுப்பினர்கள் ஊடகவியலாளர் தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.






# ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக பெறப்பட்ட கொடுப்பனவுகள் பயனாளிகளுக்கு வழுங்கி வைப்பு

(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)




ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளை பிரதேச மட்டத்திற்கு பரவலாக்கும் நோக்கில் நிகழ்நிலை மூலம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களு க்கான கொடுப்பனவுகள், நேரடியாக பிரதேச செயலகங்கள் மூலம் பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டம் நாவிதன்வெளி பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இதனடிப்படையில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்ரன் தலைமையில் நாவிதன் வெளி பிரதேச செயலகத்திற்குற் பட்ட மத்திய முகாம்-03 கிராம உத்தியோகத்தர் பிரிவை சேர்ந்த பயனாளி ஒருவருக்கு சிறுநீரக மற்றும் சத்திர சிகிச்சைக்காக ரூபாய் 8 லட்சம் மருத்துவ உதவிக் கொடுப்பனவும், அண்ணமலை-02 கிராம உத்தியோகத்தர் பிரிவை சேர்ந்த பயனாளிக்கு இருதய சத்திர சிகிச்சைக்கான கொடுப்பனவாக ரூபாய் 3 லட்சத்து 50 ஆயிரம் மருத்துவ உதவி கொடுப்பனமும் கிடைக்க பெற்று இதற்கான காசோலையை நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பயனாளிகளுக்கு வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக கணக்காளர் ரிஸ்வி யஹ்ஸர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திலகராணி கிருபை ராஜா, குடியேற்ற உத்தியோகத்தர் அஸ்லம் சுஜான், சமூக சேவை உத்தியோகத்தர் குணரட்ணம் மற்றும் விடய உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## தென்கிழக்குப் பல்கலைக்கழக ஸ்தாபக ஊழியர்களின் முப்பது ஆண்டு முத்து விழா ஒன்றுகூடல் !

(நூருல் ஹுதா உமர்)





தென்கிழக்குப் பல்கலைக்கழகம் பல்கலைக்கழகமாக பிரகடனப் படுத்தப்பட்டு முப்பது ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு, 13.05.1996 அன்று நியமனம் பெற்ற ஸ்தாபக ஊழியர்களின் "Pearl Jubilee Anniversary" எனப் பெயரிடப்பட்ட விசேட முத்து விழா ஒன்றுகூடல் கடந்த 15ஆம் திகதி பல்கலைக்கழக பணியாளர் மேம்பாட்டு நிலையத்தில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆரம்பகால ஊழியரும் தற்போதைய சிரேஷ்ட உதவி நிதியாளருமான எஸ்.எல்.எம். தாஹிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வை, சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர் எஸ்.ஏ.சி.எம். ஜுனைடீன் நெறிப்படுத்தினார்.

முப்பது ஆண்டுகளாக பல்கலைக்கழக வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஸ்தாபக ஊழியர்களின் சேவைகளை நினைவுகூரும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில், ஆரம்பகால சேவை அனுபவங்கள், பல்கலைக்கழக வளர்ச்சியின் மறக்க முடியாத நினைவுகள் மற்றும் எதிர்கால முன்னேற்றங்கள் குறித்து பலரும் கருத்து பகிர்ந்துகொண்டனர்.

நிகழ்வின் முக்கிய அம்சமாக, ஸ்தாபக ஊழியர்கள் உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி எஸ்.எம். ஜுனைடீன் அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தனர். இதன்போது, பல்கலைக் கழகத்தின் ஆரம்பகால சவால்கள், குறைந்த வளங்களுடன் மேற்கொள்ளப் பட்ட சேவைகள், மாணவர் மையப் படுத்தப்பட்ட பணியியல் அனுபவங்கள் உள்ளிட்ட பல்வேறு நினைவுகள் பகிரப்பட்டன.

உபவேந்தர் தனது உரையில், பல்கலைக்கழகத்தின் அடித்தளத்தை வலுப்படுத்திய ஸ்தாபக ஊழியர்களின் அர்ப்பணிப்பையும் ஒழுக்கத்தையும் பாராட்டியதுடன், ஆரம்பகால வரலாறுகள் மற்றும் அனுபவங்கள் எதிர்கால தலைமுறைகளுக்காக ஆவணப்படுத்தப்பட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினார்.

நிகழ்வில் கௌரவ அதிதியாக கலந்து கொண்ட பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் உரையாற்றுகையில், "ஒரு கல்வி நிறுவனம் என்பது கட்டிடங்களால் மட்டும் உருவாகாது. அதில் பணியாற்றும் ஊழியர்களே அதன் உண்மையான பலம்" எனக் குறிப்பிட்டார். மேலும், ஓய்வு பெற்ற மற்றும் விலகிச் சென்ற முன்னாள் ஊழியர்களையும் இணைக்கும் வகையில் விசேட அமைப்பு ஒன்றை உருவாக்கும் யோசனையையும் வரவேற்றார்.

நிகழ்வின் தலைமை உரையாற்றிய எஸ்.எல்.எம். தாஹீர், பல்கலைக்கழகத்தின் தற்போதைய உயர்வில் தங்களுக்கும் ஒரு சிறிய பங்களிப்பு இருப்பது பெருமையளிப்பதாகக் குறிப்பிட்டதுடன், பல்கலைக்கழகத்தை உருவாக்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்ட மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களை நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

இதேவேளை, ஆரம்பகால ஊழியரும் சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளருமான எம்.எச்.எம். ஹலீம் உரையாற்றுகையில், இந்த ஒன்றுகூடல் எதிர்கால தலைமுறைகளையும் இணைக்கும் குடும்ப உறவாக வளர வேண்டும் எனத் தெரிவித்தார். மேலும், பல்கலைக்கழகத்தின் வரலாறு மற்றும் உருவாக்கப் பயணம் முறையாக ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

## உலக உயர் குருதி அழுத்த தினத்தை முன்னிட்டு கல்முனை பொது சந்தையில் பரிசோதனை




(எம்.என்.எம்.அப்ராஸ்)

உலக உயர் குருதி அழுத்த தினத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஷகிலா இஸ்ஸதீன் வழிகாட்டலில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மற்றும் கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் இணைந்து கல்முனை பொதுச் சந்தை வர்த்தக சங்கத்தின் தலைவர் ஏ.பி .ஜாமல்தீன் உடப்பட சங்கத்தின் உறுப்பினர் களின் உதவியுடன் பொது சந்தையில் வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோர்களுக்கு உயர் இரத்த அழுத்த பரிசோதனை முகாம் (17)இடம் பெற்றது.

இதன் போது கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஸஹ்ரா சாரப்தீன், கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி என்.ரமேஷ்,கல்முனை தெற்கு மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச். ரிஸ்பின், கல்முனை வடக்கு பதில் சுகாதார வைத்திய அதிகாரி பே. கேதுஜன், மேற்ப்பார்வை பொது சுகாதார பரிசோதகர்களான ஜே.எம். நிஜாமுதீன், ஜே.எம். நிஸ்தார் பொது சுகாதார பரிசோதகர்களான எம். ஜுனைதீன், கே.எல். மன்சூர்,எஸ்.ஜோகநாதன்,ஆர்.எம். முஹ்சீன் ஆகியோர் மேற் குறித்த உயர் குருதி அழுத்த பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## சீனன் கோட்டை மர்ஹூம் ரிபாஸ் கரீம் நினைவாக புத்தகங்கள் அன்பளிப்பு





(பீ.எம்.முக்தார்)

அண்மையில் காலஞ்சென்ற பேருவலை-சீனன் கோட்டை இளம் இரத்தினக்கல் வர்த்தகர் அல்ஹாஜ் ரிபாஸ் கரீம் அவர்களின் 40ஆம் நாள் நினைவு தினத்தை முன்னிட்டு அன்னாரின் குடும்பத்தி னரால் சீனன் கோட்டையில் அமைந்துள்ள அல் ஸலாஹ் அரபுக் கல்லூரியின் வாசிகசாலைக்குத் தேவையான புத்தகங்கள் மற்றும் கித்தாபுகள் (13) அன்பளிப்புச் செய்யப்பட்டன.

அன்னாரின் குடும்பத்தினர் சார்பாக தந்தை அல்ஹாஜ் ரவ்ப் கரீம், சகோதரர் அல்ஹாஜ் நபீஸ்,மகனார் அர்கம் ரிபாஸ் ஆகியோர் புத்தகங்களை வழங்கி வைத்தனர்.

நிகழ்வில் கல்லூரி அதிபர், நிர்வாகிகளான அல்ஹாஜ் ஆரிப், அல்ஹாஜ் பௌஸான் ஹம்ஸா, அல்ஹாஜ் லியாக்கத் ரஸ்வி ஆகி யோரும் கலந்து கொண்டிருந்தனர்.

## பல்கலை மாணவர்களுக்கு மடி கணனி அன்பளிப்பு






(அஷ்ரப்.ஏ.சமட்)

ஹாஷிம் உமர் பௌண்டேசனினால் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இலவசமாக மடி கணனி வழங்கும் வேலைத்திட்டத்தின் 21ஆம் கட்ட விநியோகம் கொழும்பு கொள்ளுப் பிட்டியிலுள்ள ஹாஷிம் உமர் பௌண்டேசன் தலைமையகத்தில் (16) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் செய்திப் பிரிவு பிரதிப் பொது முகாமையாளர் சுதர்மன் ரதலியகொட, விசேட அதிதியாக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன தமிழ் செய்திப்பிரிவின் பிரதான பொறுப்பாளர் சி.பி.எம். சியாம், எழுத்தாளர்கள் சங்கத்தின் தலைவர் கமல் பெரேரா, சிலோன் ஹபீபீ ஸ்தாபகர் ஹபீபீ, சுயாதீன தொலைக்காட்சி தமிழ் பிரிவு முன்னாள் செய்தி முகாமையாளர் சித்தீக் ஹனீபா, தமிழன் பத்திரிகை இணை ஆசிரியர் ஏ.எம்.ஜவ்பர், தயாரிப்பாளர் எம்.எச்.எப். ரின்ஸா, சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஜிப்ரியா இப்ராஹிம், சிரேஷ்ட ஊடகவிய லாளர் ராதா மேத்தா, அமைப்பின் பணிப்பாளர் மரியம், அர்ஹம் சுலைமான் மற்றும் பெற்றோர் எனப்பலர் கலந்துகொண்டனர்.

ஹாஷிம் உமர் பௌண்டேசனின் ஸ்தாபகர் புரவலர் ஹாஷிம் உமர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் நயோமி அமரசிங்க-வெலிப்பன்ன, எம்.ஆர்.எப்.ரி-ஸ்கா-பாணந்துறை, எம்.இஸட்.ஹாஜரா ,தர்ஹா டவுன் மற்றும் எம்.ரி.எப்.ரஷீதா -அநுராதபுரம் ஆகியோர் புரவலரிடமிருந்து பெற்றுக்கொண்டனர்.

# துல்ஹஜ் முதல் பத்து நாட்களில் செய்யப்படும் அமல்களின் சிறப்புக்கள்

அல் ஹாபிழ்
இன்திகாப் உமரீ

அடியார்கள் தன்னை நெருங்க வேண்டும் என்பதற்காக இரக்கமான றப்புல் ஆலமீன் பல சந்தர்பங்களை எமக்குத் தந்து அமற்களால் சிறந்தவர்களாக நாம் மாற ஒவ்வொரு கால கட்டத்திலும் வாய்ப்பளிக்கி ன்றான். அந்த அடிப்படையில் இப்போது நாம் இருக்கக் கூடிய மாதம் புனித மாதங்களில் ஒன்றாகும். இதைத் தொடர்ந்து வர இருக்கும் துல் ஹிஜ்ஜா ஒவ்வொரு முஸ்லிமின் வாழ்கையிலும் சுவனத்துக்கான அருவடை காலமாகும். இஸ்லாமிய வணக்க வழிபாடுகள் பொதுவாகப் பிறையை அடிப்படையாகக் கொண்டிருக்கும். அந்த அடிப்படையில் இப்போது நாம் துல் துல் ஹிஜ்ஜா எம்மை வந்தடைந்துள்ளது . எனவே துல் ஹிஜ்ஜா மாதத்தில் இஸ்லாம் எம்மீது கடமையாக்கி யுள்ள ஒரு சில வணக்கங்களை இவ் வாக்கத்தின் மூலம் உங்கள் சிந்தனைக்கு முன்வைக்கலாம் என நினைக்கின்றேன்.
அல்லாஹ் கூறுகிறான்.
வானங்களையும், பூமியையும் படைத்த நாள் முதல் அல்லாஹ்வின் பதிவேட்டில் உள்ளபடி மாதங்களின் எண்ணிக்கை அல்லாஹ்விடம் பன்னிரண்டாகும். அவற்றில் நான்கு மாதங்கள் புனிதமானவை. இதுவே நேரான வழி. (புனிதமான) அம்மாதங்களில் உங்களுக்கு நீங்களே தீங்கு இழைத்து விடாதீர்கள்! இணை கற்பிப்போர் ஒன்று திரண்டு உங்களுடன் போரிடுவது போல் நீங்களும் ஒன்று திரண்டு அவர்களுடன் போரிடுங்கள்! அல்லாஹ் (தன்னை) அஞ்சுவோருடன் இருக்கிறான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.!

(?அல் குர்ஆன் 9:36)

**1) புனித மாதங்கள் எவை..?**
ஹஜ்ஜத்துல் வதாவில்' உரையாற்றிய போது) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் வானங்களையும், பூமியையும் படைத்த நாளில் இருந்த (பழைய) நிலைக்கே காலம் திரும்பிவிட்டது. (இதற்கு முன் மக்கத்து முஷ்ரிகீன்களும், யூத கிரிஸ்தவர்களும் காலத்தில் மாற்றம் செய்து வந்தார்கள்.)ஓர் ஆண்டு என்பது பன்னிரண்டு மாதங்கள் ஆகும். அவற்றில் நான்கு மாதங்கள் (போரிடுதல் விலக்கப்பட்ட) புனித மாதங்களாகும். (அந்த நான்கு மாதங்களில்) மூன்று மாதங்கள் தொடர்ந்து வருகின்றவையாகும். அவை ஃதுல்கஅதா, ஃதுல்ஹஜ், முஹர்ரம் மற்றும் ஜுமாதஸ்ஸானீக்கும் ஷஅபானுக்கும் இடையிலுள்ள முளர் குலத்து 'ரஜப்' மாதம் ஆகும். என அபூ பக்ரா(ரலி) அறிவித்தார்.

ஸஹீஹ் புகாரி : 4662.

**2) புனித மாதங்களில் நாம் பேண வேண்டியவை.**
**1: ஜிஹாத் (புனிதப் போர்) செய்யக்கூடாது :**
அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான அமற்களில் ஒன்றாக இருக்கக் கூடிய ஜிஹாதையே அல்லாஹ் இம்மாதங்களில் தடை செய்துள்ள போது இப்புனித மாதங்களில் உறவுகளோடு நாம் சண்டை பிடிக்க முடியுமா..? சக முஸ்லிம்களோடு சண்டையிட முடியுமா..? அயல் வீட்டாருடன் சண்டையிட முடியுமா..? வரம்பு மீறாத மாற்று மத சகோதர்களுடன் நாம் சண்டையிட முடியுமா..? இப்படியான காரியங்களில் ஈடுபடுவது இப்புனித மாதங்களைக் கலங்கப்படுத்தும் குற்றமான செயலாகும்.

**2: பாவங்களில் ஈடுபடத் தடை:**
பொதுவாக முஸ்லிம் என்றாலே பவங்களை விட்டு ஈடேற்றம் பெற்றவனாக எப்போதும் இருக்க வேண்டும். என்றாலும் மனிதன் என்ற அடிப்படையில் சில தவறுகள் அவ்வப்போது எம் வாழ்வில் நிகழ்வதுண்டு. அப்படியான தவறுகள் கூட குறிப்பாக இம்மாதங்களில்
நிகழ்ந்துவிடாது கவனமாக இருக்க வேண்டும். இம்மாதங்களில் செய்யப்படும் தவறுகளுக்கு இரண்டு வித பாவங்கள் எழுதப்படும். ஒன்று செய்த தவறுக்கான கூலி.. இரண்டாவது இப்புனித மாதத்தின் புனிதத்தை பேணாதமைக்கான கூலி.

**3) துல் ஹஜ் மாத முதல் பத்து நாட்களின் சிறப்புக்கள்.**
1: அல்லாஹ் துல் ஹஜ் மாத முதல் பத்து இரவுகளையும் அதன் மீது சத்தியமிட்டு கண்ணியப் படுத்தியுள்ளான்.
பத்து இரவுகளின் மீது சத்தியமாக,

(அல்குர்ஆன் : 89:2)

பத்து இரவுகள் என்பது துல் ஹஜ் மாதத்தின் முதல் பத்து இரவுகளாகும். என இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் விளக்கம் அளித்துள்ளார்கள்.

2: இந்தக் காலத்தில் செய்யும் அமற்கள் அல்லாஹ்வுக்கு ஜிஹாதை விட விருப்பமானது.
இப்னு அப்பாஸ் (ரலி) அறிவித்தார்கள்.
'(துல்ஹஜ் முதல்) பத்து நாட்களில் செய்யும் எந்த நல்லறத்தையும் விட அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான நல்லமல் கிடையாது என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
'ஜிஹாதை விடவுமா?' என்று நபித் தோழர்கள் கேட்டனர். 'தன் உயிரையும், பொருளையும், பணயம் வைத்துப் புறப்பட்டு இரண்டையும் (இறைவழியில்) இழந்து விட்டவன் செய்த ஜிஹாதைத் தவிர' என்று நபி(ஸல்) கூறினார்கள்.

ஸஹீஹ் புகாரி 969 அத்தியாயம் : 13.



**இரு பெருநாள்கள்**
ஜிஹாதின் சிறப்பு:
அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவித்தார்கள்.
இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து, 'ஜிஹாத் என்னும் (இறைவழியில் புரியும்) அறப்போருக்குச் சமமான ஒரு நற்செயலை எனக்கு அறிவியுங்கள்' என்று கேட்டதற்கு நபி (ஸல்) அவர்கள் 'அப்படி எதையும் நான் காணவில்லை'. என்று கூறிவிட்டு, 'அறப்போர் வீரன் (போருக்காகப்) புறப்பட்டுச் சென்றுவிட்டால் (அவனுக்கு) இணையான நற்செயல் புரிந்திட வேண்டி நீ உன் வணக்கத் தலத்திற்குச் சென்று இடைவிடாமல் தொழுது கொண்டும், தொடர்ந்து நோன்பு நோற்றுக் கொண்டும் இருக்க உன்னால் முடியுமா?' என்று கேட்டார்கள்.
அதற்கு அம்மனிதர், 'அது யாரால் முடியும்?' என்று பதிலளித்தார்.
'அறப்போர் வீரனின் குதிரை, அதைக் கட்டி வைத்துள்ள மேய்ச்சல் கயிற்றுக்கிடையே (கால்களை உதைத்துக் கொண்டு) சில குதிகள் குதித்துச் சென்றால் அதுவும் அவனுக்கு நற்பலனாக எழுதப்படும்' என்று அபூஹுரைரா(ரலி) கூறினார்.

ஸஹீஹ் புகாரி 2785 அத்தியாயம் : 56.

**அறப்போரும் அதன் வழிமுறைகளும்.**
**குறிப்பு:**
ஜிஹாத் என்பது அப்பாவி மக்களைக் கொலை செய்யும் கோலைத் தனமான தற்கொலைத் தாக்குதல் அல்ல . அது தன்னையும், தன் மதத்தையும், தன் நாட்டு மக்களையும் அழிக்கப் படையெடுத்து வரும் எதிரிகளுக்கு எதிராக அரசின் கட்டளைப்படி போர்க் களத்தில் நேருக்கு நேர் அவர்களை எதிர்த்துப் போராடும் இராணுவ நடவடிக்கையே ஜிஹாதாகும். இதையே இஸ்லாம் ஜிஹாத் என்கின்றது. இந்த ஜிஹாதைக் கூட இஸ்லாம் புனிதமாதமாக கூறும் நான்கு மாதங்களில் (துல் கஃதா , துல் ஹிஜ்ஜா, முஹர்ரம், ரஜப்) தடை செய்கின்றது. அதிலும் குறிப்பாக துல் ஹஜ் முதல் பத்து நாட்களில் நன்மையான காரியங்களில்



ஈடுபடுவதை இஸ்லாம் ஜிஹாதை விட சிறாந்த வணக்கமாகச் சொல்கின்றது.

**3: அரபாவுடைய நாள் இந்த நாட்களில் தான் இருக்கின்றது.**
ஹஜ் என்றால் அரஃபாவில் தங்குவதுதான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: ஹாகிம்).
அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
அல்லாஹ், அரஃபா (துல்ஹஜ் 9ஆவது) நாளில் அடியார்களுக்கு நரக விடுதலையளிக்கும் அளவிற்கு வேறெந்த நாட்களிலும் நரக விடுதலை அளிப்பதில்லை. அன்றைய தினம் அவன் (அரஃபாவிலுள்ளவர்களை) நெருங்கி, வானவர்களிடம் அவர்களைக் குறித்துப் பெறுமை பாராட்டுகிறான். "இவர்கள் எதை நாடி (இங்கு குழுமி) யுள்ளார்கள்?" என்று (பெருமிதத்தோடு) கேட்கிறான்.
இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர் தொடர்களில் வந்துள்ளது.
ஸஹீஹ் முஸ்லிம் : 2623.
அத்தியாயம் : 15. ஹஜ்

**4: யவ்முன் நஹ்ர் அறுத்துப் பலியிடும் நாள் அதிலே தான் இருக்கின்றது.**

**5: இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் .**

துல் ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களும் மகத்தான நாட்களாகும். என சிலாகித்துக் கூறப்பட்டிருப்பதன் காரணம் என்னவெனில், அந்த நாட்களில் தான் பிரதான வணக்க வழிபாடுகள் யாவும் ஒருங்கே அமைந்திருப்பதாகும் .
அவையாவன தொழுகை, நோன்பு, ஹஜ், தர்மம், ஆகிய யாவும் இந்த நாட்களில் முக்கிய அமல்களாக நிறை வேற்றப்படுகின்றன. இந்த நிலை வேறு எந்த நாட்களிலும் சாத்தியப்பட மாட்டாது.

**4) துல் ஹஜ் முதல் பத்து நாட்களிலும் நாம் செய்ய வேண்டிய அமற்கள் என்ன.?**

1: ஹஜ்ஜுடன் தொடர்பான அனைத்து வணக்கங்களிலும் ஈடுபடுதல்.
இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'ஓர் உம்ரா செய்வது மறு உம்ரா வரையிலுள்ள பாவங்களின் பரிகாரமாகும். ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு, சொர்க்கத்தைத் தவிர வேறு கூலியில்லை.' என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.
ஸஹீஹ் புகாரி : 1773.
அத்தியாயம் : 26. உம்ரா

2: பர்ளான வணக்கங்களைத் தவறாது நிறைவேற்ற முயற்சி செய்தல்.

3: ஸுன்னத்தான ஃநபீலான வணக்கங்களின் மூலம் அல்லாஹ்வை நெருங்க முயற்சி செய்தல்.
இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்'
அல்லாஹ் கூறினான்:
எவன் என் நேசரை பகைத்துக் கொண்டானோ அவனுடன் நான் போர் பிரகடனம் செய்கிறேன். எனக்கு விருப்பமான செயல்களில் நான் கடமையாக்கிய ஒன்றை விட வேறு எதன் மூலமும் என் அடியான் என்னுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதில்லை. என் அடியான் கூடுதலான (நஃபிலான) வணக்கங்களால் என் பக்கம் நெருங்கி வந்து கொண்டேயிருப்பான். இறுதியில் அவனை நேசித்து விடும்போது அவன் கேட்கிற செவியாக, அவன் பார்க்கிற கண்ணாக, அவன் பற்றுகிற கையாக, அவன் நடக்கிற காலாக நான் ஆகிவிடுவேன். அவன் என்னிடம் கேட்டால் நான் நிச்சயம் தருவேன். என்னிடம் அவன் பாதுகாப்புக் கோரினால் நிச்சயம் நான் அவனுக்குப் பாதுகாப்பு அளிப்பேன். ஓர் இறை நம்பிக்கையாளனின் உயிரைக் கைப்பற்றுவதில் நான் தயக்கம் காட்டுவதைப் போன்று, நான் செய்யும் எச்செயலிலும் தயக்கம் காட்டுவதில்லை. அவனோ மரணத்தை வெறுக்கிறான். நானும் (மரணத்தின் மூலம்) அவனுக்குக் கஷ்டம் தருவதை வெறுக்கிறேன். 91 என அபூ /ஹுரைரா(ரலி) அறிவித்தார்.
ஸஹீஹ் புகாரி : 6502.
அத்தியாயம் : 82. (தலை)விதி

**4: நோன்பு நோற்றல்.**

இந்த நாட்கள் முழுவதும் நபி (ஸல்) அவர்கள் நோன்பு நோற்றமைக்கு எந்த சான்றுகலுமில்லை. நாம் செய்யும் ஒவ்வொரு அமலுக்கும் ஜிஹாதை விட சிறந்த கூலி இந்த நாட்களில் கிடைக்கும் என்பதால் விரும்பியவர் ஒரு நாள் விட்டு ஒருநாள் இந்த நாட்களில் நோன்பு பிடிக்கலாம் அல்லது திங்கள், வியாழன் நோன்பு பிடிக்கலாம் . அதே நேரம் ஒருவர் இக்காலத்தில் ஒன்பது நாள் நோன்பு பிடித்தால் அது தவறும் கிடையாது.
ஹாஜிகளுக்குப் பிறை ஒன்பது அரபா நாளாகும். அந்த நாளில் அரபாவில் இல்லாதோர் பிடிக்க வேண்டிய ஒரு நோன்புள்ளது .
அபூ கதாதா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அரஃபா நாளின் நோன்பு அதற்கு முன்னுள்ள ஓர் ஆண்டு, மற்றும் பின்னுள்ள ஓர் ஆண்டின் குற்றங்களை அழித்து விடும்.

(திர்மிதி: 749)

5:குறிப்பாக அரபாவுடைய நாளில் அல்லாஹ்விடம் நரகத்தை விட்டுப் பாதுகாப்புத் தேடல்.
அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
அல்லாஹ், அரஃபா (துல்ஹஜ் 9ஆவது) நாளில் அடியார்களுக்கு நரக விடுதலையளிக்கும் அளவிற்கு வேறெந்த நாட்களிலும் நரக விடுதலை அளிப்பதில்லை. அன்றைய தினம் அவன் (அரஃபாவிலுள்ளவர்களை) நெருங்கி, வானவர்களிடம் அவர்களைக் குறித்துப் பெருமை பாராட்டுகிறான். "இவர்கள் எதை நாடி (இங்கு குழுமி) யுள்ளார்கள்?" என்று (பெருமிதத்தோடு) கேட்கிறான்.
இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர் தொடர்களில் வந்துள்ளது.
ஸஹீஹ் முஸ்லிம் : 2623.
அத்தியாயம் : 15. ஹஜ்

6: தக்பீர் தஹ்மீது, தஹ்லீல் அதிகமாக செல்ல வேண்டும்.
(22:28)வசனத்தில் அறியப்பட்ட நாட்களில் இறைவனை திக்ரு செய்யுங்கள் என்பது துல்ஹஜ் பத்து நாட்களாகும். என்று இப்னு அப்பாஸ் (ரலி) கூறுகின்றார்கள்.
இப்னு உமர் (ரலி) யும் ,அபூஹீரைரா (ரலி) யும் துல்ஹஜ் மாதத்தில் முந்தைய பத்து நாட்களில் கடை வீதிக்குச் சென்றால் தக்பீர் சொல்வார்கள். அதைப் பார்த்து மக்களும் சொல்வார்கள். நபிலான தொழுகைக்குப் பிறகும் முஹம்மது பின் அலி (ரஹ்) அவர்கள் தக்பீர் சொல்வார்கள்.
இன்று பலரும் பிறை ஒன்பது முடிவிலிருந்தே தக்பீர் கூறுவதை ஆரம்பிப்பார்கள். இது பிழையான வழிமுறையாகும். துல் ஹஜ் தலைப்பிறை தொடக்கம் அய்யாமுத் தஷ்ரீக்குடைய நாட்கள் முடியும் வரை நாம் தக்பீர், தஹ்மீத், தஹ்லீல் கூற வேண்டும்.

8: அல் குர்ஆனுடன் அதிகம் தொடர்பை ஏற்படுத்துதல்.

9: அதிகமாக ஸதகா கொடுத்தல்.

10: துல் ஹஜ் பிறை பத்து ஈதுல் அழ்ஹா தியாகத் திருநாளைக் கொண்டாடுதல்.

11: யவ்முன் நஹ்ர் எனப்படும் பத்தாம் நாளில் அறுத்துப் பலியிடுதல்.
மேலும் எவர்கள் நம்முடைய வழியில் முயல்கின்றார்களோ நிச்சயமாக அவர்களை நம்முடைய நேரான வழிகளில் நாம் செலுத்துவோம் நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்வோருடனேயே இருக்கின்றான்.
(அல்குர்ஆன் : 29:69)

**குறிப்பு:**
துல் ஹஜ் மாதத்தின் ஆரம்ப பத்து நாட்களிலும் ஹஜ்ஜ/டைய வணக்கங்கள் மற்றும் உம்ரா, தக்பீர் தஹ்மீத் தஹ்லீல் கூறுதல், அரபா தின நோன்பு, உழ்ஹிய்யா, பொருநாள் தின சட்டங்கள், அய்யாமுத் தஷ்ரீக் நாட்களில் செய்ய வேண்டியவை தவிர எந்த வணக்கத்தையும் இஸ்லாம் குறிப்பாக்கி சொல்ல வில்லை இந்த நாட்களில் செய்யப்படும் அமற்கள் அல்லாஹ்வுக்கு ஜிஹாதை விட விருப்பமானது என்ற அடிப்படையில் எல்லா நற்செயல்களிலும் நாம் ஈடுபட முடியும்.

அல்லாஹ் மிக அறிந்தவன்




பயாஸா பாஸில்

# 'நல்லெண்ணங்களை வளர்ப்போம்'

# "நோய் இன்றி வாழலாம்"




'எண்ணங்கள் அழகானால் வாழ்க்கை சிறப்பாகும்'. எனவே, நல்லெண்ணம் கொண்டவர்களே வளமாக வாழ முடியும். 'திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல்லறிவு வேண்டும்' என்ற பாரதியாரின் கூற்றுக்கு ஏற்ப பூமியில் இருப்பதும் வானத்தில் பறப்பதும் அவரவர் எண்ணங்களே. வாழ்க்கை வாழ்வதற்கு முக்கிய காரண கருத்தா, எமது மனதில் தோன்றும் எண்ணங்களே. வார்த்தைகள், செயல்கள், நடத்தைகள், முறைகள் ஆகிய இவைகளே மனித வாழ்க்கையைத் தீர்மானிக்கும் கருவிகள். அழகான வார்த்தைகள், அழகான சிந்தனைகள் என அமைந்தாலே வாழ்க்கை அழகாகிவிடும். வாழ்வின் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் அடித்தளம் நல்ல எண்ணங்களே. 'அறிவாளிக்கு மதி பெரிது' அத்தகைய மதியைக் கொண்டு விதியைக் கூட வென்றிடலாம். உலகை வென்றிடக் கூட நம் எண்ணங்களால் முடியும்.

புரிதல் யாருக்கு மற்றவர் மீது இல்லாமல் போகிறதோ அவர்கள் நல்ல எண்ணங்களுடன் இருப்பது சாத்தியமற்றுப் போகிறது .

நல்லெண்ணம் இருந்தால் தீமைகளை புறம் தள்ளி நன்மைகளை கைக்குள்ளே வைத்து சிறந்த நாட்டைக் கட்டி எழுப்பி வெற்றி காண முடியும். சிலநேரங்களில் நாம் தோல்வி அடையும் சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் அதையும் நல்லெண்ணம் கொண்டு பார்ப்போம். அவ்வாறு தோல்விகளையும் வென்றுவிட முடியும். எனவே, வெற்றி தோல்வியின் முதற் படியாகும்.

உதாரணமாக, மாவீரன் நெப்போலியனின் சிறந்த எண்ணமே அவரை ஏவுகணை நாயகனாக மாற்றி உயர்த்தியது. முயற்சி செய்யவும், நம்பிக்கை கொள்ளவும் தன்னம்பிக்கையுடன் போராடவும் நல்ல உயரிய எண்ணங்கள் மிக மிக அவசியமாகின்றது. எண்ணங்கள் அழியாமல் இருக்க மனம் என்றும் கவலையிலும் துன்பத்திலும் மூழ்கி விடாமல் இருக்க முயற்சிக்க வேண்டும். எப்போது நாம் கவலையில் மூழ்கி விடுகின்றோமோ அப்பொழுதே எமது அனைத்து எண்ணங்களும் செயலிழந்து விடுகின்றது. மூளையும் மனமும் இசைந்து கொடுத்தால் தான் நம் எண்ணங்களும் உணர்வுகளும் மாறும். மனிதன் எதை எண்ணுகிறானோ அதுவாகவே ஆகி விடுகிறான் இதுவே நிதர்சனம்.

சில உறவுகள் எம் எண்ணங்களுக்கு மதிப்பளிப்பார்கள். சிலர் அதனை ஏற்றுக் கொள்வதில்லை. அவற்றுக்கு மாற்றுக் கருத்து கூறி எங்கள் எண்ணத்தை மாற்றி, எங்களையும் எங்கள் செயல்களையும் அடையாளப்படுத்தி விட்டு சென்று விடுவார்கள்.

எனவே, உங்களது மூளைக்கு எது சரி என்று தோன்றுதோ அதை நீங்கள் மற்றவர்களின் உணர்வுகள் அல்லது நடத்தைகளிலீ எந்தவிதமான தலையீடும் இன்றி நல்ல முறையில் காரியங்களை செய்து முடிக்க வேண்டும். நல்லெண்ணம் மற்றும் நல்வாழ்க்கை என்பவற்றை புரிந்துணர்வோடு அமைத்துச் செல்லுங்கள். மனிதராகப் பிறப்பெடுத்த நாம் மாமனிதராக நம்மை வெளிப்படுத்த வேண்டுமே தவிர மிருகம் போல் நம்முடைய வாழ்க்கையை மாற்றிக் கொள்ளக் கூடாது. அப்படிச் செய்தால் இறுதியில் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே, நாம் எண்ணற்ற தீய குணங்கள் மனிதர்களிடம் காணப்பட்டாலும் எம் மனதில் நல்லெண்ணங்கள் குடி கொண்டாலே அனைத்து தீய குணங்களும் நீங்கி விடும். அப்போது, நாம் அனைவராலும் போற்றப்படுவோம் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. எனவே மனிதனிடத்தில் களவு, கோபம், பொய், பொறாமை, பெருமை மற்றும் காமமாகிய எண்ணங்கள் சூழ்ந்து கொள்ளாது. எவன் தப்பி வாழ்கிறானோ அவனும் கடவுளைப் போன்றே மற்ற மனிதர்களால் பார்க்கப்படுவான் என்பது உண்மையே. தனக்கு உரிமையில்லாத ஒன்றை மனதளவில் எண்ணாமல் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அவ்வாறு இருந்தால் நமக்கானது நம்மை வந்தடையும். எண்ணங்களிலே மகா கெட்ட குணமாக இருப்பது பொய் பேசுவதாகும். பொய்யானது, பொய் பேசுபவனை மட்டுமன்றி பேசுபவரின் பரம்பரையையும் சேர்த்துப் பொசுக்கிவிடும். வாழையடி வாழையாக வாழும் தன்மையைக் கொண்டது பொய். எனவே எண்ணத்தில் பொய்யை நாம் இல்லாமல் ஆக்கிக் கொள்ள முயற்சிப்போம். பொய்யானது பல உறவுகளையும் துண்டித்து விடும். வேறு சில நடவடிக்கைகளிலும் ஈடுபடச் செய்துவிடும். நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் தன்மையையும் பொய் கொண்டு வந்து சேர்த்துவிடும்.

'உள்ளத்தால் பொய்யா தொழுகையில் உலகத்தார் உள்ளத்துளெல்லாம் உடன்' அதாவது 'மனதினால் பொய்யை நினைக்காமல் நடப்பவன் உலகத்தவர் மனதில் எல்லாம் நிலைத்திருப்பார்'. பொய் அறியா நெஞ்சினராய் வாழ்தல் இன்றும் என்றும் நன்மையோடு கூடிய உயர்வைத் தரும். நாவில் தோன்றும் பிழை தன்னோடு அல்லாமல் தன் தலைமுறையையும் தாண்டி துன்பத்தைத் தொடர்ந்து தரும் என்பது உறுதி.

எண்ணங்களில் தன்னையே இழக்கும் நிலைக்கு அடிக்கடி நம்மை அழைத்து செல்வது மனிதனுக்கு ஏற்படுகின்ற கோபமே. இந்த கோபமானது மனிதனை மிருகமாக மாற்றும். எனவே தன்னையும் இழந்து விடாமல் சுற்றியுள்ள உறவுகளும் விலகாமல் இருக்க நம் எண்ணங்களில் தோன்றுகின்ற கோபத்தை முற்றிலும் நீக்கிக் கொள்ள வேண்டும்.

மனதில் தோன்றும் காம எண்ணமே வாழ்க்கையில் எந்த வெற்றியையும் காண விடுவதில்லை. காமங் கொள்வது செயலிலே இழிவான ஒரு செயல். எனவே இவ்விழிவான செயலை செய்தால் பண்பையே நாம் இழந்து விடுவோம். எனவே இவ்வாறான காமம் என்பது முற்றிலும் தடை செய்யப்பட வேண்டும். எண்ணங்களை பரிசுத்தமாக வைத்துக் கொள்ள முயற்சி செய்து கொண்டால் எம் வாழ்க்கை சிறப்படையும்.பொறாமை ஒருவனை சூழ்ந்துக் கொண்டால், அனைத்தையும் அது அவனிடமிருந்து இழுத்துச் செல்லும். பொறாமைக்காரன் தன்னால் செய்ய முடியாதவற்றை பிறரிடம் காணும் போது, அவர்மீது அவனுக்கு வெறுப்புத் தோன்றிவிடும். பொறாமை ஒருபோதும் ஜெயிக்கக் கூடாது. ஆகவே, பொறாமை எம் எண்ணங்களில் குடிக்கொள்வதை முற்றிலும் தவிர்த்து நடக்கப் பழகிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், நம் நல்லெண்ணங்களுக்கு அது முற்றுப்புள்ளி வைக்கும். பொறாமை என்ற எண்ணம் எம்முள் தோன்றிவிட்டால், எம் நம்பிக்கையையே அது இலக்காகக் கொள்ளும். பொறாமை ஒரு கொடிய நோய். நல்லெண்ணங்களை வளர்த்துக்கொள்ள, தீய விடயங்களை வெட்டித் தூர விலக்க வேண்டும். உதாரணமாக, திருட்டு என்ற எண்ணம் மனதில் குடிகொண்டால், நாம் நற்பெயரை ஒருபோதும் நிலைக்கச் செய்ய முடியாது. திருடுவது பெரும் குற்றம். அதனால் அவமானங்களும், தன் மதிப்பை இழக்க வேண்டிய நிலையும்கூட ஏற்படும். களவு வியாபாரமோ வேறு எந்த முறையாக இருந்தாலும், அத்தகைய எண்ணங்கள் மனதில் தோன்றாமல், தன்மானத்தைப் பாதுகாத்து நல்லெண்ணத் துடன் செயல்பட்டால், வாழ்வு நிச்சயம் உயர்வு பெறும்.

நல்லெண்ணங்களை மேம்படுத்த வேண்டும் அவை உன் வாழ்வில் வண்ணங்களை ஏற்படுத்தும். என்றும் அநியாயத்திற்கு வழிப் போகக் கூடாது அது உன் வாழ்வை அழித்து விடும். உங்கள் எண்ணங்களை ஒருபோதும் ஓய்வெடுக்க விடாதீர்கள். வாழ்க்கை வேடிக்கையானது. ஆனால், உங்கள் எண்ணங்களை நீங்கள் முதலில் மதிக்கக் கற்றுக்கொண்டால், உங்கள் மீது உங்களுக்கு மரியாதை தோன்றும். அந்த மரியாதை, உங்கள் சுயத்தின் மீது நம்பிக்கையின் சுடரை ஏற்படுத்தும். வாழ்க்கை வளம் பெற வேண்டுமானால், நல்லெண்ணங்களைச் செயல்களில் காட்டுவோம். எண்ணம்போல் வாழ்க்கை என்றும் சிறப்பு பெறும் வாழ்வில் வசந்தமும் வீசும்.

நாம் வாழும் வாழ்வில் பலதரப்பட்ட நபர்களைச் சந்திக்கின்றோம். அவர்கள் பல முகங்களும், பல சிந்தனைகளும் கொண்டவர்களாக இருப்பார்கள். எண்ணங்களின் பிரதிபலிப்பே நல்ல மனிதன் என்பதை மறந்துவிடக்கூடாது. உறவுகளை மதிக்கவும் நல்ல எண்ணங்கள் அவசியம். உறவுகளுடன் உறவாடும் போது ஏற்படும் பிரச்சனைகளைச் சமாளித்துச் செல்ல நாம் பொறுமையைக் கைக்கொள்ள வேண்டும்.

அடுத்து பழிவாங்கும் எண்ணம் 'பழிக்குப் பழி' என்ற எண்ணம் சிலருக்குண்டு. அது நம்மை ஒரு கோழையாகவே சித்தரிக்கும். ஒருவர் நமக்குத் தீங்கு விளைவித்தாலும், நாம் அவருக்கு நன்மையே செய்யப் பழக வேண்டும். இதனால் நமக்கு இறைவனிடமிருந்து பல நன்மைகள் கைக்கூடும். அதை விட்டுப் பழிக்குப் பழிவாங்கும் எண்ணம் எம்முள் தோன்றினால், நாமே நமக்கு அழிவைத் தேடிக் கொள்கிறோம் என்பதே உண்மை. எப்போது எது நடந்தாலும் அது நல்லதுக்கே என்ற எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டால் எல்லாமே சிறப்பாக நடைபெறும்.

அதிகாரம் என்ற ஒன்று எம்முள் தலைக் கணமாக மாறுவதையும் அவதானிக்கலாம். நாம் யார் என்பதை அடையாளப்படுத்த எம்முள் அதிகார பலத்தை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறோம். இதனால் எம்முள் வெறித்தனமான ஆசைகள் தோன்றிவிடுகின்றன. உதாரணமாக, தலைமைத்துவம் என்ற இடத்தை அடைவதற்குத்தவறான முறைகளில் முயற்சிக்கிறோம். சில நேரங்களில் நாம் எடுக்கும் முடிவுகள் எமக்குத் தலை குனிவை ஏற்படுத்தி விடலாம். ஆகவே, எதை அடைய வேண்டுமோ எதைச் செய்ய வேண்டுமோ, அனைத்திற்கும் நல்லெண்ணங்களை வளர்த்துக்கொள்வோம். அப்போது எங்களுக்கு எதிர்பார்த்ததை விடச் சிறப்பான உள ஆரோக்கியம் இறைவன் தந்தருள்வான் என்பதில் சந்தேகமில்லை. எண்ணங்கள் பலவகையாக மனதில் தோன்றும். அவற்றை நல்லதும் கெட்டதும் எனப் பிரித்தறிந்து, வாழ்வை உன்னதமாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். மனிதனின் ஆரோக்கியமும் எண்ணங்களில்தான் தங்கி உள்ளது. மனம் தான் சிறந்த நண்பன். எனவே, நல்ல எண்ணத்துடன் வாழ்க்கையை சிறப்பாகக் கொண்டு செல்ல முயற்சிக்க வேண்டும்.

நல்லெண்ணங்களுடன் நல்லதைப் பகிருங்கள், நல்லதையே விதையுங்கள். என்றும் வாழ்க்கை அழகிய விளக்காய் ஒளிரட்டும். நல்ல எண்ணம் இருந்தால் உள ரீதியான துன்பம் வாழ்வில் வராமல் தடுக்கலாம். உண்மையான வாக்கு. அதற்கமைய நாம் நம் வாழ்வை எடுத்து நல்வழியில் வாழ்வோம்.

**ஏ எம் முர்ஷிதா பேகம்**
**அக்குறணை**
**கண்டி**

# இரவல் மூச்சின் இரகசியம்



இறைவனின் பாதையில்
அவிழ்க்க முடியாத புதிர்களை காலத்தின்
கரங்களில் அள்ளி வீசி, இறைவன் நமக்கான
விடைகளைச் செதுக்குகிறான்...
விழியோரம் கசியும் உப்புக் கடலை
புன்னகையால் மூடி மறைத்துவிட்டு
செயலற்றுத் திகைத்து நிற்கிறது
இந்த ஏழை மனம்!

நேற்றைய விடியல் –
வாசனை மலர்களாய் இதயம்
வருடிக் கொடுத்தது...
இன்றைய நிழலோ –
அடையாளம் தெரியாத
அனலாய் சுட்டெரிக்கிறது...
விதி என்ற நதி பாயும் திசையை
இறைவன் அன்றி யார் அறிவார் இங்கே?
வாடகை வீட்டின் சுவர்களில்
நாமே செதுக்கிக் கொண்ட ஓவியங்கள் இவை!
மண்ணால் ஆன இந்தச் சட்டகத்திற்குள்
மரணமில்லாத ஆத்மா வேண்டுமென்று
ஆசை கொண்டு என்ன பயன்?
இந்த மூச்சுக் காற்றே இறைவன் அளித்தது
எனும் போது,
முடிவில்லாத பற்று வைத்து என்ன பயன்?

ஏற்றுக்கொள்ள முடியாத வலிகளைச் சுமக்கும் போது
இதயம் சுமையாகலாம்...
ஆனால், இறைவனின் பெரும் ஆட்சியில்
இவ்வுலகமே ஒரு தற்காலிகப் பயணத் திடல்!
கசப்பான இத்திருப்பத்தையும்
அல்லாஹ்வின் திருவுள்ளம் என ஏற்று, கண்ணீரைத்
துடைத்துவிட்டு ஏந்திக் கொள்வோம்...

ஏனெனில்,
முடிவிலி வரை தொடரும்
இப்பெரும் பயணத்தில்
இதுவும் ஒரு கணம்
அவன் நாடிய ஒரு சோதனை
கடந்து போகும் ஒரு வடு!

**பாத்திமா ஹகீமா அமீனுதீன்,**
**ஓட்டமாவடி**




பாரா தாஹிர்
சிரேஷ்ட ஊடகவியலாளர்

# நான்

01- எனது பெயர் ஹுதா
02 - எனது வயது ஏழு
03 - நான் மூன்றாம் வகுப்பில் கல்வி கற்கிறேன்
04 - எனது விருப்பமான பாடம் தமிழ்
05 - எனது செல்லப்பிராணி பூனை

K. R. F. Hudha
Garde 03
Zahira maha vidyalaya
Hunupitiya wattala



# சிறுவர் சித்திரங்கள்



எம்.ஐ.அதாபா ஹானிம்.
தரம்-2
கம்/முஸ்லிம் பாலிகா ம.வி.
கஹட்டோவிட்ட.



Sheza farhan
LKG(3+)
Ideal children house, Mawanella

# நட்பின் ஆழம்

வரிகள் இல்லை என்னிடம்
நட்பின் ஆழத்தை எழுத
வலிமையான தூண்களால்
வருடிச் செல்கிறது எம் நட்பு
சொற்களால் உருவெடுத்து சொல்லாமல்
கிடைத்த நம் நட்பல்லவா இது

கொஞ்சல்களும் கும்மாளங்களும்
கோலம் போடும் நட்புக்குள் நட்பின்
கைக்குளுக்கள்களும் நகைப்பு
ஆரவாரங்களும் நட்பின் அத்திவாரங்களே
கிசுகிசுப்பு சண்டைகளும் கிண்டல்
பேச்சுக்களும் நட்பின் சான்றிதழ்கள்

நட்பின் ஏணியில் தாவிவிட்டால்
நாமெல்லாம் சந்தோசஷப் பூக்களில்
நட்புக் கடலில் நீந்தி
இன்ப முத்தெடுத்து மகிழ்வோம்.

Walimda M. N. F. Nasrin
Newmans collage Mawanella.

**படைப்பாற்றலை ஊக்குவித்து, பொது அறிவை வளர்த்து, பொழுது போக்குடன் கல்வியறிவை வளர்த்து, சிறாரிடத்தில் வாசிப்பை ஊக்குவிக்கும் நோக்கில் “உதய பூங்கா “ எனும் சிறுவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பகுதியில் உங்கள் ஆக்கங்களை கட்டுரையாக, கவிதைகளாக, துணுக்குகளாக, விடுகதைகளாக, சிறுகதை களாக, பிறந்தநாள் வாழ்த்தாக, சித்திரங்களாக, பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளாக இவ் வட்சப் இலக்கத்திற்கு**

**0775323239**
**அனுப்பலாம்.**

# எனது எதிர்காலம் எனது கனவு



மனிதனுக்கு தனது குறிக்கோள்களை நோக்கி அவனை உந்துகின்ற ஆற்றல் மிகுந்த உந்துதலே கனவாகும். “உறக்கத்தில் வருவதன்று கனவு, நம்மை உறங்க விடாமல் செய்வது தான் கனவு” என்று அறிஞர் அப்துல் கலாம் அவர்கள் கூறினார்கள். அதனால் தான் கனவு காணுங்கள்... அது உங்கள் நிழல்களை நிஜமாக்கும் என்றார்கள். கனவுகளின் ஆயுள் தான் எமது எதிர்காலம். கனவு கண்டால் தான் நாம் இலக்குகளை நோக்கி எளிதாக நடை போட முடியும். நம் மனதில் எழும் ஆசைகள் தான் நமக்கு கனவாக மாறுகிறது. மனிதனாய் பிறந்த அனைவருக்கும் ஒரு ஆசை இருக்கும். அதனை நனவாக்குவதன் மூலம் நம் எதிர்காலத்தை சிறப்பாக அமைத்துக் கொள்ளலாம். அவ்வகையில், சிறுவயதிலிருந்தே எனக்கும் ஒரு விமானியாக வானத்தில் பறக்க வேண்டும் என்ற ஆசை இருந்து கொண்டேயிருக்கிறது.

மனிதர்களுக்கு பறவைகள் போல சிறகுகள் இல்லை. சிறகுகள் மட்டும் இருந்தால் உலகமெங்கும் பறந்திருப்போம் . ஆனால் பறவைகள் போலவே பறக்க விமானங்கள் உருவாகிவிட்டனவே. வானிலே பறக்கின்ற விமானங்களை வேடிக்கை பார்ப்பது எனக்கும் மிகவும் பிடிக்கும். அப்போது கூட விமானத்தைப் பார்த்தபடி என் ஆசையை எண்ணி பெருமிதம் கொள்வேன். தமது கனவுகளை வென்று காட்டிய விமானத்தைக் கண்டுபிடித்த “ரைட் சகோதரர்களின்” கதை எனக்கும் எப்போதும் உத்வேகத்தைத் தரும். அவர்களது விடா முயற்சியும், கடின உழைப்பும் தான் அவர்களது கனவை நிறைவேற்றியது.

மேலும் எனது எதிர்கால கனவு மெய்ப்பட அந்த துறையில் சிறப்பாக முயற்சி செய்வேன். முறையான பயிற்சியும், சிறந்த திட்டமிடலும் தான் எதிர் கால வெற்றியின் ரகசியம். என் எதிர் கால கனவுக்கு இந்த வானமே எல்லை என்பதால், நான் ஒரு விமானியாக வர வேண்டும் என்ற என் ஆசை மெய்படும் என திடமாக நம்புகிறேன். என் கனவு மெய்படுவதை விடவும் மகிழ்வான நிகழ்வு இவ்வுலகில் வேறு என்ன இருந்து விடப் போகுது.

Zaina Rushdy
Grade 9E
Nooraniya Muslim Maha Vidyalaya
Uyanwatta

## குட்டிக்கதை

# புரியும் வயது



தாவித் எனும் எட்டு வயதுச் சிறுவன் அவனது வீட்டுப் பின் புறத்தில் நன்றாகக் காய்த்திருந்த மிளகாய்ச் செடியைக் கண்டான்.

அந்த மிளகாய்ச் செடியில் செக்கச் செவேலென பழுத்திருந்த பழங்களையும் செடி நிறைந்திருந்த காய்களையும் கண்டதும் அவனுக்கு ஆனந்தம் பொங்கியது.

தாயாரிடம் ஓடிச்சென்று உம்மா உம்மா நான் நாட்டிய கொச்சிக் கண்டு நிறையச் காய்ச்சிருக்கு என்று கூறிச் சந்தோசப்பட்டான். அம்மாவுக்கோ ஆச்சரியம் வாசலில் முளைத்திருந்த தான் படுவான் கன்றொன்றை நான் தானே பிடுங்கி நாட்டினேன். என்று மனதுக்குள் பேசியபடி இதை எப்படி நாட்டினாய் மகன் என்று கேட்டாள்.

ஓ அதுவா ஒருநாள் நானா எனக்கு வடை வாங்கித் தந்தார் இல்லையா.? அதோட இருந்த பொரிச்ச காஞ்ச கொச்சிக்காய நான் நாட்டினேன். அது முளைத்திருக்கு. என்றான்.

இந்தக் கதையை வீட்டுக்கு வருபவர்களிடமும் சொல்லிச் சந்தோசம் அடைந்தான் தாவித்.

அவர்களும் ஆச்சரியமாக தாயின் முகத்தைப் பார்க்கும் போது அவர்களிடம் சைகையால் பேசுவாள்.

அவர்களும் தலை ஆட்டி தாவித்தைச் சந்தோசப் படுத்திவிட்டுச் சென்றார்கள்.

காலம் கடந்தது. தாவித்துக்கு வயது கூடியது. பள்ளிப் பாடங்களை உன்னிப்போடு கற்றான் தாவித். ஒருநாள் தாயாரிடம் வந்தான் . சுற்றாடல் புத்தகம் அவனுடைய கையில் இருந்தது.

வித்துக்கள் முளைத்தல் எனும் தலைப்பில் பாடத்தைக் காண்பித்தான்.

உம்மா இங்கே பாருங்கள். சுடுநீரில் அவித்த, எண்ணெய்யில் பொரித்த வித்துக்கள் முளைக்காது என்று எழுதியிருக்கிறதே , அப்படியென்றால் எப்படி நான் நாட்டிய பொரித்த மிளகாய் முளைத்தது. எனக் கேட்டான்.

அப்போதுதான் தாய் விளக்கமாகக் கூறினார். மகனே அந்த மிளகாய்ச் செடி நான் நட்டது. நீ நாட்டிய பொரித்த மிளகாய் முளைக்க வில்லை. இதனை நான் அன்று கூறியிருந்தால் உனக்கு மனசு கஸ்டமாயிகி விடும் என்று தான் கூறவில்லை.

பிள்ளைகள் புரிந்து கொள்ளும் வயதில் தெரிந்து கொள்வதே சிறப்பு எனக் கூறித் தாவித்தின் தலையைத் தடவி முத்தமிட்டாள் தாய்.

G அகீல்
பொ /அல் அஸ்ஹர் மகா வித்தியாலயம்
கல்லளை பொலன்னறுவை

# எனது பாடசாலை

வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் பொல்கஹவெல எனும் பிரதேசத்தில் ஒருலியத்த என்ற அழகிய கிராமத்தில் குஃஅல் - அக்ஸா என்ற பெயருடன் 1962 ம் ஆண்டு சிறிய தொகையான மாணவர்களுடன் ஆரம்பமானது. முதல் அதிபர் திரு. ஜே. எம். நாகூர் அடுமை (ஜே. எம். பளீல்) என்பவரால் ஆரம்பமாக தற்போது திரு. எ. ஜே. எம். மர்தூக்கு அதிபரினால் தலைமை தாங்கப்படுகிறது. 1 தொடக்கம் 13 வரையான தரங்களும்,நூலகம், மைதானம், விஞ்ஞான கூடம் மற்றும் கணினிக்கூடம்
என்ற பல கட்டடங்களும் காலப்போக்கில் அமைந்துள்ளது. 23 ஆசிரியர்களின் வழிகாட்டலில் 300இற்கு மேற்பட்ட மாணவர்கள் தற்போது கல்வி பயின்று வருகின்றனர். கல்வியுடன் சேர்த்து நல்லொழுக்கம், மதம் சார்ந்த பண்பாடுகள் மற்றும் சமூகப் பொறுப்புணர்வு போன்ற உயர்ந்த பண்புகளையும் மாணவர்களிடத்தில் வளர்க்கும் நோக்கில் செயல்படுகிறது. தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிக்கும் முக்கியத்துவம் அளித்துது கணிதம், அறிவியல், வர்த்தகம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலை பிரிவு போன்ற பல பாடங்கள் மாணவர்களின் எதிர்கால வளர்ச்சியை கருத்தில் கொண்டு கற்பிக்கப்படுகின்றன. அதே வகையில் விளையாட்டுப் பயிற்சிகளில் மாணவர்களின் திறமையை வெளிக்காட்டும் செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். எல்லா போட்டிகளிலும் வெற்றி ஈட்டி பெருமை சேர்த்து எமது மாவட்டத்தில் முன்னிலையில் காணப்படுகிறது. இன்று பல துறைகளில் சாதனை புரியும் பிரஜைகளை எழுப்பியதாக இப்பாடசாலை காணப்படுகிறது.

ஏ. பீ. பாத்திமா அய்மன்
தரம் - 08
கு/அல்-அக்ஸா மஹா வித்தியாலயம்
ஒருலியத்த, பொல்கஹவெல



தெஹியங்கை Gateway பாலர் பாடசாலை மழலைச்சிறுவர்களின் சிறுவர் சந்தையை இங்கு காணலாம்.

## மனநலமும் ஆலோசனையும் 100

# இளைஞர் எதிர்காலம் "சமூகத்தின் கைகோர்த்த பொறுப்பு"

"இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கான காரணங்களும் தீர்வுகளும்"

சில இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஈடுபடும் மோசமான குற்றச் செயல்களுக்கு, போர்குணச் செயற்பாடு களுக்கு ஒரே ஒரு காரணம் மட்டும் இருப்பதில்லை. அது பல்வேறு காரணிகளின் கூட்டுச் செயலாக வெளிவரலாம். குடும்பம், சூழல், நண்பர்கள், சமூகம், ஊடக தாக்கம், உளவியல் நிலை, கல்வி, பொருளாதார சூழ்நிலை போன்ற பல அம்சங்கள் இளைஞர்களின் நடத்தையை வடிவமைக்கின்றன. இவற்றை மேலோட்டமாக நோக்குவோம்.



1. குடும்பக் காரணங்கள்
ஒரு பிள்ளையின் முதல் பாடசாலை அவன்/அவளது குடும்பமே. பெற்றோரின் கவனக்குறைவு, அடிக்கடி சண்டை சச்சரவுகள் நிகழ்தல், வீட்டிலேயே வன்முறைகளை காணுதல் போன்றவை பிளைளையின் மனதில் ஆழமான காயங்களை ஏற்படுத்தும். பிள்ளைகள் அன்பும் சரியான வழிகாட்டலும் இல்லாத சூழலில் வளர்ந்தால், அவர்கள் தவறான பாதையைத் தேர்ந்தெடுக்கக் கூடும். மேலும், தேவைகள் நிறைவேறாமை, மிகுந்த கட்டுப்பாடு அல்லது முழுமையான சுதந்திரம் ஆகிய இரு முனைகளும் பிள்ளையின் நடத்தை மீது எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

2. சூழல் காரணங்கள்
ஒரு பிள்ளை வளர்கின்ற சுற்றுப்புற சூழல் அதன் நடத்தையில் மிகப் பெரிய பங்காற்றுகிறது. பாதுகாப்பற்ற சூழல், குற்றச் செயல்கள் அதிகம் நடைபெறும் பகுதிகள், சட்ட விரோத நடவடிக்கைகள் சாதாரணமாகக் காணப்படும் இடங்கள் போன்றவை பிள்ளைகளை தவறான வழியில் இட்டுச் செல்லக்கூடும்.

3. நண்பர் வட்டத்தின் தாக்கம்
பிள்ளைகள் வளர்ந்து இளமைக் காலத்தை அடையும்போது நண்பர்களின் தாக்கம் அதிகமாக இருக்கும். தவறான நண்பர்கள், நண்பர்களின் அழுத்தம், "துணிச்சல்" என்ற பெயரில் தவறுகளைச் சாதாரணமாகக் காட்டுதல் போன்றவை சிறிய தவறுகளைப் பெரிய குற்றங்களாக மாற்றக்கூடும்.

4. சமூக மற்றும் ஊடக தாக்கம்
இன்றைய காலத்தில் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் பிள்ளைகளின், இளைஞர்களின் எண்ணங்களை வடிவமைக்கின்றன. வன்முறை நிறைந்த திரைப்படங்கள், வீடியோ விளையாட்டுகள், சமூக ஊடகங்களில் தவறான முன்மாதிரிகள், குற்றங்களை பெருமைப் படுத்தும் உள்ளடக்கங்கள் இளைஞர்களின் மனநிலை–யை பாதிக்கக்கூடும்.

5. உளவியல் காரணங்கள்
மன அழுத்தம், தாழ்வுணர்வ, கோபக் கட்டுப்பாடு இல்லாமை, கவன ஈர்ப்பு தேவை, பிரச்சினை தீர்க்கும் திறன் இன்மை, மனநலம் தொடர்பான சிக்கல்கள் போன்ற உளவியல் காரணிகளும் குற்றச் செயல்களுக்கு வழிவகுக்கலாம் சரியான ஆலோசனை கிடைக்கவில்லையெனில் இவ்வாறான பிரச்சினைகள் தீவிரமடையலாம்.

6. கல்வி மற்றும் பொருளாதார காரணங்கள்
படிப்பில் தோல்வி உணர்வு, கல்வ–ியில் அக்கறையின்மை, முறையற்ற தண்டனைகள், அங்கீகாரம் மற்றும் பாராட்டு இல்லாமை ஆகியவை மாண–வர்களை மன அழுத்தத்திற்குள் தள்ளலாம். அதேபோல், வறுமை, பணத் தேவைகள், குடும்பச் சுமைகள் ஆகிய பொருளாதார காரணிகளும் தவறான நடத்தைகளை பின்பற்றவும், பிழையான வழிகளில் பணம் சம்பாதிக்கவும் முயற்சிக்கத் தூண்டலாம்.

இந்த உண்மையை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.
எல்லா சந்தர்ப்பங்களிலும் கட்டிளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் "குற்றவாளிகள்" அல்லர் அவர்கள் சரியான வழிகாட்டல் கிடைக்காததால் தவறான பாதையில் செல்பவர்களாக இருக்கலாம். அவர்களை தண்டிப்பதும், குற்றம் சாட்டுவ–தும் மட்டும் தீர்வாகாது.

பெற்றோர் – ஆசிரியர் இணைப்பை வலுப்படுத்துதல், நல்ல முன்மாதிரிகளை முன்வைத்தல், நடத்தைப் பிரச்சினைகள் உள்ள இளைஞர், யுவதிகளை அடையாளம் கண்டு மனநல ஆலோசனைகளை வழங்குதல், அவர்களின் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புகளை உருவாக்குதல் போன்ற முறைகள் மூலம் அவர்களை வழிகாட்டி வளப்படுத்த முடியும்.
இளைஞர்களை தண்டிப்பதை விட, அவர்களைப் புரிந்து கொண்டு சரியான பாதையில் வழிநடத்துவது சமூகத்தின் உயர்ந்த கடமையாகும். குற்றம் சாட்டிக் கொண்டிருப்பதனால் எந்த மாற்றமும் உருவாகாது. அதற்கு பதிலாக, சமூகத்தில் உள்ள அனைவரும்.. பெற்றோர், ஆசிரியர்கள், சமூக அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசியல், கல்வி சார்ந்த அனைத்து சமூக நிறுவனங்களும் ஒன்றிணைந்து இளைஞர்கள், பாடசாலை மாணவர்களின் நல்வாழ்வை நோக்கமாகக் கொண்ட வழிகாட்டல் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும்.
இளைஞர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் சரியான நேரத்தில் வழங்கப்படும் அன்பும் ஆதரவும் அவர்களின் வாழ்க்கையை மாற்றக்கூடிய அபாரமான சக்தி கொண்டவை. ஒரு அன்பான வார்த்தை, ஒரு உண்மையான பாராட்டு, ஒரு சரியான ஆலோசனை போன்ற அனைத்தும் ஒரு இளைஞனின் எதிர்காலத்தை ஒளிரச் செய்யும்.
பாடசாலையில் கல்வி கற்கும் பருவத்திலேயே பிள்ளைகளை சமூகத்துக்கு பொருத்தமான, பொறுப்புணர்வும் நற்பண்பும் கொண்ட தரமான மனிதர்களாக உருவாக்குவது நமது ஒட்டுமொத்த பொறுப்பாகும். இதை நிறைவேற்ற நாம் அனைவரும் கைகோர்த்து செயல்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.
ஒற்றுமை, அக்கறை, வழிகாட்டல், இம்மூன்றும் இணைந்தாலே இளைஞர்கள் சமூகத்தின் பலமாக மாறுவர். குற்றங்களில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொண்ட நல்லவர்களாக ஆகுவர்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

## மிகிந்தளை சோளச் செய்கை திட்டத்தை ஆய்வு செய்த வடமத்திய விவசாய அதிகாரிகள்



வடமத்திய மாகாண விவசாய திணைக்களத்தின் வழிகாட்டுதல் மற்றும் மிஹிந்தலை. விவசாய விரிவாக்க அலுவலகத்தின் தொழில்நுட்ப உதவியுடன் மிஹிந்தலை கிரிமதியகம பகுதியில் மிகவும் வெற்றிகரமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறுபோக சோளச் செய்கை திட்டத்தை வடமத்திய மாகாண விவசாய திணைக்கள பணிப்பாளர் ஹரிதா நிமலநந்த உள்ளிட்ட குழுவினர் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த போது பிடிக்கப்பட்ட படம்.

(படம் :- எம்.ரீ. ஆரிப் அநுராதபுரம் )



வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாசவின் எண்ணக் கருவிற்கமைய சிறந்த சுகாதார பழக்கவழக்கங்களை பின்பற்றி ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ்வதற்காக சுகாதார பாதுகாப்பு பிரிவு சுகாதார அமைச்சின் அலுவலக வளாகத்தில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம்.

(படம்:- எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம் )

## அரபாவுக்கு உரமூட்டிய செய்னுதீன் ஆசிரியர்



அரபாவின் ஆணிவேர்கள்
க/தெனு. அரபா முஸ்லிம் மத்திய வித்தியாலயம் - கண்டி உடுநுவரை வஹூங்கொஹ மண்ணின் இதயத்துடிப்பு.
அந்த கல்விக்கூடத்தின் ஆணி வேர்களில் ஒன்றாக ஆழமாகப் பதிந்திருந்தவர், 14.05.2026 அன்று தனது 86 வயதில் இறைஅழைப்பை ஏற்றுக்கொண்டமதிப்பிற்குரிய அன்பாசான் செய்னுதீன் ஆசிரியர் அவர்கள்.
அவரின் குணநலன்களும் நடத்தை களும் அழகானவை.
துணிவும் தொழில்தூய்மையும் நேர்மையும் ஒருங்கே சேர்ந்து வாழ்ந்தவர்.
ஒரு ஆசிரியராக மட்டும் அல்லாமல், ஒரு தலைமுறையின் மனச்சித்திரத்தில் ஒழுக்கத்தின் ஓவியம் வரைந்தவர்.
ஒரு பாடசாலையின் சுவர்களை கட்டுவது கற்களாலும் சிமெண்டாலும் இருக்கலாம். ஆனால் அதன் ஆன்மாவை கட்டுவது சில மனிதர்களால்தான்.
அப்படிப்பட்ட அரிய மனிதர்களில் ஒருவர் செய்னுதீன் ஆசிரியர் அவர்கள்.
அரபா வித்தியாலயம் என்ற மரம் செழித்து வளர தன் உழைப்பை பசளையாகப் போட்டவர். தன் வியர்வையை நீராக ஊற்றியவர்.
தன் அர்ப்பணிப்பை வேலியாக்கி அதற்கு பாதுகாப்பாய் நின்றவர்.
இரண்டு தசாப்தங்களாக இந்த கல்விக்கூடத்தின் ஒளியாக விளங்கியவர்.
அவர் வெறும் ஆசிரியர் அல்ல அமைதியாக ஒரு தலைமுறையை வடிவமைத்த சிற்பி.
கையை பிரம்பாக்கியதால் அல்ல, இதயத்தில் ஒழுக்கம் இருந்ததால் தான் எங்களை நெறிப்படுத்தினார்.
பிரம்பின்றியே அடக்கத்தை கற்றுத்தந்தார். அச்சமின்றியே மரியாதையை விதைத்தார்.
கட்டளையின்றியே பண்பாட்டுடன் வாழக் கற்றுத்தந்தார்.
அவர் எங்களிடம் ஆட்சி செய்தவர் அல்ல. ஆனால் அடக்குமுறை இல்லாத ஒரு அரசனாய் எங்கள் மனங்களில் அரியணை ஏறியவர்.
அவரின் பார்வை போதும் தவறைத் திருத்த, அவரின் சிரிப்பு போதும் மனதை நிமிர்த்த.
மாணவர்களாக இருந்தபோது எங்கள் விரல்களைப் பிடித்து எழுத்து கற்றுத்தந்தவர்.
வாழ்க்கைக்குள் நுழைந்தபோது எங்கள் தோளில் கை வைத்து நம்பிக்கையோடு நடக்கக் கற்றுத் தந்தவர்.
"நேரம் மனிதனை உயர்த்தும், அதை மதிக்கக் கற்றுக்கொள்" என்று நேரத்தின் அருமையை நமக்குள் விதைத்தவர்.
இன்று அவரின் மறைவுச் செய்தி பல இதயங்களை நனைக்கிறது.
ஆனால் அவர் விதைத்த விதைகள் இன்னும் உயிரோடு உள்ளன.
அவர் உருவாக்கிய மாணவர்கள் இன்று சமூகத்தின் பல துறைகளில் உயர்ந்து நிற்பது அவரின் உழைப்புக்கான உயிருள்ள சாட்சியாகும்.
செய்னுதீன் சர்..' என்று அன்பாக அழைக்கப்பட்டவர்.. அவர் வெறும் உடலுடன் இறைவனிடம் செல்ல வில்லை.
அவரின் வழிகாட்டுதலில் வளர்ந்த எண்ணற்ற மாணவர்களின் துஆக்களையும், நன்றியையும், நினைவுகளையும் சுமந்தபடி சென்றுவிட்டார்.
அரபாவின் வரலாறு எழுதப்படும் ஒவ்வொரு பக்கத்திலும் அவரின் பெயர் மையால் எழுதப்படாது.
மாணவர்களின் நன்றியாலும், பிரார்த்தனைகளாலும் எழுதப்படும்.
நாங்கள் கற்ற ஆசான்களை நினைவுகூரும் போதெல்லாம் அவரின் நினைவு ஒரு ஒளிக்கீற்றாய் எங்கள் உள்ளங்களில் என்றும் மலர்ந்துகொண்டே இருக்கும்.
அவரிடம் கற்ற பல கிராமத்து மாணவர்கள், அவர்களது பெற்றோர்கள், வஹூங்கொஹ, தவுலகலை, மாஹிங்கொட கிராமத்தின் மக்கள் அனைவரும் இன்று நன்றியுணர்வோடு அவருக்காக இருகரம் ஏந்திப் பிரார்த்திக்கிறோம்.

யா அல்லாஹ்!
இந்த அழகிய மனிதரின் தவறுகளை மன்னித்து, அவரின் கப்ரை ஒளியால் நிரப்பி, சுவனத்தின் உயர்ந்த இடங்களில் அவரை குடியமர்த்துவாயாக.

அஸ்ஹர் அன்ஸார்
மனோத்துவ ஆலோசனை நிபுணர்
(அவர் உருவாக்கிய மாணவர்களில் ஒருவன்)

# லங்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் திருவிழா ஜூலை 17இல் ஆரம்பம்



அரபாத் பஹர்தீன்

2026 ஆம் ஆண்டுக்கான லங்கா பிரீமியர் லீக் (டூடு) போட்டித் தொடர் எதிர்வரும் ஜூலை மாதம் 17ஆம் திகதி அதிகாரப்பூர்வமாக ஆரம்பமாகிறது. இதன் தொடக்கப் போட்டியில், கடந்த 2024ஆம் ஆண்டின் நடப்புச் சம்பியன்களான ஜப்னா அணியும், இரண்டாம் இடம் பெற்ற காலி அணியும் மோதவுள்ளன. இப் போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் இரவு ஒளியில் நடைபெறவுள்ளது.

இவ்வருட ரி20 உலகக் கிண்ண தொடருகக் காக கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானம் பல மில்லியன் ரூபாய்கள் செலவில் ஒளியூட்டப் பட்டு தனது முதல் சர்வதேச ரி20 போட்டியை நடத்திய மைதானமாகும். அம் மைதானத்திலே எல்.பி.எல் தொடரின் முதல் போட்டி இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன், அதற்கு முன் 2026 சீசனை அறிமுகப்படுத்தும் அதிகாரப் பூர்வ தொடக்க விழாவும் நடைபெறும்.

இறுதியாக உறுதிசெய்யப்பட்ட அட்டவணைப்படி, தொடர் ஜூலை 17 முதல் ஆகஸ்ட் 8 வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் போட்டி ஜூலை 10ஆம் திகதி அன்று தொடங்கும் என அறிவிக்கப்பட்டிருந்தாலும், பின்னர் அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டு நான்கு சர்வதேச மைதானங்களில் போட்டிகள் நடத்த முடிவு செய்யப்பட்டது.

அதற்கமைய கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் ஜூலை 17ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை மொத்தம் ஐந்து போட்டிகள் நடைபெறும்.

அதன் பின்னர் போட்டிகள் தம்புள்ளை ரிங்கிரி மைதானத்திலும், கண்டி பல்லேகலே மைதானத்தில் உம் இடம்பெறவுள்ளன. பின்னர் எல்.பி.எல் தொடரின் இறுதிக்கட்டப் போட்டிகள் மற்றும் இறுதிப் போட்டிகள் கொழும்பிலுள்ள ஆர். பிரேமதாச மைதானத்தில் இடம்பெரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக இறுதிப் போட்டி மழை போன்ற காரணங்களால் தடைப்பட்டால் மாற்று நாளாக ஆகஸ்ட் 9ஆம் திகதி அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

2026 டூடு தொடரில் யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, காலி மற்றும் தம்புள்ளை ஆகிய பகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து அணிகள் பங்கேற்கின்றன. எனினும், அதிகாரப்பூர்வ அணிப் பெயர்களும் நிறுவன உரிமையாளர்களின் விவரங்களும் இன்னும் முழுமையாக அறிவிக்கப்படவில்லை. போட்டி தொடங்குவதற்கு முன்பாக இலங்கை கிரிக்கெட் இறுதி அணிப் பெயர்களையும் அனுசரணை யாளர்களின் விவரங்களையும் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**போட்டி அட்டவணை பின்வருமாறு:**

* ஜூலை 17  19 : தொடக்கப் போட்டி மற்றும் கொழும்பு சுற்று (SSC மைதானம், கொழும்பு)
* ஜூலை 21 – 26 : தம்புள்ளை சுற்று (RDICS)
* ஜூலை 28 – ஆகஸ்ட் 2 : கண்டி சுற்று (ஐஊளுு, பல்லேகலை)
* ஆகஸ்ட் 5 மற்றும் 7 : தகுதிச் சுற்றுகள் மற்றும் நுடைஅயையெவழச (RPICS, கொழும்பு)
* ஆகஸ்ட் 8 : மாபெரும் இறுதிப் போட்டி (RPICS, கொழும்பு)
* ஆகஸ்ட் 9 : ஒதுக்கப்பட்ட மாற்று நாள்

இதற்கிடையில், வீரர்கள் பதிவு செய்யும் இணையத்தளம் மே 8ஆம் திகதி திறக்கப்பட்டு, மே 20ஆம் திகதி நிறைவுக்கு வரவுள்ளது. அதற்கமைய நேரடி ஒப்பந்தங்கள் மே 22 வரை மேற்கொள்ளப்படலாம் என்றாலும், அனைத்து பிரிவுகளுக்குமான வீரர் பதிவு கடைசி நாள் மே 20ஆம் திகதி ஆகும்.

முன்னைய இரண்டு சீசன்களில் ஏல முறை பயன்படுத்தப்பட்ட நிலையில், இம்முறை ஜூன் 1ஆம் திகதி நடைபெறும் "டிராஃப்ட்" முறை மீண்டும் அறிமுகப்படுத்தப்படுகிறது.

இந்த மாற்றத்தினால், முந்தைய சீசன்களில் இருந்த எந்த வீரரையும் அணிகள் தக்கவைத்துக் கொள்ள முடியாது. இதனால் அணிக் கட்டமைப்புகளில் பெரிய மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் ஒவ்வொரு அணியிலும் குறைந்தது 18 வீரர்கள் இருக்க வேண்டும். மேலும் இரண்டு உள்ளூர் வீரர்களை சேர்க்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், ஒரு அணியின் அதிகபட்ச வீரர்கள் எண்ணிக்கை 20 ஆக இருக்கும்.

உள்ளூர் இளம் வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கும் நோக்கில், ஒவ்வொரு அணியிலும் 23 வயதுக்குட்பட்ட இரண்டு உள்ளூர் "Emerging" வீரர்கள் கட்டாயமாக இருக்க




வேண்டும் என இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. அதில் குறைந்தது ஒருவர் அணியின் ஆரம்ப 11 பேரில் இடம்பெற வேண்டும் என்ற கட்டளையும் பிறப்பித்துள்ளது. அதேசமயம், ஒவ்வொரு போட்டியிலும் நான்கு வெளிநாட்டு வீரர்கள் இடம்பெறவேண்டும்.

அத்துடன் ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட வீரர் பதிவு வழிகாட்டுதலில், "Icon" மற்றும் "Star" பிரிவில் பதிவு செய்யும் வீரர்கள் குறைந்தது 250,000 சமூக ஊடக பின்தொடர்பாளர்கள் கொண்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனை இடம்பெற்றிருந்தது. இது சமூக ஊடகங்களில் சர்ச்சையை ஏற்படுத்தியது. பின்னர் இலங்கை கிரிக்கெட் அந்த நிபந்தனையை நீக்கியுள்ளது. மேலும், வீரர்கள் ஊடக மற்றும் ரசிகர் தொடர்புகளில் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்பதற்காகவும் எல்.பி.எல் முக்கியத்துவம் அளித்துள்ளது. ஊடக மற்றும் ரசிகர் நிகழ்வுகளில் பங்கேற்க தவறினால், போட்டிக் கட்டணத்தில் 5மூ முதல் 50மூ வரை அபராதம் விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை எதிர் இந்திய டெஸ்ட் தொடர் எதிர்வரும் ஓகஸ்டில்?



இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடத்தப்படவுள்ளது.

இரு நாட்டு கிரிக்கெட் உள்வட்டாரத் தகவல்களை மேற்கோள்காட்டி 'Cricbuzz' இணையதளம் வெளியிட்டுள்ள செய்தியில், ஓகஸ்ட் 15 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை இப்போட்டிகள் நடைபெறக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், போட்டிகள் நடைபெறும் திகதிகள் குறித்து இதுவரை இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்த டெஸ்ட் போட்டிகள் உலக டெஸ்ட் செம்பியன்ஷிப் தொடரின் கீழ் நடத்தப்படவுள்ளன. எவ்வாறாயினும், இரு நாடுகளுக்கும் இடையே நடத்தப்படவிருக்கும் இருபதுக்கு 20 போட்டிகள் குறித்து இதுவரை எந்தவொரு இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கோட்டமட்ட மெய்வல்லுனர் போட்டியில் வரலாறு படைத்த சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் வித்தியாலயம்




(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான கோட்டமட்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் சாய்ந்தமருது லீடர் எம்.எச். எம்.அஸ்ரப் வித்தியாலய மாணவர்கள் சிறப்பான திறமைகளை வெளிப்படுத்தி மொத்தமாக 44 வெற்றியிடங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

வருடாந்தம் கோட்ட, வலய மற்றும் மாகாண மட்டங்களில் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றிகளைப் பெற்று வரும் இப்பாடசாலை, இம்முறையும் தனது விளையாட்டு ஆற்றலை உறுதிப்படுத்தியுள்ளது.

இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் அடுத்த கட்டமான வலய மட்ட மெய்வல்லுனர் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

மாணவர்களின் இவ்வெற்றி பாடசாலை சமூகத்தினரிடையே மகிழ்ச்சியையும் பெருமையையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு சாதனை புரிந்த மாணவர்களுக்கு பாடசாலை நிர்வாகம், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மாணவர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்கி வழிநடத்திய பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் எம்.எப்.எம். றிபாஸ் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் என்.எம்.எ. ஆபாக் ஆகியோருக்கும் பாடசாலை சமூகம் சார்பில் பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

# லங்கா பிரீமியர் லீக் 2026 ஜப்னா கிங்ஸ் அணியின் உரிமத்தை கைப்பற்றியது "Sports Commune"

லங்கா பிரீமியர் லீக் (LPL) தொடரின் 6 ஆவது அத்தியாயம் ஆரம்பமாவதற்கு முன்னதாக, ஜப்னா கிங்ஸ் அணியானது மன்ஜோத் கல்ரா (Manjot Kalra) மற்றும் மயங்க் கோயல் (Mayank Goel) ஆகிய இந்தியாவைச் சேர்ந்த விளையாட்டு தொழில்முனைவோரின் தலைமை யிலான 'ஸ்போர்ட்ஸ் கம்யூன்' (Sports Commune) நிறுவனத்தின் புதிய உரிமையின் கீழ் களமிறங்கும் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய உரிமையானது கிரிக்கெட் அனுபவம், தொழில்முனைவு, இளைஞர் அபிவிருத்தி, டிஜிட்டல் ஊடகம் மற்றும் அடிமட்ட அளவிலான விளையாட்டு ஈடுபாடு ஆகியவற்றை ஒன்றிணைக்கிறது. ஸ்போர்ட்ஸ் கம்யூன் நிறுவனத்தின் ஊடாக, தெற்காசியா முழுவதிலும் உள்ள வீரர்கள், ரசிகர்கள், இளம் விளையாட்டு வீரர்கள் மற்றும் வர்த்தக பங்காளர்களை இணைக்கும் ஒரு பரந்த விளையாட்டு தளத்தை உருவாக்குவதுடன், லங்கா பிறீமியர் லீக்கில் நான்கு தடவைகள் சம்பியனான ஜப்னா கிங்ஸ் அணியை ஒரு வலுவான போட்டித்திறன் மிக்க கிரிக்கெட் அணியாக பலப்படுத்துவதையும் புதிய உரிமையாளர்கள் நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

அதேவேளை, வரவிருக்கும் புதிய பருவ காலத்திற்கு தயாராகும் வகையில், ஜப்னா கிங்ஸ் அணி இலங்கை அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் பானுக ராஜபக்ஷ மற்றும் இளம் சகலதுறை வீரர் துனித் வெல்லாலகே ஆகியோரை முன்கூட்டியே ஒப்பந்தம் செய்துள்ளது. இது அணிக்கு ஒரு வலுவான உள்ளூர் அடித்தளத்தை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்போர்ட்ஸ் கம்யூன் நிறுவனத்தின் இணை நிறுவனர் மன்ஜோத் கல்ரா, டெல்லியை தளமாகக் கொண்ட ஒரு முன்னாள் தொழில் முறை கிரிக்கெட் வீரரும், டிஜிட்டல் உள்ளடக்க உருவாக்குநரும் (Digital creator), போட்காஸ்ட் (Podcast) தொகுப்பாளரும் ஆவார். அவர் தனது 'செக்கண்ட் இன்னிங்ஸ் வித் மன்ஜோத் கல்ரா' (Second Innings with Manjot Kalra) நிகழ்ச்சி ஊடாக கிரிக்கெட் வீரர்கள் மற்றும் விளையாட்டு ஆளுமைகளை இணைத்து, விளையாட்டு உலகக் கதைகளையும் நுண்ணறிவுகளையும் வளர்ந்து வரும் டிஜிட்டல் பார்வையாளர்களிடம் கொண்டு சேர்த்து வருகிறார். மற்றொரு இணை நிறுவனரான மயங்க் கோயல், டிஜிட்டல் பாதுகாப்பு, காப்புறுதி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைகளில் வணிக நிறுவனங்களை நடத்தும் ஒரு வெற்றிகரமான தொழில் முனைவோர் ஆவார்.

இந்த புதிய உரிமையாளர்களை வரவேற்றுப் பேசிய லங்கா பிறீமியர் லீக் தொடரின் பணிப்பாளர் சமந்த தொடங்வெல, "லங்கா பிறீமியர் லீக் 6ஆவது அத்தியாயத்தில் ஜப்னா கிங்ஸ் அணியின் புதிய உரிமையாளர்களாக இணைந்துள்ள 'ஸ்போர்ட்ஸ் கம்யூன்' குழுமத்தை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அன்போடு வரவேற்கிறது. கிரிக்கெட், இளையோர் ஈடுபாடு மற்றும் விளையாட்டு அபிவிருத்தி ஆகியவற்றில் அவர்களது அர்ப்பணிப்பு இந்த லீக் தொடருக்கு மேலும் வலு சேர்க்கிறது." என்று குறிப்பிட்டார்.

இதனிடையே, ஐபிஜி குளோபல் (IPG Global) நிறுவனத்தின் நிறுவனரும், தலைவருமான அனில் மோகன் கருத்துத் தெரிவித்தார்.

# CASA 7s ரக்பி தொடர் சம்பியன் மகுடத்தை தட்டித் தூக்கிய இலங்கை ஆடவர் மற்றும் மகளிர் அணியினர்



உஸ்பெகிஸ்தானின் தஷ்கண்ட் நகரில் நடைபெற்ற மத்திய மற்றும் தெற்காசிய எழுவர் கொண்ட (ஊயுளுயு 7ள) ரக்பி தொடரின் ஆடவர் மற்றும் மகளிர் ஆகிய இரு பிரிவுகளிலும் இலங்கை அணியினர் சம்பியன் மகுடத்தை வெற்றி கொண்டு அசத்தினர். ஆடவர் பிரிவில் விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில், அண்டை நாடான இந்திய அணியை 31: 10 என்ற புள்ளிகள் கணக்கில் மிக எளிதாக வீழ்த்தி இலங்கை வீரர்கள் அபார வெற்றி பெற்றனர்.

போட்டியின் ஆரம்பம் முதலே இந்திய அணிக்குக் கடுமையான சவாலை ஏற்படுத்திய இலங்கை அணி, ஆட்டத்தின் முதல் பாதியிலேயே 14:05 என்ற புள்ளிகள் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதேசமயம் மகளிர் பிரிவின் இறுதிப் போட்டியில், பலம் வாய்ந்த கசகஸ்தான் அணியை 27 : 00 என்ற புள்ளிகள் கணக்கில் வீழ்த்தி இலங்கை வீராங்கனைகள் சம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றனர். ஆட்டம் முழுவதும் தமது முழு ஆதிக்கத்தைச் செலுத்திய இலங்கை அணி, கசகஸ்தான் அணிக்கு ஒரு புள்ளியைக் கூட பெறவிடாமல் தடுத்தமை இப்போட்டியின் சிறப்பம்சமாகும்.